விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

**கல்யாண மாலை**
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 11 திங்கட்கிழமை (24.04.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 126

# தமிழர்கள் ஒருபோதும் அடிபணியப் போவதில்லை

## த.ம.பேரவை கூட்டத்தில் விக்னேஸ்வரன் உரை



(திருகோணமலை)

தமிழர்களை அடிமைப்படுத்தும் விதத்தில் சிங்கள மக்கள் நடந்து கொண்டால் தமிழர்கள் அடிபணியப் போவதில்லை. போராடத்தான் முனைவார்கள் எனத் தெரிவித்த தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரும் வட மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன், தமிழர்களின் பாரம்பரியம் போராடுவதை ஒரு பொருட்டாக கருதவில்லை. ஆனால் அடிபணிய வைப்பதை எம்மக்கள் விரும்ப மாட்டார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

## வடமராட்சியில் 67 பேருக்கு டெங்கு பாதிப்பு

(கரணவாய்)

வடமராட்சியில் டெங்கின் தாக்கத்துக்கு உள்ளான 67 பேருக்கு மேற்பட்டோர் இனங் காணப்பட்டுள்ளதாக கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி எஸ். சுதோஸ்குமார் தெரிவித்தார்.

24ஆம் பக்கம் பார்க்க....

## மனைவியை வெட்டி கொன்ற கணவன்

(அத்திடிய)

கல்கிசை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அத்திடிய பகுதியில் பெண்ணொருவர் கணவனால் தலையில் வெட்டப்பட்டு கொடூரமாக படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ள

24ஆம் பக்கம் பார்க்க....

## போலி நாணயத்தாள் நபரொருவர் கைது

(பிலிலை)

போலி ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்கள் ஐந்துடன் நபரொருவரை பிலிலைப் பொலிஸார் நேற்றுமுன் தினம்.மாலை கைது செய்துள்ளனர்.

24ஆம் பக்கம் பார்க்க....

## எரிபொருள் பற்றாக்குறை நிலவும் அபாயம்

(கொழும்பு)

பெற்றோலிய வர்த்தக சங்கம் நேற்று நள்ளிரவு தொடக்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தில் குதித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

திருகோணமலை துறைமுகத்திலுள்ள எண்ணெய்த்

24ஆம் பக்கம் பார்க்க....

## உஷ்ணமான காலநிலை

(கொழும்பு)

நாடடில் நிலவும் உஷ்ணமான காலநிலை அடுத்த மாதம் இரண்டாம் திகதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

24ஆம் பக்கம் பார்க்க....

## கைக்குண்டு அவதானிப்பு

(வவுனியா)

வவுனியா சாந்தசோலை பகுதியில் நேற்று சக்திமிக்க கைக்குண்டு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வவுனியா சாந்தசோலை

24ஆம் பக்கம் பார்க்க....

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள்

## 63-வது நாளாக தவிப்பு



24ஆம் பக்கம் பார்க்க....

## கிளிநொச்சி, வவுனியாவில் 27ஆம் திகதி ஹர்த்தால்!

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அழைப்பு

(மல்லாவி)

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும் விடுவிப்பையும் வலியுறுத்தி எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை கிளிநொச்சியிலும் வவுனியாவிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மற்றும் வவுனியா மாவட்டங்களின் காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



04ஆம் பக்கம் பார்க்க....

இந்தியாவிலிருந்து 511 கிலோ

## சந்தன மரக்குற்றிகளை கடத்தி வந்தவர் கைது

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து சந்தன மரக்குற்றிகளை கடத்தி வந்த ஒருவர் நேற்று கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடல் மார்க்கமாக 511 கிலோ கிராம் நிறையான பெறுமதியான சிவப்பு சந்தன மரக்குற்றிகளை கடத்தி வந்தபோதே அவர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமையவே இந்த கடத்தல் நடவடிக்கை இலங்கை கடற்பரப்பில் முறியடிக்கப்பட்டுள்ளது.

கடத்தலுக்காக பயன்படுத்

24ஆம் பக்கம் பார்க்க....

கிழக்கில் பரிதவிக்கும் உறவுகளை

## வடக்கின் முதலமைச்சர் நேரில் சந்தித்து ஆறுதல்



23ஆம் பக்கம் பார்க்க....

## 18 பேருக்கு மலேரியா

(கொழும்பு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வந்த, மலேரியா தொற்றாளர்கள் 18 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதாக மலேரியா தடுப்பு பிரிவின் பணிப்பாளர் எச்.டி. வி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க....

காணி விடுவிப்பு

## உயர்மட்டத்தில் இன்று பேச்சு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் முப்படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிப்பு தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இன்று சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் பாது

04ஆம் பக்கம் பார்க்க....

## மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கி வலுச் சேர்த்தல்

### தமிழ் மக்கள் பேரவை தீர்மானம்



(திருகோணமலை)

காணாமல் போனவர்களின் உறவுகள் மற்றும் நில மீட்புத் தொடர்பில் தமிழ் மக்கள் நடத்துகின்ற போராட்டத்திற்கு பூரண ஆதரவு வழங்குவதென தமிழ் மக்கள் பேரவை நேற்று தீர்மானம் நிறைவேற்றியது.

தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தொடர் நேற்றையதினம் திருகோணமலை

24ஆம் பக்கம் பார்க்க....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்

## சைவசித்தாந்த பண்டிதர் சிவாகம உபதேச வாசஸ்பதி சிவாகம வித்யா பூஷணம்

## சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள் அவர்கள்

(நெல்லண்டை அம்மன், வீரமாகாளி அம்மன். வடபத்திரகாளியம்மன் ஆதீனகர்த்தா)



மங்கலம் சேர் செந்தமிழை ஆய்ந்து கற்றாய்
மாண்புடைய வடமொழியாம் கலைஞானத்தால்
வீங்கு புகழ் வல்லுனனென்று-உலகம் ஏத்தும்
வித்தகனாம் சோமையா நல்லோய் வாழி
நீங்கரிய நற்குணமே பண்பாய் கொண்டாய்
நாமெல்லாம் செய்ந்நன்றி மறப்போமல்லோம்
பாங்குடைய பத்திரகாளி தாள் பணிகின்றோம்
-உன்நாமம்
வாழி! நீ பல்லாண்டு வாழி!

**வாழ்த்துவோர்:**
சிவத்திரு தம்பு இராமச்சந்திரன்
(வில்வளை ஸ்ரீ மகா பிரத்தியங்கலா காளி தேவஸ்தானம்)
நெல்லண்டை இலட்சுமணன் தோட்டம் வீர மாகாளி அம்மன் தேவஸ்தானம்)
நெல்லண்டை பத்திரகாளி அம்மன் தேவஸ்தானம்
0776202716

(C-8202)


# திறப்பு விழா

(கரணவாய்)

மணற்காடு றோ.க.த.க. பாடசாலை புதிய கட்டடம் யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின்.பி.ஞானப்பிரகாசம் அவர்களால் திறந்து வைக்கப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பாடசாலை அதிபர் சோ.வாகீசன் தலைமையில் நடைபெறும் இத் திறப்புவிழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.மறைமாவட்ட ஆயர் கலாநிதி ஜஸ்ரின்.பி.ஞானப்பிரகாசம், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை மறைக் கோட்ட முதல்வர் அ.யாவீஸ் அடிகளார், மணற்காட்டு பங்குதந்தை டியூக் வின்சன் அடிகளார், மாகாண சபை உறுப்பினர்களான ச.சுகிர்தன், வே.சிவயோகன், க.தர்மலிங்கம் மற்றும் வடமாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன், வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.புஸ்பலிங்கம், மருதங்கேணி கோட்டக்கல்விப்பணிப்பாளர் ச.திரவியராசா, கௌரவ விருந்தினர்களாக சிவன் அறக்கட்டளை நிதிய நிறுவுனர் வே.கணேஸ்வரன், தொழிலதிபர் ந.பாஸ்கரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (செ-60)

# நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் மணிவாசக சபையின் ஸ்தாபகர் கலாநிதி பண்டிதமணி சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்களின் நினைவு தின நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மணிவாசக மண்டபத்தில் இடம்பெறும். (இ-3)

# மரண அறிவித்தல்

## திருமதி மாரிமுத்து பத்மினி



தவசிகுளம், கொடிகாமம்.

மாவை கலட்டியை பிறப்பிடமாகவும் தவசிகுளம் கொடிகாமத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாரிமுத்து பத்மினி அவர்கள் (23.04.2017) நேற்று ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மாரிமுத்துவின் அன்பு மனைவியும், புனிதராணி, சிவகுமார் (ஆசிரியர் உசன் இராமநாதன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராசா (பாதுகாப்பு உத்தியோகத்தர், மக்கள் வங்கி), சத்தியநாயகி (ஆசிரியர், போக்கட்டி அ.த.க பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஸ்ரீரஞ்சனின் சிறிய தாயாரும், பவீந்திராவின் மாமியாரும், பவிதா, குமரன், கனிஷ்ரன், ஆகாஷ், சுருதி, திவ்வியன், சிவதனுஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரின் இல்லத்தில் நேற்று நடைபெற்று மாலை 4 மணியளவில் ஈச்சங்காடு இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்;-குடும்பத்தினர்.**
**0776315915**

(கி-8201)


மானிப்பாயில்...

# HONDA

## மோட்டார் சைக்கிள் காட்சியறை

## திறப்பு விழா

HONDA

## R.R.S.C மோட்டோர்ஸ்



இன்றைய தினம் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.



நிகழும் மங்கலகரமான ஏவிளம்பி வருடம் சித்திரைமாதம் 11ஆம் நாள் (24.04.2017) இன்று காலை 9.30 - 10.30க்கும் இடையில் உள்ள சுபவேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது.

(C-8250)

**R.R.S.C மோட்டோர்ஸ்,**
**311, யாழ்.வீதி, மானிப்பாய்.**

**Tel : 077 310 7549**
**: 021 225 5228**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரசியல் விழிப்புணர்வுடைய மக்களை எந்த சக்தியாலும் வீழ்த்த முடியாது

## திருமலையில் நடந்த தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் இணைத் தலைவர் வைத்திய நிபுணர் லக்ஷ்மன் சுட்டிக்காட்டு

(திருமலை)

போரின் மூலகாரணத்திற்கு தீர்வுகாணும் முயற்சிக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக் கூறும் செயன்முறைக்கும் பண்டமாற்றாகக் கருதச் செய்யும் முயற்சிகளும் நடந்தேறி வருகின்றன. சூழ்ச்சிகள் மிகுந்த இந்தக் காலப்பகுதியில் அரசியல் ரீதியாக மக்களை விழிப்பூட்டல் செய்து ஒன்றுதிரட்ட வேண்டியது மக்கள் இயக்கம் எனும் இலக்குடன் இயங்குகிற தமிழ் மக்கள் பேரவையின் பொறுப்பாகும் எனவும் அரசியல் விழிப்புணர்வு கொண்ட மக்களை எந்த சக்தியாலும் வீழ்த்தவோ ஏமாற்றவோ முடியாது எனவும் தமிழ் மக்கள் பேரவையின் இணைத் தலைவரும் இருதய வைத்திய நிபுணருமான பூ.லக்ஷ்மன் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ் மக்கள் பேரவையின் விசேட கூட்டம் நேற்றுக் காலை திருகோணமலை நகர மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த விசேட கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

தமிழர்களின் வரலாற்று ரீதியானதாயகநிலத்தின் தலைமை நகரமானதும் இந்து சமுத்திரத்தின் பூகோள அரசியற் போட்டியின் ஒரு கேந்திர முக்கியத்துவம் உடைய ஒரு மையப் புள்ளியாகவும் அமைந்தது மான திருகோணமலை நகரில் நடக்கும் தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தில் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்வடைகிறேன்.

தமிழ் மக்கள் பேரவையானது தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைகளையும் அடக்குமுறைகளின் விளைவாக எழுந்துள்ள எமது அன்றாடப் பிரச்சினைகளையும் வடக்கிலும் கிழக்கிலும் எழுக தமிழ் எனும் ஜனநாயக மக்கள் எழுச்சி மூலம் உலகிற்கு வெளிப்படுத்தியிருந்தது. எமது அடிப்படை அரசியல் அபிலாசைகளும்அடக்குமுறையின் விளைவான அன்றாடப்பிரச்சினைகளும்எம்தாயக மக்கள் அனைவருக்கும் பொதுவானதே என்பதையும் இதில் எந்தவித பிரதேச வேறுபாடுகளும்இல்லைஎன்பதையும்வடக்கிலும் கிழக்கிலும் எழுச்சியுடன் திரண்டு வந்திருந்த எமது மக்கள் மிகத்தெளிவாக வெளிப்படுத்தியிருந்தார்கள்.

குறிப்பாக பிரித்தாளும் சூழ்ச்சிகள் மூலம்எம்மை துண்டாட நினைப்பவர்களுக்கு இது நல்ல பதிலாகவும் அமைந்திருந்தது. இந்த மக்கள் எழுச்சிக்காகவும் அரசியல் விழிப்புணர்வுக்காகவும் இலட்சியத்தின் பாற்பட்ட மக்கள் திரள்வுக்காகவும் எம் தாயகத்தின் வீதிகள் தோறும் நடந்து உழைத்த அனைவரது கரங்களையும் நாம் மீண்டும் பெருமிதத்துடன் பற்றிக்கொள்கிறோம். எனினும் மக்களை நோக்கிய எமது செயற்பாடுகள் இன்னமும் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்பதே இன்றுள்ள அவசர மான தேவையாகும் என நான் கருதுகின்றேன் . போலி வார்த்தை ஜால அரசியல் மூலமும் காலம் கடத்தல் மூலம் எமது நியாயமான அரசியல் கோரிக்கைகளை நீர்த்துப் போகச் செய்யும் கபட நோக்குகளுடனும்அபிவிருத்திஎனும் போர்வையில் தமிழ்த் தேசிய அரசியலை திசை மாற்றும் முயற்சியிலும் தற்போது பலமான முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தோடு எமது சமூகத்தின் தீர்க்கப்படவேண்டிய முரண்பாடுகளை தூண்டிஎரியவிடும்நோக்குடனும் அவற்றின் மூலம் எமது மக்களை பிரித்தாளுகின்ற செயற்றிட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன. தெரிந்தோ தெரியாமலோ எம் மக்களில் சிலரும் துரதிர்ஷ்டவசமாக இதற்கு துணை போகின்றனர். இதைவிட மோசமான ஆபத்தாக போரின் விளைவால் ஏற்பட்ட பிரச்சினைகளை தீர்க்கும் ஒரு அவசியமான மனிதாபிமான செயற்பாடுகளை போரின் மூலகாரணத்திற்கு தீர்வுகாணும் முயற்சிக்கும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு பொறுப்புக்கூறும் செயன்முறைக்கும் பண்டமாற்றாக கருதச் செய்யும் முயற்சிகளும் நடந்தேறி வருகின்றன. சூழ்ச்சிகள் மிகுந்த இந்தக் காலப்பகுதியில் அரசியல் ரீதியாக மக்களை விழிப்பூட்டல் செய்து ஒன்றுதிரட்ட வேண்டியது மக்கள் இயக்கம் எனும் இலக்குடன் இயங்குகிற எமது பொறுப்பாகும். அரசியல் விழிப்புணர்வு கொண்ட மக்களை எந்த சக்திகளாலும் வீழ்த்தவோ ஏமாற்றவோ முடியாது.




எனவே இனத்தின் நன்மை கருதி அரசியல் தொலை நோக்குடன் கொள்கையின் பாற்பட்டு ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு முக்கியத்துவம் மிகுந்த இந்த மண்ணில் வைத்து அனைவருக்கும் மீண்டும் அழைப்பு விடுக்கின்றேன். எம்மிடையேயான அனைத்துவித பேதங்களையும்களைந்து தேர்தல் மைய அரசியலைத்தாண்டி இனத்தின் நலன் கருதி அனைவரும் கொள்கையின் வழி ஒன்றுபட்டு செயற்பட முன்வருமாறு தமிழ் மக்கள் பேரவை சார்பில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளையும் பொது அமைப்புக்களையும் தொழிற்சங்கங்களையும் வேண்டுகிறேன்.

கொள்கை வழிப்பட்டு ஒன்றிணைந்த சுயலாப நோக்கற்ற இலக்கில் தெளிவு கொண்ட மக்களின் போராட்டங்கள் ஒரு போதும் தோற்பதில்லை என்பதை அண்மைக்காலமாக எமது மக்களே தமது நில மீட்புப்போராட்டங்களினூடுவெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

எந்தவொரு சுயலாப நோக்குகளும் அற்று தமக்கு நீதி கேட்டு தன்னெழுச்சியாக மக்களிடமிருந்து எழுந்த மக்களின் விட்டுக்கொடுப்பற்ற போராட்டங்கள் சாதகமான பலன்களை கொடுக்கத் தொடங்கியிருக்கிறது.

அரசியல்தெளிவுடன் எவரிலும் தங்கியிராது மக்களே தமக்கான குரல்களை எழுப்ப முன்வரவேண்டும் என்பதும் மக்கள் மயப்பட்ட போராட்டங்களே எமக்கு சாதகமான பலன்களைதரும்என்பதையும்தமிழ் மக்கள் பேரவை ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்துள்ளது. பலவகைகளிலும் எங்கள் அனைவருக்கும் முன்னுதாரணமாக விளங்கும் இந்த மக்கள் போராட்டங்களுக்கு தாயக மக்கள் அனைவரும் தம்மாலான முறையில் தமது ஆதரவுக்கரங்களை நீட்ட வேண்டும் என நாம் கோருகின்றோம்.

இந்த மண்ணில் வைத்து நாம் இன்னும் சில புரிதல்களையும் வெளிப்படுத்துவது பொருத்தமானது என கருதுகின்றேன்.

தமிழ் தேசிய அரசியலை முன்னெடுத்தல் என்பது இன்று வெறுமனே தமிழர்களுக்கும் இலங்கை அரசுக்கு இடையிலான அரசியல் ஊடாட்டம் என்ற நிலையை தாண்டியுள்ளது.

இலங்கை அரசு மட்டு மல்லாது பல்வேறு தரப்புகளும் இதில் பங்குதாரர்களாக உள்ளார்கள் என்பது வெளிப்படையானது. ஒவ்வொருவரும் தத்தமது நலன்களை மையப்படுத்தியே தமது நிகழ்ச்சி நிரல்களை அமைப்பார்கள் என்பது புரிந்துகொள்ளக்கூடியது.

அதுபோலவே, நாமும் எமது நலன்களை முக்கியத்துவப்படுத்தியே எமது நிகழ்ச்சி நிரலையும் அமைத்துக் கொள்ள வேண்டும். எமது நலன்களை, எமது அரசியல், அபிலாசைகளை முக்கியத்துவப்படுத்துவது அல்லது விட்டுக்கொடுக்காதிருப்பது என்பது, எவரினதும் நலன்களுக்கும் எந்த வகையிலும் எதிரானது அல்ல என்பதையும் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

எமது நலன்களை எமது இருப்பிற்கான அடிப்படை அரசியல் கோரிக்கைகளை உறுதிப்படுத்துகின்ற அனைத்து சக்திகளுடனும் நாம் ஒன்றுபட்டு நகரவே விரும்புகிறோம் என்பதையும் இந்த மண்ணில் இருந்து வெளிப்படுத்த விரும்புகிறோம். இறுதியாக மீண்டும் எமது நோக்கில் உறுதியுடன் கொள்கையின் பாற்பட்ட ஒற்றுமையுடன் செயற்பட முன்வருமாறு மக்கள் நலன் சார்ந்து தமிழ் தேசிய நிலைப்பாட்டுடன் செயற்படும் எமது மண்ணின் அனைத்துக் கட்சிகள், பொது அமைப்புகள், தொழிற்சங்கங்களையும் தமிழ் மக்கள் பேரவை சார்பில் வேண்டிக்கொள்கிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

# சைட்டம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை

## அமைச்சர் கிரியெல்ல தெரிவிப்பு

மாலபே சைட்டம் நிறுவனம் தொடர்பான அரசின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றங்களும் இல்லை என்று உயர்கல்வி அமைச் சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

மாலபே சைட்டம் நிறுவனம் தொடர்பில் அண்மையில் ஜனாதிபதி வழங்கிய தீர்மானங்களை அதே அடிப்படையில் நடைமுறைப் படுத்த தீர்மானித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அரசியல் தேவைகளுக்காக அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் வேலைத் திட்டங்களுக்கு எதிர்ப்பு வெளியிடுவதாக அமைச்சர் குற்றம் சாட்டினார்.

கண்டி பிரதேசத்தில் நேற்று ஊடகவியலாளர் களிடம் கருத்து வெளியிட்ட போதே உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல இவ்வாறு தெரிவித்தார். (இ-7)

# ஸ்ரீ.சு.கவின் மேதின மேடையில் மகிந்த குழுவிலுள்ள எம்.பிக்கள்

## சந்திம தகவல்

(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மேதினக் கூட்டத்துக்கு கூட்டு எதிர்க் கட்சியிலுள்ள முக்கிய எம்.பிக்கள் சிலர் வருகை தரவுள்ளதாக அமைச்சர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கண்டி மேதினக் கூட்டம் தொடர்பில் அவரிடம் வினவியபோதே இதனைக் கூறியுள்ளார்.

இவ்வாறு இணைந்து கொள்ளவுள்ளவர்கள் யார் என்பதை மேதினக் கூட்ட மன்று மேடையில் கண்டு கொள்ளலாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (இ-7)

# பொலிஸ் சீருடையில் விரைவில் மாற்றம்

## பொலிஸ்மா அதிபர் தகவல்



பொலிஸ் சீருடையின் நிறத்தை மாற்றுவதற்கு எதிர் வரும் நாட்களில் நடவடிக்கை எடுக்கப் போவதாக பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

பண்டாரவல. அல்லே பொலிஸ் பகுதிக்குட்பட்ட நாதடுஹின்ன பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கையில்அவர் இதனைத் தெரிவித்தார்.

பொலிஸ் சீருடை என்பது ஒரு ஆபரணம் அல்ல. உலகில் பல நாடுகளில் பொலிஸ் சீருடையாக கடும் நீல நிறம் பயன்படுத்தப்படுவதாகவும் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# களுத்துறை துப்பாக்கிச் சூடு தொடர்பான அறிக்கை தயார்

களுத்துறை பிரதேசத்தில் சிறைச்சாலை பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற் கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை அடுத்த வாரம் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அந்தக் குழுவின் அறிக்கை தற்போது தயாரிக்கப் பட்டுள்ளது

அந்த அறிக்கை இன்று அச்சிடப்பட உள்ளது.

அதன்படி எதிர்வரும் புதன் கிழமை அல்லது வெள்ளிக் கிழமை அந்த அறிக்கை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரிடம் கையளிக்கப்பட உள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 27 ஆம் திகதி களுத்துறை பிரதேசத்தில் சிறைச்சாலை பேருந்து மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் பாதாள உலகக் குழு தலைவனான சமயங் உள்ளிட்ட 7 பேர் கொல்லப்பட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சினால் ரூமி மர்சூக் தலைமையில் மூவரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

அந்தக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சம்பவம் தொடர்பான ஆரம்ப அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதுடன். எதிர்காலத்தில் இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறாதிருப்பதற்கான பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தியது பஞ்சாப்

ராஜ்கோட்டில் நடைபெற்ற ஐ.பி.எல். போட்டியில் 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் குஜராத்தை வீழ்த்தி 3-வது வெற்றியை பெற்றுள்ளது கிங்ஸ் லெவன் பஞ்சாப்.

ஐ.பி.எல். தொடரில் நேற்று இரண்டு போட்டிகள் நடந்தன. ராஜ்கோட்டில் நடைபெற்ற முதல் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கெதிராக குஜராத் லயன்ஸ் அணி நாணயச் சுழற்சியில் வென்று களத்தடுப்பை தேர்வு செய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி அம்லா (65), ஷோன் மார்ஷ் (30), மக்ஸ்வெல் (31), அக்சர் பட்டேல் (34) ஆகியோரின் சிறப்பான ஆட்டத்தால் 20 ஓவரில் 7 விக்கெட் இழப்பிற்கு 188 ஓட்டங்கள் குவித்தது.

குஜராத் அணி சார்பில் பந்து வீச்சில் ரை இரண்டுவிக்கெட்டுக்களும் அகர்வால், நது சிங், ஐடேயா, டுவைன் ஸ்மித் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



189 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் குஜராத் லயன்ஸ் அணியின் மக்கல்லம், ஆரோன் பிஞ்ச் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள். குஜராத் அணிக்கு முதல் ஓவரிலேயே அதிர்ச்சி காத்திருந்தது. மக்கல்லம் 6 ஓட்டங்கள் எடுத்த நிலையில் சந்தீப் ஷர்மா பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து ரெய்னா களம் இறங்கினார். மற்றொரு தொடக்க வீரர் பிஞ்ச் 13 ஓட்டங்களில் வெளியேற, ரெய்னா 32 ஓட்டங்களில் ஆட்டம் இழந்தார்.

70 ஓட்டங்களுக்கு முக்கிய மூன்று விக்கெட்டுக்களை இழந்த குஜராத் அணியால், சரிவில் இருந்து மீள முடியாமல்போனது. தினேஷ் கார்த்திக் மட்டும் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 44 பந்தில் 58 ஓட்டங்கள் சேர்க்க, குஜராத் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 7 விக்கெட் இழப்பிற்கு 162 ஓட்டங்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.



இதனால் பஞ்சாப் அணி 26 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி சார்பில் சந்தீப் ஷர்மா, கரியப்பா, அக்சர் பட்டேல் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்கள்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் ஹசீம் அம்லா தெரிவானார்.

## மோன்டே கார்லோ மாஸ்டர் டென்னிஸ் போபண்ணா - பாப்லோ ஜோடி சம்பியன்



மொனாகோ நாட்டில் நடைபெற்ற மோன்டே கார்லோ மாஸ்டர் டென்னிஸ் தொடரில் ஆண்களுக்கான இரட்டையர் பிரிவில் போபண்ணா ஜோடி சாம்பியன் பட்டம் வென்றது.

மொனாகோ நாட்டில் மோன்டே கார்லோ மாஸ்டர்ஸ் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு இறுதிப் போட்டியில் இந்தியாவின் ரோகன் போபண்ணா - உருகுவேயின் பாப்லோ உடன் இணைந்து ஸ்பெயின் நாட்டின் பெலிசியானோ லோபஸ் - மார்க் லோபஸ் ஜோடியை எதிர்கொண்டது.

சுமார் ஒரு மணி நேரம் 14 நிமிடங்கள் நீடித்த இந்த போட்டியில் 2-1 என போபண்ணா ஜோடி வெற்றி பெற்று சம்பியன் பட்டம் வென்றது. முதல் செட்டை போபண்ணா ஜோடி 6-3 என எளிதில் கைப்பற்றியது. ஆனால், 2-வது செட்டில் ஸ்பெயின் ஜோடி அபாரமாக விளையாடியது. இதனரல் அந்த செட்டை ஸ்பெயின் ஜோடி 6-3 எனக்கைப்பற்றியது.

வெற்றியை நிர்ணயிக்கும் 3-வது செட்டில் இரு ஜோடியும் அபாரமாக விளையாடியது. இறுதியில் 10-4 என போபண்ணா ஜோடி கைப்பற்றி சாம்பியன் பட்டம் வென்றது. இந்த சீசனில் பப்லோவுடன் இணைந்து போபண்ணா பெறும் முதல் சம்பியன் பட்டம் இதுவாகும். ஒட்டுமொத்தமாக 3-வது முறையாக போபண்ணா சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஜீவன் நெடுன்செசியன் உடன் இணைந்து போபண்ணா சென்னை ஓபனில் சம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உழவு இயந்திரத்துடன் மோ.சைக்கிள் விபத்து

### இரு இளைஞர்கள் காயம்

சாவகச்சேரி கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு இளைஞர்கள் படுகாயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மதியம் மோட்டார் சைக்கிளும் உழவுஇயந்திரமும் மோதியதிலேயே விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் காயமடைந்தவர்கள் உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் ஒருவரான மீசாலை தெற்கைச் சேர்ந்த பாலச்சந்திரன் நந்திஸ்வரன் (வயது 20) என்பவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டுள்ளார்.

அல்லாரை தெற்கை சேர்ந்த திரவியநாயகம் சத்தியராஜ்(வயது 22) என்ற மற்றைய இளைஞன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையில் மேற்படி விபத்து தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (செ-89)

## காலி முகத்திடலில் அசௌகரியம்

கூட்டு எதிர்க்கட்சியை அசௌகரியத்திற்கு உள்ளாக்கும் நோக்கிலேயே கூட்டு எதிர்க்கட்சிக்கு மே தினக் கூட்டத்தை நடத்த காலிமுகத்திடல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

கூட்டு எதிர்க்கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் எந்த உடன்பாடுகளும் இல்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

கம்பஹா தெல்கொட பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பாதுகாக்க அனைத்து அர்ப்பணிப்புகளும் மேற்கொள்ளப்படும் என சுதந்திக் கட்சியின் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கட்சிக்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் கட்சியை விட்டு செல்வது பொருத்தமான நடவடிக்கை அல்ல எனவும் அவர் கூறியுள்ளார்.

பசறை பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார். (செ-11)

### கிளிநொச்சி, வவுனியா ...

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத்தின் தலைவி கலாரஞ்சினி தெரிவிக்கையில்,

"காணாமல் ஆக்கப்பட்டவர்களை வெளிப்படுத்தவும், விடுவிக்கவும் வலியுறுத்தி அவர்களது உறவினர்களால் கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்பாக தொடர் போராட்டம் நடத்தப்படுகின்றது. அவர்களுக்கு இதுவரை எந்தவித பதிலும் உரிய தரப்புகளிடம் இருந்து வழங்கப்படவில்லை.

நாங்கள் போராட்டத்தை ஆரம்பித்து இன்று (நேற்று) ஞாயிற்றுக் கிழமையுடன் 63 நாட்களாகின்றன. நாங்கள் அநாதைகள் போன்று வீதியில் போராடி வருகின்றோம். எங்களை அனைவரும் கைவிட்டுள்ளனர். எமது பிரச்சினைக்குத் தீர்க்கமான முடிவு எட்டப்பட வேண்டும் என்றே நாம் போராட்டத்தில் இறங்கினோம். ஆனால், எமது கோரிக்கைகளை எவரும் கண்டுகொள்ளவில்லை. எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சி மாவட்டத்தில் பூரண ஹர்த்தால் நடத்துவதற்கு அழைப்பு விடுகின்றோம்.

வர்த்தகச் சங்கங்கள், பொது அமைப்புக்கள், போக்குவரத்துச் சங்கங்கள், சிவில் அமைப்புக்கள், அரசியல் தரப்புக்கள் என அனைவரும் இணைந்து எமது போராட்டத்துக்கு வலுச் சேர்த்து ஒத்துழைக்க வேண்டுகின்றோம்" என அவர் தெரிவித்தார்.

அதேவேளை, வவுனியாவிலும் எதிர்வரும் 27ஆம் திகதி பூரண ஹர்த்தால் அனுஷ்டிப்பதற்கு வர்த்தக சங்கம், பொது அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று வவுனியாவில் சுழற்சி முறையில் உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோர் உறவினர்கள் சங்கத் தலைவி காசிப்பிள்ளை ஜெயவதனா தெரிவிக்கையில்,

"எதிர்வரும் 27ஆம் திகதி கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலைக் கோரி போராட்டம் மேற்கொண்டு வருபவர்கள் பூரண ஹர்த்தாலை கிளிநொச்சியில் அனுஷ்டிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவிலும் கடந்த 59 நாட்களாக, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளை வெளிப்படுத்துமாறு கோரி போராட்டம் மேற்கொண்டு வருகின்றோம். எனவே, எமது உறவுகளை [illegible] எம்மிடம் ஒப்படைக்கும் இந்தப் போராட்டத்துக்கு வவுனியா வர்த்தக சங்கம், தனியார் நிறுவனங்கள், பொது அமைப்புக்கள் ஆகியவை ஆதரவு வழங்கி எதிர்வரும் 27ஆம் திகதி வவுனியாவில் பூரண ஹர்த்தாலை அனுஷ்டிப்பதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் வெளிப்படுத்தலையும், விடுதலையையும் வலியுறுத்தி வடக்கில் 4 மாவட்டங்களிலும், கிழக்கில் திருகோணமலையிலும் தொடர் போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

நேற்று கிளிநொச்சியில் 63ஆவது நாளாகவும், வவுனியாவில் 59ஆவது நாளாகவும், முல்லைத்தீவில் 47 ஆவது நாளாகவும், யாழ்ப்பாணம் - மருதங்கேணியில் 40ஆவது நாளாகவும், திருகோணமலையில் 50ஆவது நாளாகவும் போராட்டங்கள் தொடர்கின்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. (செ-15)

### உயர் மட்டத்தில் இன்று ...

காப்பு அமைச்சின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பொதுமக்களின் காணிகளை விடுவிக்குமாறு வடக்கில் பல்வேறு பகுதிகளில் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் வடக்கில் உள்ள பொதுமக்களின் காணிகள் விடுவிப்பது தொடர்பாக படை அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

அதில் முடிவினை எடுத்த பின்னர் எந்த பகுதி எக்காலப்பகுதியில் விடுவிக்கப்படவுள்ளது என்பது தொடர்பான இறுதி அறிவித்தலும் கூட்டமுடிவில் வெளியிடப்படும் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இக்கூட்டத்தில் கலந்து கொள்ள அமைச்சர் டி.எம்.சுவாமிநாதனால் வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டங்களையும் சேர்ந்த முக்கியஸ்தர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சார்பாக கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்துரையாடலில் பங்கேற்கவுள்ளார். (செ-9)



பன்னாங்கண்டி மக்களின் காணி உரிமம் கோரிய போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 33ஆவது நாளாகவும் தொடர்ந்து வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஜபா கட்டளை அதிகாரியாக சவேந்திர சில்வா



(கொழும்பு)

இராணுவத் தலைமையகத்தில் பொது உதவி அதிகாரியாக பணியாற்றும் சர்ச்சைக்குரிய அதிகாரியான மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா கஜபா காலாட்படைப் பிரிவின் தலைமை கட்டளை அதிகாரியாக நியமிக்கப்படவுள்ளார்.

கஜபா படைப்பிரிவின் தலைமை கட்டளை அதிகாரியாக பணியாற்றும் மேஜர் ஜெனரல் உதய பெரேரா இந்தவாரம் ஓய்வு பெறவுள்ளார்.

இதையடுத்தே, கஜபா படைப்பிரிவின் புதிய தலைமை கட்டளை அதிகாரி பதவிக்கு மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரில் 58 ஆவது பிரிவின் கட்டளை அதிகாரியாக பணியாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர் என்று மனித உரிமை அமைப்புகளால் குற்றம் சாட்டப்பட்டு வருபவராவார்.

அண்மையில் இராணுவத் தளபதியின் பொது உதவி அதிகாரியாக அவருக்கு நியமனம் வழங்கப்பட்டமையானது, அனைத்துலக மட்டத்தில் கடுமையான சர்ச்சைகளையும் கண்டனங்களையும் ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் அவருக்கு மற்றொரு உயர்பதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)


## கண்ணீர்ப் பூக்கள்

அமரர் **சின்னத்தம்பி மார்க்கண்டு பொன்னம்பலம்**



யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபைத் தலைவரும் பிரதேச செயலாளருமான **பொன்னம்பலம் தயானந்தாவின்** அன்புத் தந்தையார் மார்க்கண்டு பொன்னம்பலம் அவர்களின் மறைவினால் துயரடை கின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 25.05.1938
உதிர்வு : 22.04.2017

யாழ்.பிரதேச செயலக மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்களின் சமாசத்தினர்.

(8810)

## கண்ணீர்ப் பூக்கள்

அமரர் **சின்னத்தம்பி மார்க்கண்டு பொன்னம்பலம்**



யாழ். பிரதேச செயலக கலாசார அதிகார சபைத் தலைவரும் பிரதேச செயலாளருமான **பொன்னம்பலம் தயானந்தாவின்** அன்புத் தந்தையார் மார்க்கண்டு பொன்னம்பலம் அவர்களின் மறைவினால் துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு : 25.05.1938
உதிர்வு : 22.04.2017

பிரதேச செயலக கலாசார அதிகாரசபை, யாழ்ப்பாணம்.

(8809)


# யாழில் பாதுகாப்புப் போர்வையில் அரச காணிகள் கையகப்படுத்தல்

## இராணுவ நிகழ்ச்சி நிரலுக்கு கூட்டமைப்பு இணக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் முப்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ள தனியார் காணிகள் விடுவிக்கப்பட்டு, தேசிய பாதுகாப்பு காரணமாக அப்பகுதியில் உள்ள அரச காணிகள் கையகப்படுத்தப்படவுள்ளன.

அந்தவகையில் யாழ்.குடா நாட்டில் உள்ள அரச காணிகளை அடையாளப்படுத்தும் பணி இந்த வாரம் நிறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். குடாநாட்டில் முப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தனியார் மற்றும் அரச காணிகளை விடுவித்தல் தொடர்பான கலந்துரையாடல் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

சுமார் மூன்றரை மணி நேரம் நடைபெற்ற இக் கலந்துரையாடலில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள், பாதுகாப்பு படை உயர் அதிகாரிகள், அரச அதிபர், பிரதேச செயலர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மேற்குறித்த கலந்துரையாடலில் காணி விடுவிப்பு, சுவீகரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பாகவும் அதில் எடுக்கப்பட்ட முடிவுகள் தொடர்பாகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரால் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கப்பட்டது.

அதில் யாழ். குடாநாட்டில் முப்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ள தனியார் காணிகள் விடுவிக்கப்பட்டு, தேசிய பாதுகாப்பு காரணமாக அப்பகுதியில் உள்ள அரச காணிகள் கையகப்படுத்தப்படும் என்ற இராணுவத்தினரின் நிகழ்ச்சி நிரலுக்கு கூட்டமைப்பினர் இணங்கியுள்ளதாகவும் தெரிவித்திருந்தனர்.

மேலும் இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஊடக சந்திப்பில் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டில் தற்போதும் சிறு சிறு தனியார் காணிகளை இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்திருப்பது தொடர்பில் அடையாளம் காட்டியுள்ளோம்.

அதில் சில இடங்களை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

ஆனால் பல இடங்கள் தனியார் காணிகள் என உறுதி செய்ய வேண்டியுள்ளதாகவும் அதாவது பல இடங்களில் காணி சுவீகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இன்னமும் முடிவடையாமல் உள்ளது. அது தொடர்பாக படையினர் சில தீர்மானம் எடுக்க வேண்டி உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

எனவே ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவுகளிலும் இராணுவத்தினர் கையகப்படுத்தி வைத்துள்ள சிறு சிறு தனியார் காணிகளை விடுவிக்க வேண்டும் என்றும், தேசிய பாதுகாப்புக்காக காணிகள் தேவைப்பட்டால் அப்பகுதியில் உள்ள அரச காணிகள் அடையாளப்படுத்தும் நிகழ்ச்சிநிரலுக்கு நாம் இக் கலந்துரையாடலில் இணக்கம் தெரிவித்துள்ளோம்.

அரச காணிகள் இருந்தால், அங்கு பாதுகாப்பு தேவையாக இருந்தால் தற்போது தனியார் காணிகளில் உள்ள இராணுவத்தினரின் இருப்பிடங்களை அரச காணிகளுக்கு மாற்றுவது தொடர்பாக இராணுவத்தினர் நடவடிக்கை எடுப்பார்கள்.

அவ்வாறான காணிகளை ஒவ்வொரு பிரதேச செயலர்களும் அடையாளப்படுத்தி ஒருவாரத்தில் அரச அதிபரிடம் அத் தரவுகளை கொடுப்பார்கள்.

அதன் பின்னர் மீண்டும் படைத்தரப்புடன் கலந்துரையாடலை நடத்தி தெளிவற்ற விடயங்களை தெளிவுபடுத்திக்கொண்ட பின்னர் பாதுகாப்பு அமைச்சுக்கு அனுப்பி வைப்போம்.

பின்னர் பாதுகாப்பு அமைச்சுடன் நடக்கும் பேச்சுவார்த்தையில் இது தொடர் பான விடயங்களை நாம் கலந்துரையாடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக் கலந்துரையாடலின் இணக் கப்பாட்டின் அடிப்படையில் அரச காணிகளை அடையாளப்படுத்தும் பணி இவ்வாரம் நிறைவடைந்து, ஒவ்வொரு பிரதேச செயலர்களும் அரச அதிபரிடம் குறித்த அறிக் கையை சமர்ப்பிக்கவுள்ளனர். (இ-9)

# இராசி பலன்

24.04.2017
(சித்திரை 11, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு
திரயோதசிமுன்னிரவு10.09மணிவரை
உத்தரட்டாதி முன்னிரவு10.13மணிவரை
சுபநேரம் 12.00-1.30மணிவரை
இராகுகாலம் 7.30-9.00மணிவரை
பிரதோச விரதம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக்.புத சந் | சூரி | செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் மகம், பூசம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** சிந்தனை மிகுதியான நாள் திட்டமிட்ட பயணமொன்றில் திசை திருப்பங்கள் ஏற் படலாம், குடும்பத்தினரி டையே முன் கோபத்தைக் குறைப்பது நல்லது.

**மேடம்** நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.

**இடபம்** அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கூடும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், தொழில் வளர்ச்சி கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**கும்பம்** எதிர்பார்ப்புக்கள் நிறை வேறும் நாள், நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள், பய ணங்களால் பயனுண்டு கொள்கைப் பிடிப்போடு செயற்படுவீர்கள்.

**கடகம்** உதாசீனம் செய்தவர்கள் உதவி கேட்டு வரலாம், தாமதமான காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மகரம்** கனிவாகப்பேசி காரியம் சாதிக்கும் நாள், சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும், சகோதர வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**சிம்மம்** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், பித்த சம்பந்தமான ரோக பயமுண்டு, நட்பொன்று பகையாகலாம்.

**தனுசு** பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப செய்தி கள் வந்து சேரலாம், அர சியல் செல்வாக்கு மேலோங் கும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**விருச்சிகம்** மகிழ்ச்சி கூடும் நாள், தூர தேசத்து உறவினர்களின் வருகையுண்டு, பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** நினைத்த காரியத்தை நினைத்தபடி செய்து முடிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரும் நாள், தொழிலில் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும்.

**கன்னி** பயணங்கள் செல்ல ஏற்பட்ட திட்டங்கள் கைகூடும், புதிய பொருட் சேர்கைக்கு அத்திபாரமிடுவீர்கள், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.ஆரியகுளம் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஆரியகுளம் நவீன முறையில் புனரமைப்பு செய்யப்படவுள்ளதாக வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்துள்ளார்.

ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மே மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ள உயிர்நீத்த இராணுவ வீரர்கள் நினைவு தினத்தை முன்னிட்டு பல்வேறு செயற்பாடுகள் மே மாதம் 7, 8,9 ஆம் திகதிகளில் மேற்கொள்வுள்ளோம். அதன் ஒரு அங்கமாக மே மாதம் 7 ஆம் திகதி யாழ்.மாநகருக்குட்பட்ட ஆரிய குளத்தை புனரமைக்கவுள்ளோம். அதற்கு வடமாகாண கடற்படை, பாதுகாப்பு படை, வடமாகாண கல்வி அமைச்சு, யாழ்.மாநகரசபை என்பனவற்றின் உதவி கோரப்பட்டுள்ளது."

துப்புரவு பணியை மேற்கொள்ள கடற்படையினர் படகு உதவி செய்வார்கள். சிரமதானப் பணியை பாதுகாப்பு படையினர் மேற்கொள்வார்கள். வீதிகளை துப்புரவு செய்ய பாடசாலை சாரணர் இயக்கத்தினர் ஈடுபடுத்தப்படவுள்ளன்ர். இந்த செயற்பாட்டை தொடர்ந்து ஏனைய தடாகங்களும் தொடர்ச்சியாக புனரமைப்பு செய்ய திட்டமிட்டுள்ளோம். யாழ். நகரில் நிறைவான சுத்தத்தை மேற்கொள்வதே இதன் நோக்கமாகும்.

இத்திட்டத்திற்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்துள்ளோம். இத்திட்டம் டெங்கு தொற்றில் இருந்து விடுபடுவதற்கான காரணியாகவும் இருக்கும். அத்துடன் அன்றைய தினம் கைதடி முதியோர் இல்லம் சிறுவர் இல்லங்களில் உணவு கொடுக்கவுள்ளோம். இவை ஆளுநர் செயலகத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

மே மாதம் 8 ஆம் திகதி பலாலியில் குறித்த நினைவு தினம் நடைபெறும். அத்துடன் மே மாதம் 9 ஆம் திகதி இரத்ததான நிகழ்வும் இடம்பெறவுள்ளது. இவை சாதாரண நிகழ்வு அல்ல. இது பொதுமக்களுக்கு விழிப்புணர்வான செயற்பாடு என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# பொதுக்கூட்டம்

(கரணவாய்)

வடமராட்சி நல்லொழுக்க நிறுவன வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அல்வாயிலுள்ள நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. பா. இரகுநாதன் (ஜே.பி) தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் விருந்தினர்களாக வடமாகாணசபை உறுப்பினர்கள் எம்.கே. சிவாஜிலிங்கம், வே. சிவயோகன், ச.சுகிர்தன் மற்றும் கரவெட்டி பிரதேச செயலக உதவித்திட்டமிடற்பணிப்பாளர் திருமதி. ரஞ்சினி இரகுநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3,60)




# ராணுவத்தின் பிரிவிலுள்ள மக்களுடைய காணிகளை உடனடியாக விடுவிக்கவும்

## ஜனாதிபதியிடம் ஆனந்தசங்கரி கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், மன்னார் கிளிநொச்சி, வன்னி ஆகிய மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மக்களுக்குச் சொந்தமான, அரச படைகளால் தம் தேவைக்கு உபயோகிக்கப்பட்ட காணிகள் உரியவர்களுக்கே திருப்பி வழங்கப்பட வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி மீண்டும் வலியுறுத்துகிறது.

அத்தகைய காணிகளை தொடர்ந்து தம்வசம் வைத்திருப்பதை எக்காரணம்கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது என்பதே தமிழர் விடுதலைக்கூட்டணியின் வெளிப்படையான நிலைப்பாடும் ஆகும். உலகில் எப்பகுதியில் வாழ்கின்ற எவருக்கும் யாருக்கும் விட்டுக்கொடுக்க முடியாதளவிற்கு காணிகள் என்பது மிகவும் பெறுமதியானதாகும். அத்தகையதோர் உணர்வுபூர்வமான பிரச்சினையை ஜனாதிபதி அவர்களே! நான் தங்களுக்கு வலியுறுத்தி கூற விரும்புவது இப்பிரச்சினைக்குரிய ஒரேயொரு தீர்வு, எதுவித நிபந்தனையுமின்றி அக்காணிகளை விட்டு உடனடியாக இராணுவம்வெளியேறுவதே.

தமிழர் விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் என்ற நிலையில் 2010 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 02 ஆம் திகதி என்னால் வெளியிடப்பட்ட பத்திரிகை அறிக்கையின்ஒரு பகுதியை இங்கே தருகிறேன். அதன் முதற் பந்தியிலேயே "புதிய முகாம்களை திறக்கும் எண்ணத்தையும், இராணுவத்தினரின் குடியிருப்புக்கென அவர்களுக்கு நிரந்தர வீடுகள் அமைக்கும் ஆலோசனையையும், அவை எதிர்பார்த்த பலனை தராதென வெளிப்படையாக கருதுவதோடு, அதன் விளைவாக மிகவிரைவில் பெரியதோர் அனர்த்தம் உருவாகிவிடுமென கூறி வைக்க விரும்புகின்றேன். தற்போது இவை பற்றி பேசி குளவிக் கூட்டை கல்லெறிந்து குழப்புவதை போல நடந்துகொள்ள விரும்பவில்லை. நான் தங்களுக்கு எதைச் சொன்னாலும் செய்தாலும் நாட்டுப்பற்றுடனேயே செயற்படுவேன். நான் தங்களுக்கு வழங்க விரும்பும் விசுவாசமான ஆலோசனை யாதெனில் புதிய முகாம்கள் ஆரம்பிப்பதை உடன் நிறுத்தி யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் இயங்கிவந்த முகாம்களை மட்டும். தவிர்த்து, இராணுவத்தினருக்கு புதிதாக கட்ட உத்தேசித்துள்ள நிரந்தரமான வீடுகளை. கைவிடுங்கள் என்பதே. எனது சிந்தனைகளை அரசு விளங்கிக்கொண்டு எனது யோசனைகளை கவனத்திற்கொள்ள வேண்டும்"

அன்று நான் வெளிப்படுத்திய அச்சம் இன்று நிரூபணமாகியுள்ளது. முன்னாள் ஜனாதிபதி எனது ஆலோசனைகளுக்கு செவிமடுக்கவில்லை. ஆனால் நீங்களாவது இதனை செவிமடுப்பீர்கள் என நம்புகிறேன். காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் எனப் போராடும் அமைப்புக்கள் மிக வேகமாக வளர்ந்து வருகின்றன. ஆகவே அரசு தாமதமின்றி மக்களுடைய விருப்பத்திற்கு இசைய வேண்டுமென விரும்புகிறேன். இந்த சமாதான சூழ்நிலையில் இந்தளவு பெருந்தொகையான இராணுவ முகாம்கள் நாட்டுக்குத் அவசியமில்லை என்பது மட்டுமல்ல யுத்தம் ஆரம்பித்தபோது இருந்த முகாம்களை தவிர்த்து ஏனைய முகாம்கள் அத்தனையும் உடனடியாக மூடப்பட வேண்டும். தாம் பெரும் புனிதமான யுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாக கருதும் மக்களுக்கு மனச் சங்கடத்தை ஏற்படுத்த வேண்டாம் என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்த சங்கரி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் மேலும் கோரிக்கை விடுத்துள்ளார். (இ)

# வடமாகாணத்தில் போருக்குப் பின் கல்வி வீழ்ச்சி!

## விஜயகலா வருத்தம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை போருக்கு பின்னர் வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவித்துள்ள சிறுவர் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், இந்த நிலையை மாற்றுவதற்கு மாணவர்களை பாடசாலைக்கு ஒழுங்காக அனுப்ப வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

சிறுவர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் துருக்கி தூதுவராலயத்தின் நிதி பங்களிப்புடன் தீவகப்பகுதியில் தெரிவு செய்யப்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட 3 ஆயிரம் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு வருட காலத்திற்கான பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம்காலை 9.30 மணிக்கு வேலணை மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். வடக்கு மாகாணத்தின் கல்வி நிலை போருக்கு பின்னர் வீழ்ச்சி அடைந்துள்ளது. இந்த வீழ்ச்சி நிலைக்கு காரணம் கல்வியில் நாம் கூடியளவு கவனம் செலுத்தாமையே.

மேலும் வடக்கு மாகாணத்தில் கஷ்டப்பிரதேச மாணவர்களுக்கு போதிய கல்வி உபகரணங்கள் இல்லை. அவர்கள் கற்கும் பாடசாலைகளில் போதிய வளங்கள் இல்லாமையும் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியடைகிறது. இந்த நிலையை மாற்றுவதற்காக தான், துருக்கி அரசின் துணையுடன் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்களை, வேலணை மற்றும் ஊர்காவற்றுறை கல்வி வலயங்களுக்கு உட்பட்ட 3 ஆயிரம் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு தேவையான கற்றல் உபரணங்களை வழங்குகின்றோம். இலவச கல்வி வழங்கப்பட்டாலும் மாணவர்கள் பாடசாலை செல்வது குறைவாகவே உள்ளது. இந்த நிலையை மாற்ற நல்லாட்சி அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகின்றது என அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கைக்கான துருக்கி நாட்டு தூதுவர் துங்கா ஒஸ்கா கலந்து கொண்டிருந்ததோடு, சிறுவர் மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் இமெல்டா சுகுமார், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் என்.வேதநாயகன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ். உதயகுமார், ஊர்காவற்றுறை பிரதேச செயலர் திருமதி அன்ரன் யோகநாயகம், எழிலரசி உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (இ-4)

# மணவாளக் கோல உற்சவம்

மேல்கரவை சண்டிக்குளம் ஆதிஞான வைரவர் ஆலய மணவாளக் கோல உற்சவம் இன்று திங்கட்கிழமை காலை ஆறு மணிக்கு சகஸ்ர (108) சங்காபிஷேகத்துடன் இடம்பெறும். (இ-3-60)





கொக்குவில் பொது நூலக மழலைகள் சங்கமம் எனும் சிறுவர் ஒன்றுகூடல் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கொக்குவில் பொது நூலக மண்டபத்தில் இடம்பெற்றபோது...(படங்கள்: பொ.சோபிகா)

# இளைஞன் மீது வாள் வெட்டு

அயல் வீட்டாருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தால் வாள் வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தநிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


இச் சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் மந்திகை துன்னாலை பகுதியிலுள்ள அவரது வீட்டில் இடம் பெற்றது.

இச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த தர்மகுலசிங்கம் பிரதீபன் (வயது- 22) என்பவரே வாள் வெட்டுக்கு இலக்கானவர். வாள்வெட்டுக்கு இலக்கானவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அடுனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். இது தொடர்பில் பருத்தித்துறைப் பொலிஸார் மேலதிகவிசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (இ-30)

# பரிசளிப்பு விழா

தந்தை செல்வா நினைவு தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளுக்கான பரிசளிப்பு விழா நாளை மறுதினம் 26ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 11.45 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் இடம்பெறும்.

சிரேஷ்ட சட்டத்தரணி சா.செ.சந்திரகாசன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் மூத்த பேராசிரியர் சி.க. சிற்றம்பலம் சிறப்புரையாற்றவுள்ளார். .(இ-3)







பாரம்பரிய உணவுப் பழக்கம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக யாழ். சமூக செயற்பாட்டு மையத்தின் நடைமுறைப்படுத்தலில் யுனிசெப் நிறுவன நிதி அனுசரணையுடன் தெல்லிப்பழை தாய்மார் கழகங்களும் தெல்லிப்பழை சுகாதாரப் பணிமனையும் இணைந்து நடத்திய உணவுத் திருவிழா தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?

## 2015 தேர்தல் களத்தில் நடந்த பலமுனைப் பிரசாரங்கள்

2015 ஆம் ஆண்டில் நடந்த பொதுத்தேர்தலின்போது நாடளாவிய ரீதியில் தேர்தல் பிரசாரங்கள் களை கட்டியிருந்தன. வடக்கு, கிழக்கு தமிழர் தாயகத்திலும் தேர்தல் பிரசாரங்களுக்குக் குறைவில்லை. வடமாகாணத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்திலும் அகில இலங்கைத் தமிழ்க்







காங்கிரஸ் சைக்கிள் சின்னத்திலும் போட்டியிட்டன.

ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் முன்னாள் அமைச்சர் அமரர் தியாகராசா மகேஸ்வரனின் பாரியார் திருமதி விஜயகலா மகேஸ்வரனும் மகேஸ்வரனின் சகோதரர் தியாகராசா துவாரகேஸ்வரனும் யானைச் சின்னத்தில் முக்கிய வேட்பாளர்களாகப் போட்டியிட்டிருந்தனர்.

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் வீணைச் சின்னத்தில் போட்டியிட்டார். இவருடன் முருகேசு சந்திரகுமாரும் இணைந்து கொண்டார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி அவர்கள் கொழும்பில் போட்டியிட, யாழ்ப்பாணத்தில் உதயசூரியன் சின்னத்தின்கீழ் ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜா அவர்கள் தலைமையில் வேட்பாளர்கள் களமிறங்கியிருந்தனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் அங்கஜன் இராமநாதன் யாழ்ப்பாணத்தில் களமிறங்கி இருந்தார்.

சுயேட்சைக்குழுவில் குறிப்பிடத்தக்க பிரசாரத்துடன் களமிறங்கியவர் சிவன் பவுண்டேசன் அமைப்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் இவருக்கு கேடயச் சின்னம் வழங்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டிருந்தாலும் அவர்களுக் கிடையிலேயே கடும் போட்டி நிலவியிருந்தது.

மாவை சேனாதிராசா அவர்கள் முதன்மை வேட்பாளர் என்ற அடிப்படையிலும் கட்சியின் தலைவர் என்ற ரீதியிலும் ஏனைய வேட்பாளர்கள் அனைவரும் மாவை.









சேனாதிராசாவுக்கு ஒரு விருப்பு வாக்கை அளிக்குமாறு தாம் சென்ற இடமெல்லாம் கேட்டிருந்தனர். இது அவரின் வெற்றிக்கு வலுச்சேர்த்தது.

தவிர தொகுதி ரீதியாக மூன்று மூன்று வேட்பாளர்களாகச் சேர்ந்து நின்று தேர்தல் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டது. இதிலும் சிலர் மூன்று விருப்பு வாக்கு என்ற கூட்டில் சேர்ந்து கொண்டனராயினும் தத்தம் தேர்தல் தொகுதியில் மேற்கொண்ட பிரசாரத்தின் போது தாம் இணங்கிக் கொண்டவண்ணம் நடந்து கொள்ளாமல் கூட்டுச் சேர்ந்தவரின் காலை வாரிவிட்டதான குற்றச்சாட்டுக்களும் உண்டு.

எதுவாயினும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் நடுநிலை என்ற அடிப்படையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடவில்லை என்பதை இத் தொடரின் முற்பகுதியில் தெரிவித்திருந்தோம். ஆனாலும் வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் தேர்தல் பிரசாரத்தில் கடுமையாக தமது உழைப்பை வழங்கியிருந்தனர். அதிலும் இளம் உறுப்பினர்களில் சிலர் கூட்டமைப்பின் வேட்பாளர் எம்.ஏ.சுமந்திரனின் வெற்றிக்காகப் பாடுபட்டனர். இது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேர்தல் பிரசாரமாக இருக்க,

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேர்தல் பிரசாரம் என்பது சுவரொட்டிகளை மையப்படுத்தியதாக முன்னெடுக்கப்பட்டது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியில் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தனது வீணைச்சின்னத்தில் போட்டியிட முடியாமல் போயிற்று.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச்சின்னத்திலேயே அவர் போட்டியிடவேண்டிய கட்டாயம் இருந்தது. இஃது டக்ளஸ் தேவானந்தாவுக்கு உடன்பாடானதல்ல. வீணைச்சின்னத்தில் போட்டியிடுவதே அவருக்கு விருப்பமாக இருந்த போதிலும் மகிந்த ராஜபக்ஷவின் நிபந்தனையை ஏற்கவேண்டிய சூழ்நிலை அப்போது இருந்தது.

வெற்றிலைச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதன் காரணமாக வடமாகாணத்தில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே செல்வாக்குச் செலுத்தியது. இதன் காரணமாக 2010 ஆம் ஆண்டு ஆண்டில் நடந்த பொதுத் தேர்தலிலும் 2013 ஆம் ஆண்டு நடந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலிலும் டக்ளஸ் தேவாணந்தா பல பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியதாயிற்று. அதாவது அங்கஜன் இராமநாதனும் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டார். எனினும் டக்ளஸ் தேவானந்தா தரப்பிற் கும் அங்கஜன் தரப்பிற்கும் இடையே முறுகல் நிலையே இருந்து வந்தது. இது அவர்க ளின் வெற்றிக்குப் பங்க மாயிற்று எனலாம்.

2010 ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலின் போது யாழ்ப்பாணம் பருத்தித்துறை பலாலி வீதிச் சந்தியில் வைத்து அங்கஜன் இராமநாதன் தரப்பும் டக்ளஸ் தேவானந்தாவின் ஆதரவாளர்களும் நேருக்குநேர் தாக்குப்பட்டனர். இவை யெல்லாம் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டதால் வந்த வில்லங்கங்களே.

எனினும் 2015 ஆம் ஆண்டில் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் மீளவும் தனது ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வீணைச் சின்னத்தின் கீழ் போட்டியிடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்டதாயினும் அப்போது டக்ளஸ் தேவானந்தா கூட்டுச் சேர்ந்திருந்த மகிந்த ராஜபக்ஷ தனது ஜனாதிபதி பதவியை இழந்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ பதவியிழந்ததால் டக்ளஸ் தேவானந்த அமைச்சுப் பதவியை இழக்க வேண்டியதாயிற்று.

மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சியிலும் டக்ளஸ் தேவானந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங்குவதற்கு ஜனாதிபதி மைத்திரி உடன்பட்டிருந்தாராயினும் அத் தகையதொரு நிலைமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் கொழும்புத் தலைமை கடுமையாக எதிர்த்தது.

2015 இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்ததன் பிரதி உபகாரமாக கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்று டக்ளஸ் தேவாணந்தாவுக்கு அமைச்சுப் பதவி வழங் குவதை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன தவிர்த்திருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா அமைச்சராக இருந்தகாலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டார். வெற்றிலைச் சின்னத்தின்மீது தமிழ்மக்கள் வெறுப்புக் கொண்டிருந்தனர். வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த மிகப் பெரும் அழிவுகள் மகிந்த ராஜபக்ஷவையும் அவரது வெற்றிலைச் சின்னத்தையும் தமிழ் மக்கள் வெறுக்கலாயினர். இதனால் டக்ளஸ் தேவானந்தா அதிக வாக்குகள் பெற முடியாமல் போயிற்று.

அதேவேளை 2015 ஆண்டு பொதுத்தேர்தலில் வீணைச் சின்னத்தில் போட்டியிடக் கூடிய வாய்ப்பு ஏற்பட்ட போதிலும் அமைச்சுப் பதவியை இழந்திருந்ததால் வீணைச் சின்னத்தில் வாக்குகளைப் பெறுவதிலும் டக்ளஸ் தேவானந்தா இடரைச் சந்திக்க நேரிட்டது.

வளரும்

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆக்கிரமிப்புக்கு ஆதரவான வேலைத்திட்டங்களை எமது மண்ணில் அமெரிக்கா செய்து வருகின்றது

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி குற்றச்சாட்டு

அமெரிக்க கடற்படை அதிகாரிகள் முள்ளிக்குளத்தில் உள்ள கடற்படையினருக்கு பயிற்சியை வழங்கியிருக்கின்றார்கள். ஐ.நாவிலே பாதிக்கப்பட்ட தரப்பிற்கு சார்பாக சில பிரேரணையை கொண்டு வருவதாக கூறிக் கொண்டு இந்த மண்ணிலே அந்த ஆக்கிரமிப்புக்கு ஆதரவான வேலைத்திட்டங்களை செய்கிறார்கள் என வடக்கு மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

தடுமாறும் தமிழ்த் தலைமைகளால் தளர்வடைகின்றார்களா? தமிழ் மக்கள், அடுத்தது என்ன? எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் வவுனியாவில் இடம்பெற்ற கருத்துப் பகிர்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண கல்வி அமைச்சர் பாடசாலைகளில் இராணுவ பிரசன்னம் இல்லை என்று சொல்கின்றார். ஆனால் இன்றும் பல பாடசாலை நிகழ்வுகளில் இராணுவத்தை அழைக்கின்றமையை காணக்கூடியதாகவுள்ளது.

நாங்கள் நடத்துகின்ற அறவழி போராட்டங்கள் அனைத்திலும் இராணுவத்தினரதும், இராணுவ புலனாய்வாளர்களின் கண்காணிப்பும், அச்சுறுத்தலும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்த சூழல் மாறிவிட்டது என்ற தோரணையை மக்களுக்கு சொல்லி விட முடியாது.

அண்மையில் ஐ.நாவில் பாதிக்கப்பட்ட மக்களின் சார்பாக 2 வருட கால நீடிப்பை வழங்குவதற்கு எதிராக பல நாடுகளுடனும், சில மனித உரிமை அமைப்புக்களுடனும் கலந்துரையாடி இருந்தோம். அப்போது அவர்கள், அந்நாடுகள் கூறிய கருத்து நீங்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் கூட உங்களது கட்சியின் தலைமை இரண்டு வருட கால அவகாசத்தை கொடுக்கச்சொல்லி கூறுகிறார்கள். அதுவும் அவர்கள் எதிர்க்கட்சியில் இருக்கிறார்கள் மற்றும் பேசவல்லவர்களாகவும் இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இதனால் நாங்கள் என்ன செய்ய முடியும்.

போர் முடிந்த பின்னர் 2015ஆம் ஆண்டு வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் கூட அமெரிக்க அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் கொண்டு வந்த 30.1 தீர்மானத்தில் எதையும் நிறைவேற்றவில்லை. ஆனால் மீண்டும் இரண்டு வருட காலங்கள் வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டவர்களிற்கு இது எவ்வாறு இருக்குமோ தெரியவில்லை? இந்த 30.1 தீர்மானத்திலே ஆக்கிரமிக்கப்பட்டுள்ள பொதுமக்களுடைய காணி விடுவிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது.

ஆனால் அத்தீர்மானத்தின் படி முள்ளிக்குளம் பகுதியில் அமைந்துள்ள கடற்படைத் தளம் இலங்கையின் பிரதான கடற்படை தளமாக அந்த கிராமத்தை முழுவதுமாக ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக் கடற்படை தளம் இலங்கையில் முதலாவது கடற்படை தளமாக இப்பொழுது வந்துள்ளது. அண்மைய காலங்களில் அப்பகுதியில் சில வாரங்களாக அமெரிக்க கடற்படை அதிகாரிகள் அங்குள்ள கடற்படையினருக்கு பயிற்சியை வழங்கியிருக்கின்றார்கள். ஐ.நாவிலே பாதிக்கப்பட்ட தரப்பிற்கு சார்பாக சில பிரேரணையை கொண்டு வருவதாக கூறிக் கொண்டு இந்த மண்ணிலே அந்த ஆக்கிரமிப்புக்கு ஆதரவான வேலைத்திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். இதனை பார்க்கின்ற போது ஐ.நாவிலே போய் நாங்கள் பேசுவது எல்லாம் ஒரு வீணான செயல் என்று தோன்றுகின்றது.

நாங்கள் தெருவழிகளில், நில மீட்புக்கான போராட்டம், காணாமல் போனவர்களிற்கான போராட்டம் என பல போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கின்றோம்.

ஜனாதிபதி, பிரதமர், அடுத்த கட்டமாக எதிர்க்கட்சி தலைவர் என்ற அதிகாரமிக்க



பதவியில் த.தே.கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தர் ஐயா உள்ளார். ஆனால் எங்களுடைய விடயத்தில் அவர் வாய் திறக்காது மௌனமாக இருப்பது என்பது எங்களிற்கு அதிருப்தியாகவும் வேதனையாகவும் உள்ளது.

என்னதான் அரசியல் தீர்வு கிடைக்கும் என எண்ணினாலும் கூட நாங்கள் நினைக்கின்ற, எதிர்பார்க்கின்ற ஒரு நியாயமான அரசியல் தீர்வு எங்களிற்கு கிடைக்காமல் போய்விடும் என்ற வருத்தம் எங்களிற்கு இருக்கின்றது. நாங்களே குற்றங்களை நடத்தி விட்டு நாங்களே இவர்களிற்கு விசாரித்து நீதியை வழங்குகின்றோம் என சொல்வதும் நல்ல ஆரோக்கியமான சூழலாக தெரியவில்லை என்றார்.(2-5-250)




# சட்டவிரோதமாக மணல் கடத்தல் வாகனம் கைப்பற்று; சாரதி கைது

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் இயங்கி வரும் விசேட முறியடிப்புப் பொலிஸ் படைப் பிரிவின் பொறுப்பதிகாரி கருணாரட்னம் ஜெசிந்தன்தலைமையிலான பொலிஸ் அணியினர் சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு தொடர் பாதுகாப்பு . ஊர்சுற்றுக் காவல் கடமையில் ஈடுபட்டிருந்த நிலையில் ஏ9. வீதியில்திடீர்வீதிப்பரிசோதனையில் ஈடுபட்ட போது அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை ஏற்றி பயணித்த டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபரின் காரியாலயத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் ஏ9. வீதியில் உள்ள மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பதாக கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை ஒரு மணியளவில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான பிரதிப் பொலிஸ்மா அதிபர் மகேஷ் வெலிகன்னவின் உத்தரவுக்கமைய புது வருடப் பிறப்பை முன்னிட்டு குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் தொடர் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது திடீரென மாங்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக வீதிப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த நிலையில், அனுமதிப்பத்திரம் இன்றி ஆற்று மணலை யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் சென்ற டிப்பர் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் அடிப்படையில் அதன் சாரதியும் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைகளுக்காக மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இதன் போது, கைதான சந்தேக நபரிடம் மாங்குளம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகள் நடைபெற்று முடிந்த நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிபதியின் முன் முற்படுத்தப்பட்ட போது, சந்தேக நபர் குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதை அடுத்து, 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், கடத்தப்பட்ட ஆற்று மணல் பறிமுதல் செய்யப்பட்ட பின்னர் டிப்பர் வாகனமும், கைதான சாரதியும் விடுவிக்கப் பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளனர். (2-5-15)

# ஆயிரத்து 515.7 ஏக்கர் காணி கிளிநொச்சியில் படையினர் வசம்

## மாவட்ட செயலக புள்ளிவிபரத் தகவலின் படி

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலக பிரிவுகளில் படையினரின் வசம் 1515.7 ஏக்கர் நிலம் காணப்படுவதாக மாவட்டச் செயலக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பிலான கூட்டத்தின் போதே இத் தகவல்கள் வெளியிடப்பட்டன.

அதனடிப்படையில் தனியார் காணி அனுமதிப்பத்திர காணிகள் 374 ஏக்கரும், தனியார் உறுதிக்காணிகள் 168. 2 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் 973. 5 ஏக்கர் காணியும் படையினரின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

கரைச்சி பிரதேச செயலக பிரிவில் 667 ஏக்கர் காணியும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் 185 ஏக்கர் காணியும், பூநகரியில் 592.7 ஏக்கர் காணியும், பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் 71 ஏக்கர் காணியும் படையினரின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றன.

இதில் கரைச்சி பிரதேச செயலக பிரிவில் தனியார் காணி அனுமதிப்பத்திர காணிகள் 218 ஏக்கரும், தனியார் உறுதிக்காணிகள் 4 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் 445 ஏக்கர் காணியும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவில் தனியார் காணி அனுமதிப்பத்திர காணிகள் 128 ஏக்கரும், தனியார் உறுதிக்காணிகள் 8 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் 49 ஏக்கர் காணியும் பூநகரி பிரதேச செயலக பிரிவில் தனியார் காணி அனுமதிப்பத்திர காணிகள் 28 ஏக்கரும், தனியார் உறுதிக்காணிகள் 85.7 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச்சொந்தமான காணிகள் 479 ஏக்கர் காணியும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவில் தனியார் உறுதிக்காணிகள் 70.5 ஏக்கரும், அரச திணைக்களங்களுக்குச் சொந்தமான காணிகள் 0.5 ஏக்கர் காணியும் என காணப்படுகின்றன. (2-5-312)

# வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில்

## 108 தேங்காய்களை உடைத்து இன்று கேப்பாப்பிலவு மக்கள் பூசை வழிபாடு

(பனிக்கன்குளம்)

கேப்பாப்பிலவு மக்களின் நிலமீட்பு போராட்டம் நேற்றுடன் 54 ஆவது நாளை கடந்துள்ள நிலையில் போராட்டத்திலீடுபடும் மக்கள் தர்மத்தின் வழியில் போராடும் நோக்கோடு எமது மூதாதையர் எமக்காக தேடிய சொத்தை அத்துமீறி கையகப்படுத்தியுள்ள இராணுவம் வெளியேறி, நாம் வீதியோரத்தில் படும் வேதனை நீங்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் வழிபடவேண்டுமெனக் கோரி தர்மத்தின் வழியில் கேப்பாப்பிலவு மாதிரிக் கிராம பிள்ளையார் ஆலயத்தில் 108 தேங்காய்களை வைத்து மூன்று வேளை சிவபூசை நடத்தி இன்று பத்தினி தெய்வமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் 108 தேங்காய்களை உடைத்து வழிபாடொன்றை மேற்கொள்ளவுள்ளதாக கேப்பாப்பிலவு மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் முன்னெடுக்கப்பட்ட கவனயீர்ப்பு போராட்டம், நேற்றும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.

இறுதியுத்தம் நிறைவடைந்து மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டபோதும் கேப்பாப்பிலவு மக்கள் மாதிரிக் கிராமங்களில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டனர்.

தம்மை சொந்த நிலங்களில் மீள்குடியேற்றுமாறு வலியுறுத்தி உண்ணாவிரத போராட்டம், கவனயீர்ப்பு போராட்டங்களை கடந்த ஏழு வருடங்களாக முன்னெடுத்து வந்தபோதும் வாக்குறுதிகள் வழங்கப்பட்டு மக்களின் போராட்டங்கள் நிறுத்தப்பட்டன.

இந்த நிலையில் பொது மக்கள் தமது சொந்த காணிக்குள் கால் பதிக்கும் வரை போராட்டம் தொடரும் என தெரிவித்து கவனயீர்ப்பு போராட்டத்தை கேப்பாப்பிலவு இராணுவ முகாமிற்கு முன்பாக முன்னெடுத்தனர்

எமது சொத்தை அத்துமீறி கையகப்படுத்தியுள்ள இராணுவம் வெளியேறி நாம் வீதியோரத்தில் படும் வேதனை நீங்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் வழிவிட வேண்டுமென கோரி தர்மத்தின் வழியில் கேப்பாப்பிலவு மாதிரிக்கிராம பிள்ளையார் ஆலயத்தில் 108 தேங்காய்களை வைத்து மூன்றுவேளை சிவபூசை நடத்தி இன்று பத்தினி தெய்வமான வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயத்தில் 108 தேங்காய்களை உடைத்து வழிபாடொன்றை மேற்கொள்ளவுள்ளதாக கேப்பாப்பிலவு மக்கள் தெரிவிக்கின்றனர். (2-5-281)

# போராட்டத்திற்கு முள்ளிவாய்க்கால் கிழக்கு மாதர் சங்கத்தினர் ஆதரவு

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்பாக கூடாரம் அமைத்துள்ள காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துவரும் போராட்டம் நேற்றுடன் 47 நாளாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. தமக்கான தீர்வின்றி போராட்டத்தை கைவிடப் போவதில்லை என தெரிவிக்கும் மக்கள் தொடர்ந்தும் இந் நிலையில் முள்ளிவாய்க்கால் கிழக்கு மாதர் சங்கத்தினர் நேற்று போராட்ட இடத்துக்கு வருகை தந்து தமது ஆதரவை வழங்கி மக்களுடன் நேற்றையதினம் கலந்துரையாடினர்.

தொடர்ச்சியாக இந்த மக்களை இவ்வாறு தவிக்க விடாது அனைத்து அமைப்புக்களும் முன்வந்து இம்மக்களுக்கு ஆதரவு வழங்கி இம்மக்களுக்கான தீர்வை பெற்றுத்தர முன்வரவேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர். (2-5-281)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னாசி வயல் விழா



கிளிநொச்சிபிரதி மாகாண விவசாயத் திணைக்களத்தின் அனுசரணையுடன் உருத்திரபுர விவசாயப் போதனாசிரியர் பிரிவில் நேற்று முன்தினம் வயல் விழா நிகழ்வு உருத்திரபுர விவசாயப் போதனாசிரியர் ம.மகிலன் தலைமையில் இடம் பெற்றது. பயனாளி ஒருவரின் தோட்டத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதேச அன்னாசி செய்கையாளர்கள் பங்கு பற்றி பயனடைந்தனர். இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாக மாவட்டத்தின் பழப்பயிருக்கான பாடவிதான உத்தியோகத்தர் திருமதி.லதா ஜனகன், உருத்திரபுரம் மகா வித்தியாலயத்தின் அதிபர் திருமதி மீனலோயினி மற்றும் பயிர்ப் பாதுகாப்பு பாட விதான உத்தியோகத்தர் செ.கோபாலகிருஷ்ணன், விவசாயப் போதனாசிரியர்களான லி.துமிலன், எஸ்.விஜிகலா ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். இதில் அன்னாசி செய்கை தொடர்பான நடுகை முறை நுட்பங்கள் பூத்தலைத் தூண்டல் என்பனவற்றில் செய்கை மேற்கொள்ளப்பட்டதுடன் அறுவடை விழாவும் நடைபெற்றது. மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் அன்னாசி செய்கை தொடர்பான துண்டுப்பிரசுரமும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (2-5-254)

# கிளிநொச்சி குளத்தைவிட வாய்க்கால் ஆழம் மணல், மண் படிமங்களை அகற்றுங்கள்

## இரணைமடு கமக்கார அமைப்புக்களின் சம்மேளனம் கோரிக்கை

கிளிநொச்சி நகரில் அமைந்துள்ள குளத்து நீர் வெளியேறும் வாய்க்கால் ஆழமாகவும் குளம் உயரமாகவும் இருப்பதனால் துருசு திறக்கப்படுகின்ற போது முழுநீரும் வெளியேறும் அபாயம் இருப்பதனால் குளத்தில் மணல் மற்றும் மண் படிமங்களை அகற்றி மூன்று அடியாக ஆழப் படுத்துமாறு இரணைமடு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது. கிளிநொச்சி குளம் இரணைமடு நீரை உள்வாங்கி வெளியனுப்பும் குளமாகவும், கனகாம்பிகைகுளத்தின் வான் நீரையும், ஏனைய பிரதேசத்து மழை நீரையும் உள்ளீர்த்து வெளியனுப்பும் குளமாகவும் காணப்படுகிறது. கூடுதல் காலத்திற்கு நீரை பெறும் குளமாகவும் இருக்கிறது .இருந்தும் குளத்தின் துருசினை திறந்து விட்டால் முழு நீரும் வெளியேறிவிடும். காரணம் குளம் மண் நிரம்பி திட்டாக உள்ளது. இதனால் நகர் மற்றும் புறநகர் பகுதி கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைகிறது. எனவே குளத்தினை துருசு மட்டத்திலிருந்து மூன்று அடிக்கு ஆழப்படுத்தி தருமாறு கமக்கார அமைப்புகளின் சம்மேளனம் நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பில் கிளிநொச்சி நீர்ப்பாசனத்திணைக்களத்தினரிடம் வினவியபோது குறித்த கோரிக்கை கிடைக்கப் பெற்றதாகவும் நீண்டகாலமாக குளம் சீர் செய்யப்படாமையினால் மணல் மற்றும் மண் படிந்து துருசு மட்டத்தை விட உயர்ந்து காணப்படுகிறது. எனவே குளம் ஆழப்படுத்த வேண்டிய பணி கட்டாயம் செய்யவேண்டிய தொன்றாகும். அதனை எதிர் காலத்தில் மேற்கொள்ள வேண்டும்.அதற்கான நிதித் திட்டங்களை தேடிக்கொண்டிருக்கின்றோம் எனத் தெரிவித்தனர். (2-5-312)

# அரச ஓய்வூதியர் சங்க

## பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும்

கரைச்சி கண்டாவளை பூநகரி பளை பிரதேச செயலக அரச ஓய்வூதியர் சங்கக் கிளைகளை உள்ளடக்கிய கிளிநொச்சி மாவட்ட அரச ஓய்வூதியர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கிளிநொச்சி மாவட்ட செயலக பிரதம கணக்காளர் ஜே.கில்பேட் குணம் தலைமையில் கடந்த 20ஆம் திகதி கரைச்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர். இதன் பிரகாரம் தலைவராக அ.கனகரத்தினம், உப தலைவராக ச.சந்திரராசா, செயலாளராக திருமதி நா.யோகராணி, உபசெயலாளராக திருமதி ச.லீலாவதி ஆகியோர் தெரிவாகினர். நிர்வாக உறுப்பினர்களாக ப.அரியரத்தினம், ம.பத்மநாதன் தெரிவு செய்யப்பட்டனர். கணக்குப் பரிசோதகராக மு.சிவஞானசுந்தரமூர்த்தி தெரிவானார். (2-5-84)

# அங்குரார்ப்பணக்கூட்டம்

பூநகரி பிரதேச செயலக பிரிவு சக வாழ்வுச் சங்கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் கடந்த 11 ஆம் திகதி பூநகரி பிரதேச செயலகத்தில் பூநகரி உதவிப் பிரதேச செயலர் அ.அமல்ராஜ் தலைமையில் நடைபெற்றது. தலைவர் தலைமையில் சகவாழ்வுச் சங்கத்தின் நோக்கம், பணிகள், தொலை நோக்கு பொறுப்புக் கூறும் குழு, உறுப்புரிமை பொதுச்சபை, உபகுழுக்கள் நிதியைக் கட்டியெழுப்புதல், மேற்பார்வை மதிப்பீடு செய்தல், பதிவு செய்தல் ஆகிய விடயங்கள் சங்க யாப்பு பற்றி விளக்கமளித்தார். இக்கூட்டத்திற்கும் 19 கிராம சேவையாளர் பிரிவில் இருந்தும் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர். புதிய நிர்வாகிகள் தெரிவு இடம் பெற்றது.

இதில் தலைவர் சு.கணபதிபிள்ளை, உபதலைவர் திருமதி பா.சியாமளா, செயலாளர் மு.எமிலியாம்பிள்ளை, உசெயலாளராக திருமதி அ.லூர்த்தம்மா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயற்குழு உறுப்பினர் நால்வரும் தெரிவு செய்யப்பட்டனர். (2-5-84)

# ஆடுகளை கடத்தி இறைச்சியாக்கிய திருட்டுக் கும்பலுக்கு விளக்கமறியல்

பளை பொலிஸ் நிலையப் பிரிவில் நீண்டகாலமாக மக்களின் வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்ட நல்லின ஆடுகள் தொடக்கம் வளர்ப்பு ஆடுகள் வரை கடத்திச் சென்று இறைச்சியாக்கி விற்பனை செய்து வந்த 5 பேர் அடங்கிய திருட்டுக் கும்பலை கைது செய்து விசாரணை செய்த போது, பல்வேறு இடங்களில் இவர்களால் திருடப்பட்ட பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் அண்மையில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பளைப் பொலிஸ் நிலையப் பிரிவில் உள்ள இத்தாவில் பகுதியில் உள்ள பண்ணை ஒன்றில் கட்டப்பட்டிருந்த 2, கிடாய் ஆடுகள் களவாடப்பட்டுள்ளதாக பண்ணை உரிமையாளர் பளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ளார்.

இதனையடுத்து பளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரஞ்சன பண்டாரவின் உத்தரவுக்கமைய, பளைப் பொலிஸ் நிலையக் குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு புலன் விசாரணையின் போது கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, பளையில் களவாடப்பட்ட ஆடுகளை இறைச்சியாக்கி முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் விற்பனை செய்த போது ஆட்டு இறைச்சியுடன் 2 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர். இவர்களிடம் நடைபெற்ற விசாரணையின் போது, பளைப்பகுதியில் ஆடுகளைத் திருடும் குழுவின் இரண்டாவது தலைவர் பற்றிய தகவல் கிடைத்துள்ளது.

இந்த சந்தேக நபரை மாறு வேடத்தில் ஆடு கொள்வனவு செய்ய சென்றவர்கள் போன்று நடித்த பொலிஸார் கிளிநொச்சியில் வைத்து சந்தேக நபரைக் கைது செய்துள்ளனர். இவ்வாறு கைதான சந்தேக நபரிடம் நடைபெற்ற விசாரணையை அடுத்து இந்த திருட்டுக்குழுவின் பிரதான தலைவர் ஒருவர் பளைப் பொலிஸ் பகுதியில் உள்ள வண்ணான்கேணி என்ற இடத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

பிரதான சந்தேக நபரிடம் நடைபெற்ற தொடர் விசாரணையின் போது, இத்தாவில் பண்ணையில் கடத்தப்பட்ட ஆடுகளின் வெட்டப்பட்ட தலைகள் மற்றும் கழிவுப் பகுதிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இப் பொருட்கள் மீட்கப்பட்ட பகுதியில் இருந்த பிரதான சந்தேக நபரின் உறவினரின் வீட்டினை பொலிஸார்சோதனை செய்த போது, பளை பிரதேச சபையினால் ஏ - 9, வீதி யில் உள்ள தர்மங்கேணி பகுதியில் பேருந்து தரிப்பிடத்திலும் மற்றும் ஏனைய இடங்களிலும் வெளிச்சத்திற்காகப் பொருத்தப்பட்டிருந்த சூரிய மின்கலம் 2 மற்றும் அதனுடன் இணைந்து உபகரணங்களையும், கிளிநொச்சி பகுதியில் களவாடப்பட்ட ஆண்களுக்கான 2 துவிச்சக்கர வண்டிகளையும் கைப்பற்றியுள்ளனர்.

இச்சம்பவத்தில் கைதான 5 சந்தேக நபர்களிடம் விசாரணைகள் நடைபெற்ற நிலையில் கடந்த 21ஆம் திகதி, வெள்ளிக்கிழமை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட போது, சந்தேக நபர்களை எதிர்வரும் மே மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்துள்ளதாக பளைப் பொலிஸ் நிலையத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-15)




# பொதுக்கூட்டம்

அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 27ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறுமென தேவஸ்தான செயலாளர் அறிவித்துள்ளார்.

ஆலயத்தின் ஆயுட் கால அங்கத்தவர்கள், திருவிழா உபயகாரர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (2-5)

# வ.மா.மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழா ஜூலையில்

(பரந்தன்)

கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகமும் உயிரிழை நிறுவனமும் இணைந்து வடக்கு மாகாண மாற்றுத் திறனாளிகளுக்கான விளையாட்டு விழா இவ்வருடம் ஜூலை மாத இறுதியில் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பான ஆயத்த கூட்டம் கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் மாவட்ட அலுவலர் வே.தபேந்திரன் தலைமையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றும் சமூக சேவைகள் அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள் மாற்றுத் திறனாளிகள் தொடர்பாக இயங்கும் நிறுவனங்கள், முதியோர் சங்கங்கள், கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் உட்படுத்தல் கல்விக்கான ஆசிரிய ஆலோசகர் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். சென்ற வருடம் வவுனியாவில் தமிழ் மாற்றுத் திறனாளிகளுக்கான மாகாண விளையாட்டு விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-5-312)

# முள்ளிக்குளம் மக்களின் காணிப் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படும்-கூரே

மக்களின் சொந்தக் காணிகள் மீண்டும் மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும்என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு தீர்மானத்தை எடுத்துள்ளார். அதற்கமைவாக முள்ளிக்குளம் மக்களின் நிலங்கள் மீண்டும் மக்களிடமே மீள ஒப்படைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்" என வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

மன்னார் ஆயர் இல்லத்தின் அழைப்பை ஏற்று கடந்த 22ஆம் திகதி மாலை நில மீட்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்ற முள்ளிக்குளம் கிராம மக்களை சந்தித்த பின் அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

"மக்களினுடைய பூர்வீக நிலம் மக்களிடமே ஒப்படைக்கப்பட வேண்டும். அதே போன்று நாட்டின் பாதுகாப்பும் இருக்க வேண்டும். மக்களின் காணிகள் விடுவிப்பு குறித்து யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் அவசர கலந்துரையாடல் இடம் பெற்றது. குறித்த கலந்துரையாடலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று மக்களின் பாதிப்புக்கள் குறித்து விபரங்களை, பெற்றுக்கொள்வது. இந்த விபரங்கள்ள ஜனாதிபதிக்கு அனுப்பி உரிய தீர்வை பெற்றுக்கொள்வது என, அனைவரும் இணைந்து தீர்மானத்துக்கு வந்தனர்.

முள்ளிக்குளம் மக்களின் காணிப் பிரச்சினை தொடர்பான சகல விபரங்களும் என்னிடம் வழங்கப்பட்டுள்ளன. நான் குறித்த பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்து உரையாடவுள்ளேன். அதன்போது, முள்ளிக்குளம் மக்களின் பிரச்சினை குறித்து அவருக்கு தெளிவுபடுத்துவேன். நீங்கள் தொடர்ந்தும் கஷ்டப்பட வேண்டாம். இந்த அரசாங்கத்துக்கு மக்களாகிய உங்களின் காணிகள் தேவையில்லை.

கடந்தகாலங்களைபோன்று படையினருக்கு அதிகள வான காணிகள் தேவையில்லை. இராணுவ அதிகாரிகளுக்கு மக்களின் காணிகளை மீள மக்களிடம் வழங்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளது. அது நல்ல நோக்கம். எனவே, முள்ளிக்குளம் மக்களின் காணி பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியை சந்தித்து நல்லதொரு முடிவொன்றை பெற்றுக்கொண்டு மீண்டும் முள்ளிக்குளம் மக்களாகிய உங்களை சந்திக்க இங்கே வருவேன்" என, வடமாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார். (2-5-281)

# மாங்குளத்தில் புனர்வாழ்வு வைத்தியசாலை அமைப்பதற்கான கட்டடப்பணிகள் ஆரம்பம்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சு தெரிவிப்பு



முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் புனர்வாழ்வு வைத்தியசாலை ஒன்றை அமைப்பதற்கான ஆரம்பகட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இலங்கையில் அமைக்கப்படும் முதலாவது நவீன வசதிகளைக் கொண்ட புனர்வாழ்வு வைத்தியசாலை ஆகும் என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் டாக்டர் பா. சத்திய லிங்கம் தெரிவித்தார். மல்லாவி ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட சத்திரசிகிச்சை பிரிவுக்கான கட்டடத்தொகுதியை கடந்த 20ஆம் திகதி திறந்து வைத்து உரையாற்றியபோதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாண சபை என்ன செய்தது என்று குறைகளை மட்டுமே கூறிவருபவர்களுக்கு ஒன்றை திட்டவட்டமாக கூற விரும்புகின்றேன். நவீன விஞ்ஞான முறையிலான திட்டமிடலை துறைசரர் நிபுணர்களுடன் கலந்துரையாடி முன்னெடுத்து வருகின்றோம். இதற்காக 17 துறை சார் உப குழுக்களை அமைத்து அவர்களின் ஆலோசனைக்கமைவாக நீண்டகால தந்திரோபாய திட்டமொன்றினை தயாரித்துள்ளோம். மாகாண சுகாதார அபிவிருத்தி தொடர்பாக தயாரிக்கப்பட்ட இந்த மூன்றாண்டு செயற்றிட்டத் திணடிப்படையில் அபிவிருத்தி திட்டங்களை செய்து வருகின்றோம். இந்த வைத்தியசாலையில் சிறுநீரக நோய் சிகிச்சைப்பிரிவுக்கான கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. மிக விரைவில் அதனையும் மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கவுள்ளோம். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் மாங்குளத்தில் ஒரு புனர்வாழ்வு வைத்தியசாலையொன்று அமைப்பதற்கான ஆரம்ப கட்ட பணிகள் நடைபெற்று வருகின் றன. இதன்மூலம் கொடிய யுத்தத்தினால் அங்கவீனமடைந்த எமது உறவுகள் பயன் பெறமுடியும். இதற்கான நிதியுதவி நெதர்லாந்து அரசினால் வழங்கப்படவுள்ளது. இங்கு ஹைரோதெரப்பி முறையிலான சிகிச்சை வசதிகள் ஏற்படுத்தப் படவுள்ளன என்றார். (2-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்திரை மாத இராசி பலன்கள்

## 14.04.2017-14.05.2017



புதிய பாதையை அமைத்துக் கொள்ள விரும்பும் துலாம் இராசி அன்பர்களே!

சித்திரை மாதக் திரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றும், வக்ரம் பெற்றும் உள்ளார். சுக்ரன் உங்கள் இராசிக்கு அஷ்டமாதிபதியாகவும் விளங்குவதால் அவர் வக்ரம் பெறுவது மிக மிக நன்மையைக் கொடுக்கும். விபரீத ராஜயோக அடிப்படையில் மாதத் தொடக்கத்திலேயே மகிழ்ச்சியான காரியங்கள் நடைபெறும். தொழிலில் இழப்புகளை சந்தித்தவர்கள், படிப்படியாக முன்னேறுவர். அடிப்படை வசதிகள் பெருகும். ஆதாயம் தரும் செயல்களில் கவனத்தைச் செலுத்துவீர்கள்.

வெளிநாட்டில் இருந்து வரும் அழைப்புகள் உங்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து தருவதாக அமையும். சண்டை போட்ட குடும்ப உறுப்பினர்கள் இனி சமாதான மடைவர். வீட்டில் இருந்தபடியே சம்பாதிக்க வேண்டுமென்று நினைப்பீர்கள்.

தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் சனிபகவான் வக்ர இயக்கத்தில் இருப்பதால், விரயங்கள் கூடும். அது வீடு சம்பந்தமாகவும் இருக்கலாம், நாடு சம்பந்தமாகவும் இருக்கலாம். எந்த ஒரு செயலைச் செய்தாலும் அதைக் குடும்பப் பெரியவர்களிடம் கலந்து ஆலோசித்து செய்வது நல்லது. ஏழரைச் சனி விலகும் வரை சற்று பொறுமையைக் கடைப்பிடியுங்கள். அதிகாலையில் ஆனைமுகப் பெருமானையும், சனிபகவானையும், அதற்குப்பின் அனுமனையும் வழிபட்டால் சனியால் ஏற்படும் சங்கடங்கள் அகலும்.

ராகு உங்கள் இராசிக்கு 11ஆம் இடமான லாப ஸ்தானத்திலும், கேது உங்கள் இராசிக்கு 5ஆம் இடத்திலும் சஞ்சரிக்கின்றனர். மாதத் தொடக்கம் முதலாக ராகுவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால் கோபம் அதிகரிக்கும். கேது கொடுக்கும் இலாபத்தில் கொஞ்சம் குறைவாக செய்துவிடுவார். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கலாம். பிள்ளைகள் உங்களைக் கலந்து ஆலோசிக்காமல் சில முக்கிய முடிவுகளை எடுக்க நேரிடும். எனவே இதுபோன்ற காலங்களில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களை முறையாகச் செய்வது நல்லது.

சுக்ரனின் வக்ர நிவர்த்தி காலம்

மீனத்தில் உச்சம்பெற்ற சுக்ரன், 19ஆம் திகதி (புதன்கிழமை) வக்ர நிவர்த்தியடைகிறார். இராசிநாதன் வக்ர நிவர்த்தியடையும் பொழுது, எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். எதிர்பாராத விதத்தில் தனவரவு வந்து சேரும். உத்தியோகத்தில் ஊதிய உயர்வும், இலாகா மாற்றங்களும் வந்து சேரும். இல்லத்தில் மகிழ்ச்சி நிலவும். நீண்ட நாளைய வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டு.

புதனின் வக்ர நிவர்த்தி காலம்

24ஆம் திகதி (திங்கட்கிழமை) புதன் வக்ர நிவர்த்தியாகிறார். 9,12 ஆகிய இடங்களுக்கு அதிபதியான புதன் வக்ர நிவர்த்தியானதும் பங்காளி பகை மாறும். தடைகள் அகலும். ஊர் மாற்றங்கள் எளிதில் கிடைக்கும். உறவினர்கள் வழியில் ஏற்படும் மங்கள நிகழ்வு ஒன்றை முன்னின்று நடத்தி வைப்பீர்கள். காரசாரமாக விவாதித்து வீட்டை




விட்டுச் சென்ற நண்பர்கள், மீண்டும் உங்களை வந்து சேருவர்.

## கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்!

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

மேஷ புதனின் சஞ்சாரம்!

மே 8ஆம் திகதி மேஷ இராசிக்கு புதன் வரப்போகிறார். விரயாதிபதி உங்கள் இராசியைப் பார்ப் பது அவ்வளவு நல்லதல்ல. எதிர்பாராத விரயங்கள் ஏற்படலாம். 9இற்கு அதிபதியாகவும் புதன் விளங்குவதால், முன்னோர் வழிச் சொத்துகளில் முறையான பங்களிப்பு கிடைக்கும். கோவில் திருப்பணிகளை முன்னின்று நடத்துவீர்கள். தொழிலில் கூடுதல் இலாபம் கிடைத்தாலும், பற்றாக்குறை அதிகரித்துக் கொண்டேயிருக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பிற இனத்தவரால் உங்கள் வாழ்க்கையில் பெருமை சேரும்.

இம்மாதம் சனி பகவானை வழிபாடு செய்யுங்கள். சனி கவசமும் பாடி வாருங்கள். குச்சானூர், திருநள்ளாறு போன்ற ஸ்தலங்களுக்குச் சென்று வழிபட்டு வரலாம். காகத்திற்கு சோறிடுவதும் நல்லது.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

இராசிநாதன் சுக்ரன் உச்சம் பெற்றிருப்பதால் எண்ணங்கள் எளிதில் நிறைவேறும். சொன்ன சொல்லைக் காப்பாற்றும் சூழ்நிலை உருவாகும். பொருளாதாரத்தில் நிறைவு காண்பீர்கள். பிள்ளைகளால் உதிரி வருமானம் உண்டு. கணவன்-மனைவிக்குள் பாசம் அதிகரிக்கும். கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்துசேருவர். சகோதரர்களில் ஒருசிலர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர். பெற்றோர் வழியில் வந்த பிரச்சினை தீரும். நேர்முகத் தேர்வில் இதுவரை வெற்றி கிடைக்காதவர்கள் இப்பொழுது வெற்றி கிடைத்து உத்தியோகத்தில் சேருவர். சுபச்செலவுகள் மாதக்கடைசியில் அதிகரிக்கும். பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.



சொல்லும் சொற்களை வெல்லும் சொற்களாக்கும் விருச்சிக இராசி அன்பர்களே!

சித்திரை மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் செவ்வாய் உங்கள் இராசியைப் பார்க்கும் விதத்தில் அமைந்திருக்கிறது. இருப்பினும் தனாதிபதி குரு, இலாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் பணவரவு திருப்தியாகும். தொழிலில் முன்னேற்றம் காணப்படும். சென்ற மாதத்தைக் காட்டிலும் சிறப்பான பலனைக் காண்பீர்கள். காரணம் தனாதிபதியான குருவும், இலாபாதிபதியான புதனும் பரிவர்த்தனை யோகம் பெறுகிறார்கள். தொழில் ஸ்தானாதிபதி சூரியன் உச்சம் பெற்றுச் சஞ்சரிக்கிறார். ஜென்மச் சனியும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். எனவே வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வசதி வாய்ப்புகள் பெருகும். வருங்கால நலன் கருதிச் சேமிக்கும் தொகை அதிகரிக்கும்.

குருவின் பார்வை 3,5,7 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே முன்னேற்றத்தின் முதல் படிக்குச் செல்ல வாய்ப்புகள் கைகூடிவரும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். தடைப்பட்ட காரியங்கள் தானாக நடைபெறும். தனவரவு திருப்திகரமாக இருக்கும். குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி நீங்கள் எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். மங்கள ஓசையும், மழலை ஓசையும் மனையில் கேட்க வழிபிறக்கும்.

இதுவரை பலம் பெற்றிருந்த ஜென்மச் சனி, இப்பொழுது வக்ரம் பெறுகிறார். எனவே ஆரோக்கியத் தொல்லை அகலும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரைகுறையாக நின்ற பணிகள் நிறைவேறும். அடுத்தவர்களுக்கு வாங்கிக் கொடுத்த தொகை திரும்பக் கிடைத்து ஆனந்தப்படுத்தும்.

உச்சம் பெற்ற சுக்ரன், வக்ரம் பெற்ற குருவால் பார்க்கப்படுவது ஒரு வழிக்கு நன்மைதான். குருவும் வக்ரம் பெற்றிருப்பதால் நீங்கள் ஆச்சரியப்படும் விதத்தில் பல சம்பவங்கள் நடைபெறப்போகிறது. பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். பூமி வாங்கும் யோகம் அல்லது வீட்டைப் பராமரிக்கும் அமைப்பு ஏற்படும். புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து தொழில் வளர்ச்சிக்கு வித்திடுவர். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு அதிகாரிகள் அனுகூலமாக இருப்பார்கள்.

புத- சுக்ர யோகம் செயற்படும் இந்த மாதத்தில் விலையுயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். சித்ரா பௌர்ணமியன்று சித்ரகுப்தன் வழிபாட்டை மேற்கொள்வதோடு, மலைவலம் வருவதன் மூலம் மகத்துவங்களை பெறலாம்.

சுக்ரனின் வக்ர நிவர்த்தி காலம்

மீனத்தில் உச்சம் பெற்று சஞ்சரிக்கும் சுக்ரன், இம்மாதம் வக்ர நிவர்த்தியாகிறார். இதன் விளைவாக களத்திர ஸ்தானம் மற்றும் அயன சயன ஸ்தானத்திற்கு அதிபதியாக விளங்கும் சுக்ரன் பலம் பெறுவதால், மணவிழா, மணி விழா,




முத்துவிழா, பவளவிழா, கடை திறப்பு விழா, கட்டடத் திறப்புவிழா போன்ற மங்கள நிகழ்வுகள் இல்லத்தில் நடைபெறும். பூர்வீக இடமொன்றின் மூலம் பெரிய தொகை கைக்கு கிடைக்கலாம். வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஒரு சிலருக்கு கைகூடும்.

## கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும்!

புதனின் வக்ர நிவர்த்தி காலம்

உங்கள் ராசிக்கு அஷ்டம லாபாதிபதியாக விளங்குபவர் புதன். அவர் வக்ர நிவர்த்தியடைவது நன்மைதான். இலாபாதிபதி வக்ர நிவர்த்தியானால் வருமானம் இருமடங்காகும். செய்ய நினைத்ததை உடனடியாகச் செய்து முடிப்பீர்கள். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். உறவினர்களின் பகை மாறும். உயர் அதிகாரிகள் உங்களுக்கு உறுதுணையாக இருப்பார்கள்.

மேஷ புதனின் சஞ்சாரம்

அஷ்டம ஸ்தானத்திற்கு அதிபதியான புதன் 6ஆம் இடத்திற்கு வருவது யோகம் தான். அந்த நிகழ்வு மே 8ஆம் திகதி நிகழவிருக்கிறது. உங்கள் இராசியைப் பொறுத்தவரை இலாபாதிபதியாகவும் புதன் விளங்குவதால், புதிய தொழில் தொடங்கும் திட்டம் நிறைவேறும். வாகன யோகம் உண்டு. உத்தியோகத்தில் எதிர்பார்த்த மாறுதல், ஊதிய உயர்வு உண்டாகும்.

இம்மாதம் சனிக்கிழமை தோறும் விநாயகரையும், அனுமனையும் வழிபாடு செய்வது பலன் தரும்.

பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்

உங்களுக்கு நாலா புறங்களில் இருந்தும் நல்ல தகவல் வந்து சேரும். பெற்றோர் அதிக பாசம் காட்டுவர். கணவன்- மனைவிக்குள் அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் சரளமாகும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கலாம் என்று குடும்பத்தினர் பச்சைக்கொடி காட்டுவர். சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால், உடல் ஆரோக்கியம் சீராகும். உடன்பிறப்புகளும் உங்கள் தொழிலுக்கு உறுதுணையாக இருப்பர். கல்விக்காக எடுத்த முயற்சி கைகூடும். பிள்ளைகளின் பிடிவாதக் குணம் மாறி, உங்கள் கருத்துக்கு ஒத்துவருவர். தங்கம், வெள்ளி, ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டு. நந்தி வழிபாடு நலம் சேர்க்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைத்தீஸ்வரக் குருக்களின் ஆளுமைச் சுவடு

அந்தணர்க்குண் மணியனையானருங்கலைகள்
மிகப்பயின்றானருமையாசான்
சந்ததமுஞ் சிவனன்புதழைக்கின்ற
வுள்ளத்தான் றகைசால் நண்பன்
கந்தமலிபூம்பொழில் சூழ் திண்ணபுரங்
கவினோங்குங்கருத்துமிக்கான்
வந்தவருக் கமுதளிப்பான்
வண் பெயர்கொள்
வைத்தீஸ்வரக் குருக்கள்
-ஈழத்துச்சிதம்பரபுராணம்-



இன்று (24-04-2017) வைத்தீஸ்வரக் குருக்கள் அவர்களின் இரண்டாவது நினைவுதினமாகும். அதனை முன்னிட்டு இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.

சைவப்பணி,தமிழ்ப்பணி,நூல் வெளியீட்டு பணி எனப் பன்முக ஆளுமைகளில் தன்னை ஈடுபடுத்தி, அர்ப்பணித்த பெருந்தகை மூதறிஞர் கலாநிதி வைத்தீஸ்வரக்குருக்கள் ஆவார். யாழ்ப்பாணத்துக் காரைநகரின் புகழ் பூத்த சைவத் திருத்தலமான ஈழத்து சிதம்பரத்தின் அந்தணப் பரம்பரையில் தோன்றிய சிவத்திரு கணபதீஸ்வரக் குருக்கள் சிவயோக சுந்தராம்பாள் தம்பதிகளின் இளையமகனாக 1916-09-22 ஆம் திகதி குருக்கள் அவதரித்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலையிலும், (சடையாளிப் பள்ளிக்கூடம்) இடைநிலைக் கல்வியை காரைநகர் இந்துக்கல்லூரியிலும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் கற்று சமஸ்கிருதத்தில் பிரவேச பண்டித பரீட்சையிலும் தமிழில் பாலபண்டித பரீட்சையிலும் சித்திபெற்றார்.

குருக்களின் சுவடுகள் சைவப் பணியில் மிகவும் ஆழமாக பதித்த சுவடாக மிளிர்ந்தது காரைநகர் மணிவாசகர் சபையின் தோற்றம் ஆகும். சபையினை ஆரம்பிக்கமுன்னர் யாழ்ப்பாணத்து யோகர் சுவாமிகளின் ஆசிபெறச் சென்ற போது அவர் "வேண்டத்தக்கதறிவோய்நீ" என்ற திருவாசகத்தை பாடி ஆசி வழங்கியதன் பெயராக 1940-01-01 ஆம் திகதி மணிவாசகர் சபை ஆரம்பமானது. இச்சபை மூலம் குருக்கள் சைவ உலகுகக் ஆற்றியபணிகள் கணக்கிலடங்கா.

காரைநகரில் 1960 ஆம் ஆண்டு தமிழ் வளர்ச்சிக் கழகத்தை அமைத்து அதன் மூலம் பல தமிழ் பணிகள் செய்தார். க.பொ.த (சா/த) மாணவர்களுக்கு பகுதி ஒன்றிற்கான தமிழ் மாதிரி வினாத்தாள் வெளியிட்டு மாணவரின் கல்விப் பணிக்கு உதவினார்.

இக் கழகத்தின் செயற்பாடு 1970- 1980 தசாப்தங்களில் மிகவும் சுடர் விட்டு பிரகாசித்தது. காரைநகர் தமிழ் வளர்ச்சிக் கழகம் மூலம் 26 நூல்கள் வெளியிட்டார். இவற்றுள் கந்தர்மடம் சுவாமிநாத பண்டிதரால் எழுதப்பட்ட திருமுறைப் பெருமை, கார்த்திகேயப் புலவரால் இயற்றப்பட்ட திண்ணபுர அந்தாதி என்பவை குறிப்பிடத்தக்கவையாகும்.

மணிவாசகர் சபையினூடான குருக்களின் சைவப் பணியும், தமிழ்வளர்ச்சிக் கழகமூடான, தமிழ்ப்பணியும் சைவத்தமிழ் பாரம்பரியத்தில் அவரின் ஆளுமை தடத்தைப் படிப்படியாக பதிக்க வைத்தது. இவ்வாறே அவர்களின் நூல் வெளியீட்டுப் பணிகள்.இதனைமேலும் வலுவூட்டியது. தமிழ் வளர்ச்சிக்கழகம் ஊடாக பல்வேறு வகையான நூல்களை வெளியிட்டபோதும், இவையெல்லாவற்றுக்கும் மேலாக ஈழத்துச் சிதம்பர புராணத்தின் வெளியீடு கோடிட்டுக் காட்டப்படவேண்டியதொன்றாகும்.

ஈழத்துச் சிதம்பரத்தின் மூலமூர்த்தியான ஆண்டிகேணி ஐயனாருக்கு புராணம் இயற்றவேண்டும் என்ற சிந்தனையால் ஈர்க்கப்பட்ட குருக்கள், வட்டுக்கோட்டைப் பண்டிதர் மயில்வாகனம் மூலம் ஆண்டிகேணி ஐயனார் புராணத்தை இயற்றுவித்து சைவப் புலவர் செல்லத்துரையினால் உரை செய்வித்து மணிவாசக சபை ஊடாக 2007 ஆம் ஆண்டு வெளியிட வைத்தவர்.

ஈழத்துச் சிதம்பர புராணத்துக்கு "சிறந்த முடிவுகளை உடையநூல்" என்று 1974 ஆண்டு ஜனவரி 29 ஆம் திகதி இலங்கை தேசியநூல் அபிவிருத்தி சபையால் பாராட்டப் பட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

குருக்களுக்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் 13-10-2002 இல் "தத்துவகலாநிதி" பட்டத்தினையும் வழங்கி கௌரவித்தது. 1995 இல் இலங்கை கம்பன் கழகம் "மூதறிஞர்" என்ற பட்டத்தினையும் 18-11-2001 இல் "கலைஞானகேசரி" என்ற பட்டத்தை வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு, கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு வழங்கி கௌரவித்தனர்.

04-11-2007 இல் சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் "சிவாகம கிரியா பூஷணம்"என்றபட்டம் வழங்கிக் கௌரவித்தனர். இவ்வாறாகப் பலவிருதுகள், பாராட்டுக்கள் பட்டங்கள் என்பவை குருக்களின் சேவையை கௌரவப் படுத்தி, முதன்மைப்படுத்தியமை சைவத்தமிழ் பாரம்பரியத்தில் அவரின் ஆளுமைச் சுவடுகளுக்கு குறிகாட்டிகளாக அமைந்துள்ளன.

குருக்கள் தன்னிடம் இருந்து 5000 இற்கு மேற் பட்ட நூல்களில் பலவற்றை மகாராணி சோமசேகரத்திடம் கையளித்தார். அவர் காரைநகர் வியாவில் ஐயனார் கோவிலில் புதிய கட்டடம் அமைத்து குருக்கள் ஐயாவின் தந்தையார் பெயரிலான "கணபதீஸ்வரக்குருக்கள் நூல் நிலையம்" என் அமைக்கப்பெற்று நடைபெற்றுவருகிறது.

சைவத்துக்கும் தமிழுக்கும் பல்வேறு வகையான சேவைகளை அர்ப்பண உணர்வுடன் செயற்பட்டு தனதுஆளுமைச் சுவடுகளை சைவத் தமிழ் பாரம்பரியத்தில் ஆழமாக பதித்த குருக்கள் ஐயா 24-04-2015 அன்று ஈழத்துச் சிதம்பர கூத்தப்பிரான் திருவடி நிழலை அடைந்தார்.

"நாவலர் வழியில் சைவத் தமிழ் பாரம்பரியத்தில் சுவடுகள் பதித்த குருக்கள் ஐயாவின் புகழ் ஓங்குக".

வே.முருகமூர்த்தி,
தலைவர்,காரைநகர் மணிவாசகர் சபை.

# மற்றுமொரு குப்பைமேடு சரிந்து விழும் அபாயம்

## புவியியல் பேராசிரியர் எச்சரிக்கை



கண்டி நகர பிரதேச குப்பைகள் கொட்டப்படும் கொஹாகொட குப்பை மேடும் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதாக பேராதனை பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் அத்துல சேனாரட்ன எச்சரிக்கை செய்துள்ளார்.

நீண்டகாலமாக கண்டி நகர பிரதேச குப்பைகள் கொஹாகொடையில் கொட்டப்பட்டு வருகின்றது. நாள் ஒன்றுக்கு சுமார் 100 தொன் வரையிலான குப்பைகள் இங்கு கொட்டப்படுகின்றன. ஒரு மலையடிவாரப் பகுதியில் இந்த குப்பை மேடு அமைந்துள்ளது. எவ்வேளை யிலும் சரிந்து விழும் அபாயம் காணப்படுகின்றதெனவும் அவர் தெரிவித்தார்.

இக்குப்பை மேடு சரிந்து விழும் பட்சத்தில் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுவதுடன் அருகிலுள்ள சிற்றோடைகளிலும் கலந்துவிடக்கூடும். இவ்வோடைகள் மகாவலி கங்கையில் சங்கமமாகி மகாவலி கங்கைக்கும் மாசு ஏற்படுத்தலாம். எனவே இக் குப்பைமேடு குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

# இந்தியப் பிரதமருக்கு முன்னதாக இலங்கை வரும் சீனத் தலைவர்



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு முன்னர் சீனாவின் மூன்றாம் நிலை தலைவர் ஒருவர் இலங்கைக்கு வருகின்றார். அம்பாந்தோட்டை துறைமுக திட்டத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் நிலைமைகளை சீர்ப்படுத்துவது சீன தலைவரின் முக்கிய பணியாக அமைந்துள்ளது.

ஆனால் அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்கள் தொடர்பில் சீனா திருப்திகரமான நிலையில் இல்லை.

இந்நிலையில் அரசாங்கம் அம்பாந்தோட்டை துறைமுக திருத்தப்பட்ட உடன்பாட்டு வரைபினை அமைச்சரவையில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதனடிப்படையில்,அம்பாந்தோட்டை துறைமுகத்தின் குத்தகை காலம் 99 ஆண்டுகளில் இருந்து 50 தொடக்கம் 60 வரையான ஆண்டு காலத்துக்கு குறைத்தல் , குத்தகைக்காலம் முடிவடைந்த பின்னர் திரும்பக் கையளித்தல், குத்தகை உரிமையை 80:20 என்ற விகிதத்தில் இருந்து 60:40 வீதம் அல்லது 51:49 வீதம் எனக்குறைத்தல்மற்றும்துறை முகத்தின் பாதுகாப்புக்கு இலங்கை பொறுப்புக் கூறும் என்ற வகையிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றை சாதகமான முறையில் கையாள்வதற்காக சீன அரசாங்கத்தின் மூன்றாம் நிலை தலைமையிலான குழு அடுத்த வாரத்தில் இலங்கை வரவுள்ளது. இவர்கள் அரசாங்கத்தின் உயர் மட்டத்தினருடன் சந்தித்து அம்பாந்தோட்டை துறைமுக விவகாரம் தொடர்பில் முக்கிய தீர்மானங்களை எடுக்கவுள்ளனர்.

இதேவேளை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு மேற்கொள்ளவுள்ள விஜயத்தின் போது கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட உள்ளது. (இ-7)

# ரணதுங்க குடும்பத்தாரின் ஆதரவின்றி மகிந்தவால் அரசியல் செய்ய முடியாது

## அர்ஜுன ரணதுங்க கூறுகிறார்





(கொழும்பு)

ரணதுங்க குடும்பத்தின் உதவியின்றி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் கம்பஹாவில் அரசியல் செய்ய முடியாது.

எனவே அவர் தற்போதாவது ரணதுங்க குடும்பத்தாரின் முக்கியத்துவத்தினை விளங்கிக்கொண்டுள்ளமை புதுமையாகவுள்ளதென துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு சைத்தியவில் நேற்று இடம்பெற்ற மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ரெஜீ ரணதுங்கவின் 80 ஆவது ஜனன தின நிகழ்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர்மேற்கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டை இலை சின்னத்தைப்பெற இலஞ்சம்; தினகரனிடம் 7 மணி நேரம் தீவிர விசாரணை

(டில்லி)

இரட்டை இலைச் சின்னத்தை பெற ரூ.50 கோடி இலஞ்சம் கொடுக்க முயன்றது தொடர்பான வழக்கில், டி.டி.வி.தினகரனிடம் டில்லி பொலிஸார் 7 மணி நேரம் துருவித் துருவி விசாரணை நடத்தினார்கள்.

ஜெயலலிதா மறைவுக்கு பின் அ.தி.மு.க. இரண்டாக உடைந்ததால் இரட்டை இலைச் சின்னத்தை தேர்தல் ஆணையம் முடக்கியது.

இந்த நிலையில் இரட்டை இலைச் சின்னத்தை மீளப் பெற, அ.தி.மு.க. அம்மா கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் டி.டி.வி. தினகரன், இடைத்தரகர் சுகேஷ் சந்திரசேகர் என்பவரிடம் ரூ.50 கோடி பேரம் பேசியதாக குற்றம்சாட்டப்பட்டு உள்ளது.

டில்லியில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கி இருந்த சுகேஷ் சந்திரசேகரை கடந்த 17 ஆம் திகதி கைது செய்து விசாரித்த போது, இரட்டை இலைச் சின்னத்தை பெற டி.டி.வி. தினகரன் ரூ.50 கோடி பேரம் பேசிய தகவல் தெரிய வந்ததாக டில்லி பொலிஸார் தெரிவித்தனர். சுகேஷ் சந்திரசேகரிடம் இருந்து ரூ.ஒரு கோடியே 30 இலட்சம் பணம், 2 சொகுசு கார்களை பறிமுதல் செய்துள்ள பொலிஸார் அவர் மீது வழக்கு பதிவு செய்து அவரை தங்கள் காவலில் வைத்து விசாரித்து வருகின்றனர்.

தேர்தல் ஆணையத்துக்கு ரூ.50 கோடி இலஞ்சம் கொடுக்க முயன்றது தொடர்பான வழக்கில், டில்லி பொலிஸார் டி.டி.வி. தினகரனிடம் விசாரணை நடத்த முடிவு செய்தனர். விசாரணைக்காக நேற்று முன்தினம் சனிக்கிழமை நேரில் ஆஜராகுமாறு கோரி சம்மன் வழங்கினார்.

அதை ஏற்று, விசாரணைக்காக டி.டி.வி. தினகரன் விமானம் மூலம் நேற்று காலை சென்னையில் இருந்து டில்லி புறப்பட்டு சென்றார்.

அவர் சென்ற விமானம் பிற்பகல் 12.15 மணிக்கு டில்லி போய்ச் சேர்ந்தது. அவரை அழைத்துச் செல்வதற்காக டில்லி பொலிஸார் விமான நிலையத்துக்கு வந்து இருந்தனர். 12.30 மணிக்கு டி.டி.வி.தினகரன் விமான நிலையத்தில் இருந்து வெளியே வந்தார்.



அப்போது அவர் நிருபர்களிடம் பேசுகையில், பொலிஸ் விசாரணைக்காக டில்லி வந்து இருப்பதாகவும் சுகேஷ் சந்திரசேகரை தனக்கு தெரியாது என்றும், அவருடன் அறிமுகம் கிடையாது என்றும் கூறினார்.

பின்னர் பொலிஸார் அவரை அங்கிருந்து சாணக்கியபுரியில் உள்ள குற்றப்பிரிவு அலுவலகத்துக்கு பிற்பகல் 3 மணிக்கு அழைத்துச் சென்றனர்.

அங்கு டி.டி.வி. தினகரனை தனி அறையில்வைத்து உதவி ஆணையர் சஞ்சய் ஷெராவத், துணை ஆணையர் மதுர் வர்மா, இன்ஸ்பெக்டர்கள் நரேந்திர ஷாகல், ரித்தேஷ் சிங் ஆகியோர் விசாரணை நடத்தினார். சுகேஷ் சந்திரசேகருக்கும், அவருக்கும் உள்ள தொடர்பு, பணப்பரிமாற்றம், தேர்தல் ஆணையத்தில் உள்ள அதிகாரிகள் யாருடனாவது தொடர்பு வைத்து இருந்தானரா? என்பன போன்ற பல்வேறு கேள்விகளை கேட்டு 7 மணி நேரம் துருவித்துருவி விசாரணை நடத்தினார்.

பிற்பகல் 3 மணிக்கு தொடங்கிய விசாரணை இரவு 10 மணி வரை நடைபெற்றது. அப்போது டி.டி.வி. தினகரனுடன் அவரது சட்டத்தரணிகள் யாரும் இருக்க பொலிஸார் அனுமதிக்கவில்லை.

விசாரணையின் போது, டி.டி.வி. தினகரனின் தொலைபேசியை அதிகாரிகள் வாங்கி வைத்துக் கொண்டனர். அந்த தொலைபேசிக்கு வந்த அழைப்புகள், குறுந்தகவல்கள், அதில் இருந்து பேசப்பட்ட அழைப்புகள், 'வட்ஸ்அப்' தகவல்கள் ஆகியவற்றை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

விசாரணை முடிந்ததும் டி.டி.வி. தினகரன் அங்கிருந்து புறப்பட்டு சென்றார்.(இ-3)

## பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலுக்காக புதுவையில் நேற்று வாக்குப்பதிவு

(புதுச்சேரி)

புதுவையிலும் பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நேற்று நடைபெற்றது.

பிரான்ஸ் நாட்டு ஜனாதிபதித் தேர்தல் நேற்று நடந்தது. இத்தேர்தலில் பிராங்கோயிஸ் பைலான், பெனாய்ட் ஹாமன், மரைன் லி பென், இம்மானுவேல் மக்ரான், ஜீன் லக் மெலன்சினான் உள்ளிட்ட 5 முக்கிய வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். முதல் சுற்று வாக்குப்பதிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை நடை பெற்றது.



இத்தேர்தலில் புதுவையில் உள்ள பிரான்ஸ்துணைத் தூதரகத்துக்குட்பட்ட புதுவை, தமிழகம், கேரளம், அந்தமான் நிகோபார், லட்சத்தீவுகள் பகுதிகளில் வசிக்கும் பிரெஞ்சு குடியுரிமை பெற்ற வாக்காளர்கள் ஏறக்குறைய 5 ஆயிரம் பேர் வாக்களித்தனர். (இ-3)

## தி.மு.கவின் முழுஅடைப்பு போராட்டம் அரசியல் அடையாள நடவடிக்கையே

(சென்னை)

தி.மு.கவின் முழு அடைப்பு போராட்டம் அரசியல் அடையாளம் தேடும் நடவடிக்கையே தவிர விவசாயி களை காப்பதற்கான முயற்சி அல்ல என்று பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் குற்றம்சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக நேற்று அவர் வெளியிட்ட அறிக்கையில், "பொதுத்துறை வங்கிகளில் பெறப்பட்ட பயிர்க் கடன் தள்ளுபடி உள்ளிட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை மத்திய அரசு ஏற்க மறுப்பதைக் கண்டித்து தமிழகத்தில் நாளை முழு அடைப்பு போராட்டம் நடத்தப்படும் என்று தி.மு.க. நடத்திய அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இம்முடிவு நேற்று முன்தினம் நடந்த கலந்தாய்வுக் கூட்டத்திலும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது அரசியல் அடையாளம் தேடும் நடவடிக்கையே தவிர விவசாயிகளை காப்பதற்கான முயற்சி அல்ல என்பதே பா.ம.கவின் கருத்து.

### ராமதாஸ் குற்றச்சாட்டு

பயிர்க்கடனை தள்ளுபடி செய்ய வேண்டும், ஜப்தி நடவடிக்கைகளை கைவிட வேண்டும், காவிரி மேலாண்மை வாரியத்தை அமைக்க வேண்டும், வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கும், உயிரிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கும் நிவாரண நிதி வழங்க வேண்டும், நதிகளை இணைக்க வேண்டும்என்பன உள்ளிட்ட விவசாயிகளின் அனைத் துக் கோரிக்கைகளையும் பா.ம.க. ஆதரிக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

பாரதச் செய்தி

## ஓ.பி.எஸ். அணியுடனான பேச்சு சுமுகமாக அமையும்

## செங்கோட்டையன் நம்பிக்கை



(டில்லி)

ஓ.பி.எஸ். அணியுடன் விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப்படும் எனவும் இந்த பேச்சுவார்த்தை சுமுகமாக அமையும் எனவும் எடப்பாடி பழனிச்சாமியின் ஆதரவாளர், அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஈரோடு மாவட்ட ஆட்சியாளர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற வரட்சி மற்றும் குடிநீர் தொடர்பான ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டு அணிகளும் இணைவது குறித்த பேச்சுவார்த்தையை முன்னெடுக்க திகதி ஒன்று தீர்மானிக்கப்படும் எனவும் அந்த திகதியில் இரு அணியும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

கல்வித்துறையில் ஊழல் இடம்பெற்றுள்ளதாக டாக்டர் ராமதாஸ் தெரிவித்துள்ள நிலையில் இது குறித்து விசாரணை முன்னெடுக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போது தமிழகத்தில் காணப்படுகின்ற பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் மத்திய அரசுக்கு வலியுறுத்தல் விடுக்கப்படும் எனவும் செங்கோட்டையன் தெரிவித்தார். (இ-3)

# விவசாயிகளின் கோரிக்கைகளை பிரதமர் மோடியிடம் முன்வைப்பேன்

## போராட்டக்களத்தில் முதல்வர் பழனிச்சாமி உறுதி

(டில்லி)

தமிழக விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பாக பிரதமர் மோடியிடம் நேரில் வலியுறுத்தவுள்ளதாக, டில்லி போராட்டக்களத்தில் உள்ள தமிழக விவசாயிகளிடம் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி உறுதியளித்தார்.


டில்லி - ஜந்தர் மந்தரில் தமிழக விவசாயிகள் நடத்தி வரும் போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 41-வது நாளை எட்டியுள்ளது.

தேசிய தென்னிந்திய நதிகள் இணைப்பு விவசாயிகள் சங்கம் சார்பில் அதன் தலைவர் பி.அய்யாகண்ணு தலைமையில் இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. வங்கிக் கடன் இரத்து, வரட்சிக்கான கூடுதல் நிவாரணம் மற்றும் காவிரி மேலாண்மை அமைப்பது உட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றனர். நாள்தோறும் அரசு மற்றும் பொதுமக்கள் கவனத்தை கவரும் வகையில் பல்வேறு வகை போராட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

மத்திய திட்டக் குழுவுக்கு பதிலாக அமைக்கப்பட்ட நிதி ஆயோக் அமைப்பின் கூட்டம், டில்லியில் குடியரசுத் தலைவர் மாளிகை வளாகத்தில் நேற்று முற்பகல் 10 மணி அளவில் நடந்தது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் நிதி ஆயோக் உறுப்பினர்களான மாநில முதல்வர்கள் பங்கேற்றனர். இதில் கலந்துகொள்வதற்காக தமிழக முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி டில்லிக்குச் சென்றார்.

இந்த நிலையில், டில்லியில் போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகளை சந்தித்துப் பேசினார். அப்போது விவசாயிகளின் பிரச்சினை தொடர்பான கோரிக்கை மனு ஒன்றை விவசாயிகள், தமிழக முதல்வரிடம் அளித்தனர். அதனைத் தொடர்ந்து பத்திரிகையாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

இதில் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி கூறும்போது,



அய்யாகண்ணு சில கோரிக்கைகளை இங்கே தெரிவித்துள்ளார். தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் இருக்கின்ற கடன்கள் அனைத்தும் இரத்து செய்ய வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். பிரதமரை சந்திக்கும் பொழுது அதை வலியுறுத்திச் சொல்வேன். 2 பருவ மழைகள் பொய்த்துவிட்டன. 140 ஆண்டுகாலம் இல் லாத வரட்சி தமிழகத்தில் நிலவிக் கொண்டிருக்கிறது. அந்த வரட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும் என்ற அடிப்படையில் மத்திய அரசுக்கு கோரிக்கை வைத்தோம். அது சம்பந்தமாக பிரதமரை சந்தித்து ரூ.39,665 கோடி வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்தோம். விவசாயிகளுக்கு வழங்குவதற்காக 2247 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்த தொகைகள் வங்கிகளின் மூலமாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

அதோடு புதிதாக பயிரிட்டு இருக்கும் விவசாயிகளுக்கு பயிர்க்கடனையும் தமிழக அரசு வழங்கி வருகிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசியாவில் அமைதி ஏற்பட காஷ்மீர் பிரச்சினை முக்கிய தடை

## பாக்.நிதியமைச்சர் சுட்டிக்காட்டு



(வோஷிங்டன்)

தெற்காசியாவில் அமைதி ஏற்படுவதில் காஷ்மீர் பிரச்சினை முக்கிய தடையாக உள்ளது என்று பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வோஷிங்டனில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாகிஸ் தானிய அமெரிக்கர்களிடம், பாகிஸ்தான் நிதி அமைச்சர் முகமத் இஷக் தார் கலந்துரையாடிய போது, தெற்காசியாவில்அமைதி ஏற்படுவதில் காஷ்மீர் பிரச்சினை முக்கிய தடையாக இருந்து வருகிறது

பல வருடங்களாக இந்தியா மற்றும்பாகிஸ்தான் இடையே காஷ்மீர் பிரச்சினை தொடர்ந்து வருகிறது. இப்பிரச்சினையை தீர்ப்பதில் உலக நாடுகளின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இருநாடுகளுக்கு இடையே நிகழும் காஷ்மீர் பிரச்சினையை தீர்த்துவிட்டால், தெற்காசிய பிராந்திய பகுதியில் அமைதி நிலவும். இதன் மூலம் பாதுகாப்புக்காக இரு நாடுகளும் செலவிடும் தொகையை சமூகத்தின் வளர்ச்சிக்கு திருப்பலாம். பாகிஸ்தான் அரசு சமாதானத்தையே விரும்புகிறது. தனது அண்டை நாடுகளுடன் சிறந்த உறவையே பாகிஸ்தான் பேணிவருகிறது. காஷ்மீர் பிரச்சினைக்கு இந்தியாவுடன் சுமுகமான தீர்வு இருப்பதாக பாகிஸ்தான் நம்புகிறது" என்றார்.

கடந்த செப்டெம்பர் 29ஆம் திகதி எல்லையில் இந்திய இராணுவம் துல்லிய திடீர் தாக்குதல் நடத்தியது. இத்தாக்குதலில் பாகிஸ்தானிலுள்ள தீவிரவாத முகாம்கள் அழிக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து காஷ்மீர் பிரச்சினையில் இரு நாடுகளின் பேச்சுவார்த்தையில் விரிசல் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

# அமெரிக்கத் தாக்குதலை எதிர்கொள்ளத் தயார்

## வடகொரியா அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் தாக்குதலை எதிர்கொள்ள வடகொரியா தயாராக இருப்பதாக அந்நாடு அறிவித்துள்ளது.

அணு ஆயுத ஏவுகணை சோதனைகளை தொடர்ந்து நடத்திவரும் வடகொரியாவுக்கு எதிராக அமெரிக்கா தனது கண்டனத்தை பதிவு செய்து வருகிறது.

அமெரிக்க துணை ஜனாதிபதி பென்ஸ், தென்கொரியா, அவுஸ்திரேலியா, ஜப்பான் நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டு அந்நாட்டு தலைவர்களுடன் வடகொரியாவின் தொடர் அணு ஆயுத சோதனைகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்த நிலையில் அமெரிக்காவின் எத்தகைய தாக்குதலையும் எதிர்கொள்ள வடகொரியா தயாராக இருப்பதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதுகுறித்து வடகொரியாவின் அரசு ஊடகமான கே.சி.என்.ஏ. அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அதிகாரிகள் வடகொரியாவை கோபமடைய செய்யும் செயல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர். மேலும் அமெரிக்காவின்நடவடிக்கை கொரிய தீபகற்பத்தில் ஆபத்தான கட்டத்தை அடைந்துள்ளது. அமெரிக்காவின் சூழ்ச்சியை வடகொரியா நெருக்கமாக கவனித்து வருகிறது.

அமெரிக்கா அமைதியை விரும்பும் நாடு. ஆனால் அதன் மீது செலுத்தப்படும் தாக்குதலை சமாளிக்க எதிர் தாக்குதலை நடத்த வடகொரியா தயங்காது" என்று செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

# போராளிகள் 400 பேர் சரண்

(குவெட்டா)

பாகிஸ்தானில் 400-க்கும் மேற்பட்ட போராளிகள் தங்கள் ஆயுதங்களை மாகாண முதலமைச்சர் முன்னிலையில் ஒப்படைத்து சரணடைந்தனர்.

பாகிஸ்தானில் பலுசிஸ்தான் மாகாணம் அல் கொய்தா, பாகிஸ்தான் தலிபான் உள்ளிட்ட பல்வேறு பயங்கரவாத அமைப்பினரின் சொர்க்கபுரியாக திகழ்ந்து வருகிறது. அவர்களை ஒடுக்குவதற்கு அவ்வப்போது அமெரிக்கா ஆளில்லா விமானத் தாக்குதல்களை நடத்தி வந்திருக்கிறது. உள்நாட்டு படைகளும் குண்டுவீச்சில் ஈடுபட்டு வந்துள்ளன.

அங்கு பல்வேறு போராளி அமைப்புகளும் இயங்கி



வந்தன.

இந்த நிலையில் அந்தப் பகுதியை சேர்ந்த 400-க்கும் மேற்பட்ட போராளிகள் நேற்று முன்தினம் தங்கள் ஆயுதங்களை மாகாண முதலமைச்சர் முன்னிலையில் ஒப்படைத்து சரணடைந்தனர்.

அவர்கள் பலுசிஸ்தான் குடியரசு இராணுவம், பலுச் விடுதலை இராணுவம் உள்ளிட்ட அமைப்புகளை சேர்ந்தவர்கள் என தகவல்கள் கூறுகின்றன.

அங்கு பாதுகாப்பு படையினரை குறிவைத்து பல்வேறு தாக்குதல்களை இவர்கள் கடந்த காலத்தில் நடத்தி வந்துள்ளனர்.

இவர்கள் சரணடைந்தது குறித்து தென்பிராந்திய இராணுவ தளபதி அமிர் ரியாஸ் கூறுகையில், "யாரெல்லாம் ஆயுதங்களை கைவிட்டு விட்டு, சரணடைய விரும்புகிறார்களோ அவர்களை வரவேற்கிறோம்.

அவர்கள் சகஜ வாழ்க்கைக்கு திரும்ப முடியும் என்று தெரிவித்தார். (இ-3)

# ஐ.எஸ்.தீவிரவாதிகளால் 15 பேர் சுட்டுக்கொலை



(மொசூல்)

ஈராக்கின் மேற்கு மொசூல் பகுதியில் ஐ.எஸ் தீவிரவாதிகள் உள்ளூர் மக் கள் 15 பேரை பிடித்துச்சென்று சுட்டுக்கொன்றனர்.

ஈராக்கின் முக்கிய நகரமான மொசூல் நகரின் கிழக்கு பகுதியை மீட்டு விட்ட நிலையில், மேற்கு பகுதியையும் தங்கள் வசப்படுத்துவதற்காக ஐ.எஸ்.தீவிரவாதிகளை எதிர்த்து உள்நாட்டுப்படையினர் உக்கிரமாக சண்டையிட்டு வருகின்றனர்.

இந்த சண்டைக்கு பயந்து அங்கிருந்து மக்கள் தப்பிக்க முயன்றால், அவர்களை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்து கொன்று விடுகிறார்கள்.

ஈராக் படையினருடனான சண்டையில் பொதுமக்களை மனித கேடயங்களாக அவர்கள் அவ்வப்போது பயன்படுத்தி வருவ்தே இதற்கு காரணம்.

இந்த நிலையில், மேற்கு மொசூல் பகுதியில், ஐ.எஸ். தீவிரவாதிகள் இயக்கத்தின் துப்பாக்கிச்சூடு வல்லுநர்களை தங்கள் பகுதிக்குள் அனுமதிக்காமலும், தங்கள் வீடுகளின் உச்சியில் ரொக்கெட் லாஞ்சர்களை அமைக்க விடாமலும் எதிர்ப்பு தெரிவித்த உள்ளூர் மக்கள் 15 பேரை ஐ.எஸ். தீவிரவாதிகள் பிடித்துச்சென்று சுட்டுக்கொன்று விட்டனர். (இ-3)

# ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினரின் மகனுக்கு 27 ஆண்டுகள் சிறை

## அமெரிக்க நீதிமன்று அதிரடித் தீர்ப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள பிரபல வர்த்தக நிறுவனங்களுக்கு சொந்தமான இணையத்தளங்களில் ஊடுருவி கடன் அட்டை மூலம் பண மோசடி செய்த ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மகனுக்கு, 27 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து மேற்கு வோஷிங்டன் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



குறித்த வழக்கு கடந்த வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிபதி ரிச்சர்ட் ஜோன்ஸ் இந்த உத்தரவை பிறப்பித்தார்.

ரஷ்ய நாடாளுமன்ற உறுப்பினரானவலேரிசெலெஸ்னேவ்வின் மகனான (32 வயது) ரோமன் செலெஸ்னேவ், கடந்த 2009-2013 ஆண்டுகளுக்கு இடையில் அமெரிக்காவில் உள்ள சுமார் 500 பிரபல வர்த்தக நிறுவனங்களுக்கு சொந்தமான இணையத் தளங்களுக்குள் ஊடுருவி, வாடிக்கையாளர்களின் இரகசிய குறியீடுகள் தொடர்பான விபரங்களை சூறையாடி போலி கடனட்டைகளை தயாரிக்கும் நிறுவனங்களுக்குவிற்றுள்ளார்.

இந்நிலையில் இந்த அதிரடித் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (இ-3)




# தலிபான்கள் கோரத்தாண்டவம்

## 150 பேர் உயிரிழப்பு

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் இராணுவத் தளத்தின் மீது தலிபான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலுக்கு பலியானவர்களின் எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ள நிலையில் இந்த கொலைவெறி தாக்குதலுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் வடபகுதியில் தலிபான் தீவிரவாதிகளுடன் போரிட்டு வரும் வடக்கு ஆப்கானிஸ்தானின் குண்டுஷ் பகுதி பிராந்திய இராணுவ தலைமையகம் ஒன்றுள்ளது. மஸார்-இ-ஷரிப் என்ற இடத்தில் அமைந்துள்ள இராணுவ தளத் துக்குள் பணியாற்றி வரும் வீரர்கள் அந்த வளாகத்தில் இருக்கும் மசூதிக்குள் கடந்த வெள்ளிக்கிழமை) ஜும்மா தொழுகையில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, இராணுவ சீருடை அணிந்தபடி சில வாகனங்களுடன் அந்த முகாமுக்குள் நுழைந்த தலிபான் தீவிரவாதிகள் தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்கள் மீது இயந்திர துப்பாகிகளால் சுட்டும், சிறிய ரொக்கெட்களை ஏவியும், உடல்களில் கட்டிவந்த வெடி குண்டுகளை வெடிக்கச் செய்தும் ஆவேசத்தாக்குதல்நடத்தினர்.

இந்தத் கொடூர தாக்குதலில் ஆப்கானிஸ்தான் இராணுவத்தை சேர்ந்த சுமார் 50 பேர்சம்பவ இடத்திலேயே



பலியாகினர். நூற்றுக்கும் அதிகமானவர்கள் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களில் சிகிச்சை பலனின்றி அடுத்தடுத்து பலர் பரிதாபமாக உயிரிழந்த நிலையில் நேற்றுக்காலை நிலவரப்படி, பலி எண்ணிக்கை 150 ஆக உயர்ந்துள்ளது.

இந்த நிலையில், இந்த கொலைவெறி தாக்குதலுக்கு நேற்றுக் கண்டனம் தெரிவித்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, மஸார்-இ-ஷரிப் இராணுவ தளத்தின் மீது நடத்தப்பட்ட கோழைத்தனமான தீவிரவாத தாக்குதலை வன்மையாக கண்டிக்கிறேன் என தெரிவித்துள்ளார். இந்த தாக்குதலில் உயிரிழந்தவர்களின் சோகத்தில் எங்களது பிரார்த்தனையும் இணைந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-3)

# ஜபாத் அல் நுஷ்ரா மீது அல் ஆசாத் குற்றச்சாட்டு



(அலெப்போ)

அலெப்போ நகரில் நடத்தப்பட்ட பேருந்து மீதான தாக்குதலுக்கு, அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் முன்னாள் துணை அமைப்பான ஜபாத் அல் நுஷ்ரா அமைப்பே காரணம் என சிரிய ஜனாதிபதி பஷர் அல் ஆசாத் குற்றஞ்சாட்டியுள்ளார்.

சிரியாவின் உக்கிர மோதல் இடம்பெற்றுவரும் அலெப்போ நகரிலிருந்து, கடந்த 16ஆம் திகதி, அங்குள்ள மக்களை பாதுகாப்பாக பேருந்துகள் ஊடாக வெளியேற்றிக்கொண்டிருந்த போது, பேருந்துகள் மீது நடத்தப்பட்ட கொடூர தாக்குதலில் 68 குழந்தைகள் உட்பட 126 பேர்உயிரிழந்தனர்.

இதுவரையில் எந்த தீவிரவாத அமைப்பும் இத்தாக்குதலுக்கு பொறுப்பேற்காத நிலையில், ஜபாத் அல் நுஷ்ரா அமைப்பே இத்தாக்குதலை அரங்கேற்றியதாக சிரிய ஜனாதிபதி குற்றஞ்சாட்டியுள்ளார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை செல்வா

## அவர்களின் 40ஆவது நினைவு நாள்



### நிகழ்ச்சிகளும் நினைவுப் பேருரையும்

காலம் : 26.04.2017 புதன்கிழமை
காலை 9.30 மணி

இடம் : தந்தை செல்வா நினைவிடம்,
யாழ்ப்பாணம்.

தலைமை : மேதகு ஆயர் கலாநிதி
சு.ஜெபநேசன் அவர்கள்
(தலைவர், தந்தை செல்வா
நினைவு அறங்காவற்குழு)

### நிகழ்ச்சி நிரல்

- தந்தை செல்வாவின் உருவச்சிலைக்கு மாலை அணிவித்தலும் மலர் அஞ்சலியும்.
- வரவேற்புரை
- அஞ்சலியுரை
  - ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்
  - மௌலவி மகுமூத் அவர்கள்
  - அருட்தந்தை S.V.B.மங்களராசா அடிகள்
- தலைமையுரை
- அறிமுகவுரை
- நினைவுப் பேருரை : கௌரவ.கலாநிதி ஜெயம்பதி விக்ரமரட்ன P.C,M.P.
  (அரசியல் அமைப்பு நிபுணர்)

  தலைப்பு : *"எஸ்.ஜே.வியும் அதிகாரப் பகிர்வுக்கான கோரிக்கையும்"*
- நன்றியுரை : திரு.வி.ஜி.தங்கவேல்

மேற்படி நிகழ்வுகளில் கலந்து சிறப்பிக்குமாறு ஆர்வலர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு

(8814)



# அகவை நிறைவில் அகமகிழ்ந்து வாழ்த்துகிறோம்

## சைவசித்தாந்த பண்டிதர் சிவாகம உபதேச வாசஸ்பதி சிவாகம பூஷணம்

## சிவஸ்ரீ. தியாக. சோமாஸ்கந்தராஜக்குருக்கள் அவர்கள்

(நெல்லண்டை அம்மன், வீரமாகாளி அம்மன்.
வடபத்திரகாளியம்மன் ஆதீனகர்த்தா)

நலமுடன் வளமுடன்
பல்லாண்டு காலம் வாழ்க என
வாழ்த்தும்



சிவஸ்ரீ.சோமாஸ்கந்த
தண்டபாணிக தேசிகர்
(J.P)

பிரதம குரு வல்வை
ஸ்ரீமுத்துமாரி அம்மன்
தேவஸ்தானம்,
வல்வெட்டித்துறை.

ஆதீன கர்த்தா, புற்றளை
சித்தி விநாயகர்
தேவஸ்தானம்.

(C-8239)


# தரமில்லாத பொலித்தீனுக்கு பத்து இலட்சம் ரூபா தண்டம்

## மத்திய சூழல் அதிகாரசபை நடவடிக்கை

(கொழும்பு)

தரமில்லாத பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்தும் வகையில் மத்திய சூழல் அதிகார சபை புதிய யோசனையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

மத்திய சூழல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் கே.எச். முதுகுட ஆராச்சி இதனைத் தெரிவித்தார். இது குறித்து அவர் தெரிவிக்கையில்,

"எமக்கு தரமில்லாத பொலித்தீன் உற்பத்தியை தடை செய்வதற்கு அதிகாரம் உள்ளது. அதேபோன்று, தற்பொழுது தரமில்லாத பொலித்தீனுக்கான தண்டப் பணமாக 10 ஆயிரம் ரூபாவே அறவிடப்படுகின்றது. இந்த தண்டப் பணத்தை ஒரு மில்லியன் ரூபாவாக அதிகரிக்க தீர்மானித்துள்ளோம். இதற்கான பாராளுமன்ற அனுமதியை சட்டமூலம் ஒன்றைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளவுள்ளோம்" எனவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## 2 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்.துன்னாலை பகுதியில் இரண்டு லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு அப்பகுதியில் தேடுதல் வேட்டை ஒன்றிற்காக சென்ற நெல்லியடிப் பொலிஸார் இரண்டு லீற்றர் கசிப்பினை வீட்டில் வைத்திருந்த நபர் ஒருவரைக் கைது செய்துள்ளனர். அவரை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர். (இ-60)


### வகுப்பு

*தரம் 6-11 வரையான வகுப்புக்கள் (கணிதம்) தனியாகவோ அல்லது குழுவாகவோ கற்பிக்கப்படும்.*

077 712 2968

(8811)



### நல்லூர் ஸ்ரீதேவி வில்லிசை

## கலைமாமணி

## Dr.S.S.சர்மா குருஜீ

## 077 784 1558

(8169)



# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 1 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:NCT/தனியார்தொழில்
தொ.இ: B/7227

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 42 சூரிசெவ் 1 இல்
உயரம்: 5'10"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: B/7228

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: ரேவதி
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 6'2"
தகைமை/தொழில்:BBM, CBF, DBF/வங்கியாளர்
தொ.இ: B/7230

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 25 செவ் 4 இல்
உயரம்: 160cm
தகைமை/தொழில்:O/Lசுவீடன்
தொ.இ: B/7231

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 46 செவ் 2 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:MBA/தனியார் தொழில்
தொ.இ: G/7288

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 27
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:BSc/ஆசிரியர்
தொ.இ: G/7289

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 58 செவ் 12 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:O/L/அரசதொழில்
தொ.இ: G/7293

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 51
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/அரசதொழில்
தொ.இ: G/7294

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெனிவாவில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற அவசரம் காட்ட வேண்டும்

## இலங்கை அரசிடம் ஜேர்மனி வலியுறுத்து

(பேர்லின்)

**ஜெனிவாவில் 2015 இல் இலங்கை அரசாங்கம் கொடுத்த வாக்குறுதிகளை நடைமுறைப்படுத்துவதற்கு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டிய தருணம் இது என்று ஜேர்மனி வலியுறுத்தியுள்ளது.**



இலங்கைக்கான ஜேர்மனி தூதுவர் ஜோன் ரோட் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தான் அறிவித்த மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை முன்னோக்கி நகர்த்துவதற்கு அரசியல் விருப்புடன், அரசாங்கம் இன்னும் கவனம் செலுத்த வேண்டும்.

காணாமல்போனோருக்கான பணியகம், தகவல் உரிமைச் சட்டம், அரசியலமைப்பு பேரவை என்பன வெற்றிகரமான நகர்வுகளாக இருக்கின்றன.

அதேவேளை, அதிகாரங்களைப் பகிரும் வகையில் அரசியலமைப்பு மறுசீரமைப்பு, போரினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு காணிகளை மீளளித்தல், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றியமைத்தல், ஊழலுக்கு எதிரான காத்திரமான நடவடிக்கை, தண்டனையில் இருந்து தப்பிக்கும் நிலை என்பன இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக இருக்கின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (இ-7)

# இராஜதந்திர கொலைகாரர்கள்

## கோத்தபாயவை விடாது துரத்தும் கொடுங்குற்றம்



சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க கொலையுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபரான இராணுவப் புலனாய்வு அதிகாரிக்கு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தாபாய ராஜபக்ஷ வெளிநாட்டில் இராஜதந்திரப் பதவியை வழங்கினார் என்று புதிய ஆதாரம் வெளியாகியுள்ளது.

லசந்த விக்கிரமதுங்க கொலையுடனோ ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலுடனோ தனக்குத் தொடர்பில்லை என்று கோத்தாபாய ராஜபக்ஷ மறுத்து வரும் நிலையில், இந்தச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபரான இராணுவப் புலனாய்வு அதிகாரிக்கு அவர் தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகத்தில் இராஜதந்திரப் பதவியைப் பெற்றுக் கொடுத்தமைக்கான புதிய ஆதாரங்கள் சிக்கியுள்ளன.

மேஜர் பண்டார புலத்வத்த என்ற இராணுவப் புலனாய்வு அதிகாரியை, பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் இரண்டாவது செயலராக நியமிக்க கோத்தபாய பரிந்துரைத்திருந்தமைக்கான ஆதாரம் கிடைத்துள்ளது.

2010 ஜனாதிபதி தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அவசரமாகத் தயாரிக்கப்பட்ட ஒரு கடிதத்தில், பாங்கொக்கில் உள்ள இலங்கை தூதரகத்தில் இரண்டாவது செயலராக இருந்த ஒரு அதிகாரியை திருப்பி அழைத்து விட்டு, அந்தப் பதவிக்கு புலனாய்வு அதிகாரியான மேஜர் புலத்வத்தவை நியமிக்குமாறு கோத்தபாய ராஜபக்ஷ, வெளிவிவகாரச் செயலரிடம் கோரியிருந்தார்.

அந்தக் கடிதத்துடன் மேஜர் புலத்வத்தவின் சுயவிபரக்கோவையும் இணைக்கப்படவில்லை. வெளிவிவகார அமைச்சின் நியமன ஒழுங்குமுறைப்படியும், நுழைவிசைவு பெறுவதற்கும் சுயவிபரக்கோவை முக்கியமானபோதிலும், அது இணைக்கப்படாமல் அவசரமாக அந்தக் கடிதம் அனுப்பப்பட்டது.

இந்தக் கடிதம் 2010, ஜனவரி 18ஆம் திகதி கோத்தபாய ராஜபக்ஷ வினால் வழங்கப்பட்டது.

இது உண்மையானது என்று பாதுகாப்பு அமைச்சின் அப்போதைய மேலதிக செயலர் ரவி அருந்தவநாதன் உறுதி செய்திருந்தார்.

தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர், தேர்தல் ஆணையாளருடன் கலந்தாலோசிக்காமல், பொதுச்சேவை அதிகாரிகளை இடமாற்றம் செய்ய முடியாது.

ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு வாரம் முன்னதாக, மேஜர் புலத்வத்தவுக்கு வழங்கப்பட்ட நியமனத்தில், அவ்வாறான ஒழுங்குமுறை கையாளப்பட்டிருக்கவில்லை.

எனினும், மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டு, சரத் பொன்சேகா கைது செய்யப்பட்டதையடுத்து, பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தனது முடிவை மாற்றிக் கொண்டார்.

தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு மேஜர் புலத்வத்தவின் நியமனத்தை நிறுத்துமாறு வெளிவிவகாரச் செயலரை அவர் கேட்டுக் கொண்டார்.

தேசிய பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக, மேஜர் புலத்வத்த கொழும்பில் இருக்க வேண்டியது அவசியம் என்பதால், அடுத்த அறிவிப்பு வரும் வரையில், அவர் புறப்பட்டுச் செல்வதை பிற்போடுமாறு, அப்போதைய தேசிய புலனாய்வு தலைவர் மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண வெளிவிவகாரச் செயலரிடம் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று ஒரு மாதம்கழித்து, 2010 பெப்ரவரி 25ஆம் திகதி இந்தக் கடிதம் எழுதப்பட்டிருந்தது.

புலத்வத்தவின் நியமனத்தை நிறுத்தி வைக்குமாறு வெளிவிவகாரச் செயலரிடம் கேட்டு சரியாக இரண்டு வாரங்கள் கழித்து, அவரை தாய்லாந்துக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு மேஜர் ஜெனரல் கபில ஹெந்தவிதாரண கோரியிருந்தார்.

எனினும், ஐந்து நாட்களின் பின்னர் அவர், நியமனத்தை ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொண்டார்.

தேசிய பாதுகாப்புத் தொடர்பான விவகாரங்களுக்கு இந்த அதிகாரி கொழும்பில் அவசியம் தேவைப்படுவதாக அதற்குக் காரணம் கூறியிருந்தார்.

லசந்த கொலை நடந்த இடத்திலும், ஏனைய ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களின் போதும், மேஜர் புலத்வத்த இருந்தமைக்கான தொழில்நுட்ப சான்றுகள் மற்றும் தொலைபேசி பதிவுகள் கிடைத்துள்ளன. அவரும், ஏனைய ஆறு புலனாய்வு அதிகாரிகளும் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அதேவேளை, லசந்த விக்கிரமதுங்க கொலை மற்றும் ஏனைய ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களில் தொடர்புடைய சந்தேகநபரிட் அதிகாரிகளான ஆர்.எல். ராஜபக்ஷ மற்றும் உடலகம ஆகியோருக்கும் ஜேர்மனியில் உள்ள இலங்கை தூதரகத்தில் முக்கிய பதவிகள் வழங்கப்பட்டிருந்தமையும் தெரியவந்துள்ளது. (இ-7)

# இன்று ஒரு தகவல்

## கரடி மனிதர்கள்

நாம் ஒருவருடன் உட்கார்ந்து ஒரு முக்கியமான விடயத்தைப் பற்றி பேசி முடிவெடுக்க வேண்டியிருக்கும் அல்லது முக்கியமில்லாத ஆனால் மிகச் சுவாரசியமான விடயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருப்போம்.

இத்தகைய நேரத்தில் நுழைவார்கள் சில கரடி மனிதர்கள். மரியாதைக்காக நாம் அவர்களை என்ன? ஏது? எப்படி? என்று விசாரித்து வைப்போம். அவ்வளவு தான் ஒரு பெரிய செய்தி மூட்டையை அவிழ்த்துவிடத் தொடங்கிவிடுவார்கள்.

நாம் பேசிக் கொண்டிருந்த தலைப்புக்குச் சம்பந்தமில்லாத விடயத்திற்கு அழைத்துப் போய் விடுவார்கள்.

நாமும் நமக்கு வேண்டியவரும் பேசிக் கொண்டிருக்கும் விடயத்தில் வரக்கூடிய ஒரு சொல்லை (உதாரணமாக மனேஜர்) எடுத்துக் கொண்டு "இப்படித்தான் எங்க மனேஜர் இருக்காரு பாருங்க" என்று அவரைத் திட்டித் தீர்க்க ஆரம்பித்து விடுவார்கள்.

இந்தக் கரடி மனிதர் பேசிக் கொண்டே இருக்க, அபூர்வமாகச் சந்தித்த அந்த இரு நண்பர்களின் பொன்னான கணங்கள், இவரிடம் (கரடியிடம்) சிக்கிக் கொண்டு தவிக்கும்.

பாவம் அந்த நண்பர்கள்; பிரிய வேண்டிய நேரம் வந்து, அந்த முக்கியமான பிரச்சினைக்கு முடிவு எடுக்காமலேயே போயிருப்பார்கள்.

கரடி மனிதர்கள், வந்து விடயத்தையும் சொல்லித் தொலைக்காமல், நேரத்தைக் குறைவாகவும் எடுத்துக் கொள்ளாமல் படுத்தி விடுவார்கள் படுத்தி.

நமக்கே நம் பிரச்சினை மண்டையைக் குழப்பிக் கொண்டிருக்கும் போது புரியாத்தனமாகத் தங்கள் பிரச்சினையை விலாவாரியாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு வேலையும் புரிய விடமாட்டார்கள்.

சில சமயம் நாமே நம்மையறியாமல் கரடி மனிதர்களாக ஆகிவிடுவதுண்டு.

நாம் கரடி மனிதர்களா, இல்லையா என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?

இதற்குச் சில உபாயங்கள் இருக்கின்றன. முதலாவதாக நாம் நுழைந்ததும் சம்பந்தப்பட்ட இருவர் பேச்சு கப்பென்று மின்சாரம் துண்டிக்கப்பட்ட இயந்திரங்களைப் போல் ஆகிவிட்டால் நாம் கரடி மனிதர்களே என்ற முடிவுக்குத் தாராளமாக வரலாம்.

இரண்டவதாக அவர்கள் பேச்சை மாற்றினாலும் நாம் கரடி மனிதர்களே என்ற முடிவுக்கு வரலாம். மூன்றாவதாக நம்மிடம் எந்தப் பேச்சையும் வளர்க்காமல் அவர்கள் பாட்டிற்குப் பேசிக் கொண்டிருந்தாலும் நாம் கரடி மனிதர்களே! சரி நாம் கரடி மனிதர்கள் என்று பெயரெடுக்காதிருக்க என்ன வழி?

முதலாவதாக நீங்கள் முக்கியமான விடயம் பேசிக் கொண்டிருக்கும் போது நான் நுழைந்து கெடுத்து விட்டேன் என நினைக்கிறேன் என்று சொல்லிவிட்டு நம் பேச்சைத் தொடங்க வேண்டும்.

தங்கள் தவிப்பை அடியோடு புறக்கணித்து விட்டு நம்முடன் உரையாடுவதில் ஆர்வம் காட்டாவிட்டால் ஐந்தே நிமிடத்தில் நகர்ந்து விட வேண்டும்.

அவர்களாகக் கேட்டாலொழிய நம் மூட்டைகளை அவிழ்க்காமல், அவர்கள் பேசும் தலைப்பை ஒட்டியே நாமும் பேச வேண்டும். அதையும் அவர்கள் விரும்பும் வகையில் பேச வேண்டும்.

இப்படிச் செய்தால்– நாம் கரடிகள் அல்ல. சூரப் புலிகள்!

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பறிபோகும் மன்னார் தென் கரையோரம்



(நேற்று முன்தினம் சனிக்கிழமை வெளியான கட்டுரையின் தொடர்ச்சி)

திருகோணமலையில் சம்பூர், யாழ்ப்பாணத்தில் மயிலிட்டி, பலாலி ஆகிய கிராமங்களுக்கு நடந்து கொண்டிருப்பது போல் மன்னாரில் முள்ளிக்குளம் என்ற பாரம்பரியம்மிக்க கத்தோலிக்க தமிழ்க்கிராமம் ஒன்றுக்கு வேட்டு வைத்தாயிற்று. இன்னொரு தமிழ்க் கிராமமான அரிப்பு என்ற இடத்திற்கு வேட்டு வைப்பதற்கான முயற்சி ஒன்றும் சில மாதங்களின் முன் அரங்கேறியிருந்தது. போதாக்குறைக்கு காயாக்குழி என்ற இடத்தில் சிங்கள வருக்கான மீன்பிடி குடியேற்றம் ஒன்றும் உருவாக்குவதற்கான முயற்சிகள் முனைப்புடன் நடைபெற்றுவருவதாக செய்திகள் கூறுகின்றன.

இதுவரையிலும் தமிழ்க் கிராமங்களை ஆக்கிரமிப்பதில் தமது கைவரிசையைக் காட்டி வந்த அரசு முஸ்லிம்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த மறிச்சுக்கட்டி, வெப்பல், கரடிக்குளி, விளாத்திகுளம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கி மாவில்லு என்ற பெயரில் வில்பத்து சரணாலயத்தை விஸ்தரித்தல் என்ற போர்வையில் கையகப்படுத்தும் நடவடிக்கைகளிலும் இன்று தனது கைவரிசையைக் காட்டியிருக்கின்றது.

மேலும் அப்பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட கொண்டச்சி பாசித்தென்றல் என்ற கடற்கரையோரமாக ஜனாதிபதியின் நெருக்கத்தற்குரியவராக சொல்லப்படுகின்ற மன்னார் சிங்கள-அரச அதிபரின் நேரடிக்கண்காணிப்பின் கீழ் முழுமையான இராணுவ ஆளணியினரால் கொக்குப்படையான் முதல் ஆலம்வில் வரையிலான பகுதியில் 1218 குடும்பங்கள் குடியமர்த்துவதற்கான வேலைத் திட்டங்கள் முழுவீச்சில் நடை பெற்றுவருவதாகவும், உட்கட்டுமான வசதிகள் அனைத்தையும் கொண்டதாக இது அமைக்கப்படு வதாகவும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குறிப்பிட்டு ள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

முள்ளிக்குள கிராம ஆக்கிரமிப்பு, முஸ்லிம் மக்களின் நான்கு கிராமங்களின் ஆக்கிரமிப்பு, பாசித்தென்றல் சிங்களக் குடியேற்றம், காயா ஷக்குழி குடியேற்றம் இவைகளை கருத்திற்கொண்டு நோக்கும் போது முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக கொண்ட முசலி பிரதேச செயலர் பிரிவு இருகூறாக்கப்பட்டு மன்னாரின் தென் எல்லையோரமாக சிங்கள பிரதேச செயலர் பிரிவாக மாற்றப்படலாம் என்ற ஐயப்பாட்டையே தோற்றுவித்திருக்கின்றது. முல்லைத்தீவில் மணலாறு பகுதி வெலி ஓயாவாக மாறியதுபோல இதனைப் பார்க்கமுடியும்.

### முள்ளிக்குள விவகாரம்

மன்னார் மாவட்டத்தின் தென் எல்லையோரமாக கடற்கரையோரத்தில் மன்னார் பட்டினத்திலிருந்து சுமார் 50கிலோமீற்றர் தொலைவில் முள்ளிக்குளம் இடஅமைவு பெற்றுள்ளது. 1990 இல் இராணுவ நகர்வு ஒன்றின் காரணமாக சுமார் 300 க்கும் அதிகமான குடும்பங்கள் இக்கிராமத்தை இழந்து வெள்ளியேறி பல்வேறு இடங்களிலும் தஞ்சம் புகுந்திருந்தனர். 2009 இல் யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட பின் தமது சொந்த இடத்திற்கு மீளத் திரும்பலாம் என எதிர்பார்த்திருந்த இக் கிராமமக்களுக்கு இது வரையில் ஏமாற்றமே மிஞ்சியுள்ளது. இக்கிராமத்திற்கு சமீபமாக உள்ள பூக்குளம் என்ற சிங்கள கிராம மக்களும் சகல வசதிகளுடனும் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டு விட்டனர். ஆயினும் முள்ளிக்குள மக்கள் மீளக்குடியமர கடற்படை மறுப்புத் தெரிவித்து வருகின்றது. முள்ளிக்குள கிராமம் முழுவதும் ஆக்கிரமிக்கப்பட்டு வடமேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகம் என மாற்றப்பட்டுள்ளதுடன், இப் பகுதி மக்களை முள்ளிக்குளத்திலிருந்து வடக்காக 20கிலோமற்றர் தொலைவிலுள்ள கரையோரத்தில் குடியேற்ற நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஆட்சியின்போது 'காயாக்குழி' என்ற இடத்தில் குடியமரும் முள்ளிக்குள மக்களுக்கு குடும்பம் ஒன்றிற்கு 50 ஆயிரம் ரூபாவும் 1 ஏக்கர் வயல் காணியும் வழங்கப்படுமென பத்திரிகைச் செய்திக்குறிப்பு ஒன்று கூறியிருந்தது. முள்ளிக்குள மக்களுக்கு காயாக்குழியில் வெட்டும் சவக்குழிக்கான முன் அறிவிப்பு இது என்றே அன்று இது கருதப்பட்டது.

சிங்கள (பூக்குளம்) குடியிருப்புக்களுக்கு அனுமதியளித்து விட்டு தமிழ்க் கிராமமான முள்ளிக்குள மக்களை மட்டும் வேறு இடத்திற்கு இடமாற்றுவதற்கான சதியின் பின்னணி என்ன? முள்ளிக்குளத்தை முழுவதும் கடற்படை கட்டளைத் தலைமையகமாக மாற்றியதன் [illegible] என்ன என்பதைக் கண்டறிவது அவ்வளவு கடினமல்ல. தென் எல்லையில் முஸ்லிம் பிரதேச செயலகப் பிரிவில் அடங்கும் முள்ளிக்குளம் என்ற கிராமம் வளமிக்கதும் (விவசாயம், மீன்பிடி, காட்டுவளம்) முற்றிலும் தமிழ்க் கத்தோலிக்கர்களைக் கொண்ட ஒரு கிராமமாகும். இக் கிராமத்தை கையகப்படுத்தி இங்குள்ள மக்களை வேறு இடத்திற்கு குடியமர்த்தி விட்டால் அமையவுள்ள சிங்களப் பிரதேச செயலகப் பிரிவுக்கு சௌகரிகமாக அமையும் என்ற அடிப்படையிலேயே இக்கிராமம் இன்று கடற்படைத்தளமாக மாற்றப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

### முசலிப் பகுதியில் சிங்களக் குடியேற்றம் - போரின் முன்

முஸ்லிம் மக்களை பெரும்பான்மையினராகக் கொண்ட முசலி பிரதேச செயலர் பிரிவும் நானாட்டான் பிரதேச செயலக பிரிவிலடங்கிய மடு ரோட், குஞ்சுக்குளம் ஆகிய பகுதிகளும் இம் மாவட்டத்தின் எல்லையோரமாகவே அமைவு பெற்றுள்ளன. இப் பகுதிகளை சிங்கள பிரதேசங்களாக மாற்றும் முயற்சிகள் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அன்று அம்பாறையில் 'திகாமடுல்ல', திருகோணமலையில் 'பதவியா' இன்று முல்லைத்தீவில் 'வெலிஓயா' உருவாக்கம் போல இப் பகுதிகளும் முந்திரிகைப் பண்ணை அபிவிருத்தி என்ற போர்வையில் 1970களையடுத்து சிங்களமயமாக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

மடுரோட் மடு வீதியில் மரமுந்திரிகைப் பண்ணை ஒன்றும் கொண்டச்சியில் 6000 ஏக்கர் பரப்பில் இன்னொரு பண்ணையும் 1972 இல் ஆரம்பிக்கப்பட்டது. இதன் விளைவு மடு ரோட் என்ற இடத்தில் சிங்கள குடியேற்றமும், பௌத்த விகாரை, சிங்களப் பாடசாலை ஆகிய குடியிருப்பு பண்புகளோடு உருவாகியது. கொண்டச்சியில் ஆறாயிரம் (6000) ஏக்கர் பரப்பில் மரமுந்திரிகையும், வேலையாட்களுக்கென விஜயதொகுதி, குவேனி தொகுதி, பராக்கிரம தொகுதி, அபய தொகுதி, தம்பபன்னத் தொகுதி, விக்கிரம தொகுதி, [illegible] குடியிருப்புத் தொகுதிகளும் சிங்களப் பாடசாலை, பௌத்த விகாரை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் ஆகியவற்றுடனான குடியிருப்பு வளர்ச்சி பெற்று வந்தது. கொண்டச்சியிலிருந்து தெற்காக புத்தளம், அநுராதபுரம், வீதியுடன் வில்பத்து சரணாலயம் ஊடாக அமைக்கப்பட்டு மிக இரகசியமான முறையில் குடியேற்ற முயற்சிகள் இடம் பெறலாயின. எனினும் 1983 இல் ஏற்பட்ட கலவரமும், கொண்டச்சி முகாம் தகர்ப்பும் இந்த சிங்களக் குடியிருப்புக்களை இல்லாதொழித்தன.

### போரின் பின்னரான காலப்பகுதி

2009 இல் போர் முடிவுக்கு வந்த கையோடு அவசர அவசரமாக வடக்கில் குறிப்பாக வன்னிப் பகுதிகளில் முடியுமானளவில் நிலங்களை பல்வேறு வழிகளில் ஆக்கிரமிக்கின்ற வேலைகளில் இறங்கியது. பௌத்த விகாரைகள் கட்டுதல், அரச மரங்களை நாட்டுதல், நினைவுத் தூபிகளை நிறுவுதல், தென்பகுதி உல்லாசப் பயணிகளுக்கான இடைத்தங்கல் விடுதிகளை அமைத்தல், காட்டுப் பகுதிகளில் இரகசியமான முறைகளில்பெரும்படைத் தளங்களை அமைத்தல், அத்துடன் சிங்களக் குடியேற்றங்களை மீள ஆரம்பித்தல் என்ற வகையில் பெருந்தொகையான நிலங்களை இன்று அரச படைகளின் உதவியுடனும் பிக்குகளின் உதவியுடனும் அபகரித்துள்ளது. இப்போது பொதுபல சேனா என்ற அமைப்பும் இணைந்துள்ளது.

இந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் மடுரோட் புதுப் பொலிவு பெற்ற பெரிய குடியேற்றமாக பரிணமித்துள்ளது. மடு ரோட் சந்தியில் வில்வளைவுடன் கூடிய பௌத்த விகாரை, சிங்களப் பாடசாலை, உட்பட வங்கி ஒன்றின் உதவியுடன் பல வீடுகள் கட்டப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். புறையனாலங்குளம் சந்தியிலிருந்து கட்டையடம்பன் வரையிலான ( 5 கிலோ மீற்றர் நீளமானது ) மன்னார் - மதவாச்சி வீதியின் இருமருங்கிலும் பல கொட்டில்கள் போடப்பட்டு உதவியுடன் இந்த குடியிருப்பு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் முருங்கனை அண்மித்த பகுதியில் நரிக்காடு என்ற இடத்தில் சிங்கள குடியேற்றம் ஒன்று புதிதாக முளைத்துள்ளது.

கொண்டச்சி மரமுந்திரிகைப் பண்ணை மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கான முயற்சிகளும் முடுக்கி விடப்பட்டுள்ளன. புத்தளம் - அநுராதபுரம் வீதியிலிருந்து தந்திரி மலையூடாக செட்டிகுளம் வரையிலான வீதியும் புனரமைக்கப்பட்டு இன்று பாவனையில்விடப்பட்டுள்ளன. மேலும் மடு ரோட்டிலிருந்து மேற்காக காடுகள் வழியே குஞ்சுக்குளத்தை ஊடறுத்தும் வீதிகள் செப்பனிடப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. புத்தளத்திலிருந்து வடக்காக சிலாபத்துறை வரை கரையோர வீதி சிலாபத்துறை முதல் முருங்கன் வரையிலான வீதி என்பனவும் புனரமைக்கப்பட்டாயிற்று. இன்றைய வில்பத்து விரிவாக்கமும் இவ்வாறான துரித அபிவிருத்தி நடவடிக்கைகளை அவதானிக்கின்ற போது மன்னார் மாவட்டத்தின் தென் எல்லையோரமாக சிங்கள பிரதேச செயலர் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் போலவே அமைவதாக இப் பகுதியிலுள்ள பலரும் அச்சம் தெரிவித்துள்ளனர். இதன் ஒரு பகுதியாகவே முள்ளிக்குளம் என்ற கிராமத்தின் சர்ச்சையினையும், முஸ்லிம் மக்களினுடைய கிராமங்களின் சர்ச்சையினையும்நோக்க வேண்டியுள்ளது.



ஏற்கனவே வடக்கின் தென் எல்லையோரமாக வவுனியாவில் வவுனியா தெற்கு சிங்களப்பிரிவிலும் போரின்பின் முல்லைத் தீவில் வெலிஓயாவும் பறிபோய் விட்டது. இனி மன்னாரின் தென் எல்லையோரமாக முசலிப்பகுதியும் வனவிலங்குப்பகுதியாக பிரகடனப்படுத்தப்பட்டுவிட்டது. அது ஒரு சிங்கள பிரதேச பிரிவாக மாறாது என்பதற்கான எந்த உத்தரவாதமும்இல்லைபோல்தெரிகிறது.

முகாம் மக்களோடு நின்று புகைப்படம்எடுத்து பத்திரிகையில் சிறு அறிக்கை விடுவதைத்தவிர நிலம் பறிக்கும் அரசின் புது வியூகத்தை உடைத்தெறியும் பொறிமுறை கூட்டமைப்பினரிடம் கிஞ்சித்தும் கிடையாது என்பதுதான் கவலை தரும் உண்மை.

பேராசிரியர் ஏ.எஸ்.சூசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை உட்பட 10 நாடுகளில் கடற்படைத்தளங்களை அமைக்க சீனா திட்டம்

பத்து நட்பு நாடுகளில் சீனக் கடற்படையின் தளங் கள் அமைக் கப்பட வேண் டும் என்று சீன இராணுவத் தின் அதிகாரபூர்வ நாளித ழான PLA Daily ஆசிரியர் தலையங்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

சீன கடற்படையின் ஆண்டு நிறைவை முன்னிட்டு.PLA Daily யின் நேற்று முன்தின இதழின் ஆசிரியர் தலை யங்கத்தில், சீனாவுக்கு ஆறு விமானந்தாங்கி கப்பல்கள், விரிவுபடுத்தப்பட்ட மரைன் படைப்பிரிவு, பத்து நட்பு நாடுகளில் கடற்படைத் தளங் கள் அமைக்கப்பட வேண் டும் என்று யோசனை தெரி விக்கப்பட்டுள்ளது.

ஜப்பான், தாய்வான், மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகிய தீவுச் சங்கிலியை உடைத்து, மேற்கு பசுபிக்கில் ஆதிக்கம் செலுத்துவதே, விமானங் தாங்கிகப்பல்களின் விரிவாக்கத்தின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்றும் PLA Daily குறிப்பிட்டுள்ளது. சீனா ஏற்கனவே தனது முதலாவது கடல் கடந்த இராணுவத் தளத்தை ஒரு விநியோக மையம் என்ற பெயரில் டிஜிபோட்டியில் கட்டி வருகிறது. அத்துடன் பாகிஸ் தானில் குவடார் துறை முகத் தையும், இலங்கையில் அம் பாந்தோட்டை துறைமுகத் தையும் கட்டியுள்ளது.

அம்பாந்தோட்டை ஒரு வணிக முயற்சி என்ற போதி லும், குவடார் துறைமுக த்தை கடற்படைத் தளம் என்றே பாகிஸ்தான் அதி காரிகள் தெரிவித்துள்ளனர். உள்ளூர் கிளர்ச்சியாளர்களி டம் இருந்து பாதுகாப்பதற்கு சீனா இராணுவ உதவி களை வழங்கி வருகிறது.

இந்த மூன்றும், சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங்கின் 21 ஆம் நூற்றாண்டு கடல் சார் பட்டுப் பாதை திட்டத்தின் மையத்தில் உள்ளன என் பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அரச நிறுவனங்களின் செயற்றிறன் வீழ்ச்சி

அரச நிறுவனங்களின் செயற்றிறன் 74 வீதமாக குறைவடைந் துள்ளது என அரச தொழிற்சங்க சம்மேள னத்தின் செயலாளர் அஜித் கே.திலகரட்ன தெரிவித்துள் ளார். அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் செயற் றிறன் தொடர்பில் அரச தொழிற் சங்க சம்மேளனம் நடத்திய ஆய்வின் மூலம், இவற்றின் செயற்றிறன் வீழ்ச்சியடைந் துள்ளமை கண்டறியப்பட் டுள்ளது.

இதேவேளை, 21 வீத மான அரச நிறுவனங்களது செயற்பாடே திருப்தியடையக் கூடிய வகையில் உள்ளது என்றும் இந்த ஆய்வில் சுட் டிக்காட்டப்பட்டுள்ளது. அரச தொழிற்சங்க சம்மேளனத் தினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஆய்வு அறிக்கையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்க உள்ளதாகவும் சம்மேளனத் தின் செயலாளர் மேலும் தெரி வித்தார். (இ-7)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-13 றக்கா ஒழுங்கை ஆதன இல-17 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் H.O செபமாலை பெண் அருனேலின் என்பவரால் பிரசித்த நொத்தாரிசு T.அரியநாயகம் முகதாவில் நிறைவேறிய 1194/12.04.1975 இலக்க சீதன உறுதி மூலம் சுண்டுக்குளியைச் சேர்ந்த முருகேசு பொன்னுத்துரை பெண் ஈடித் லோகேஸ்வரிக்கு சீதனமாக வழங்கப்பட்டுள்ளது. பிரசித்த நொத்தாரிசு V.மயில்வாகனம் முகதாவில் நிறைவேறிய 3843/28.12.1983 நிபந்தனை அறுதியாக அன்ரனி நிக்கோலஸ் செபமாலை பெண் அருனேலின் மற்றும் முருகேசு பொன்னுத்துரையும் பெண் ஈடித் லோகேஸ்வரியும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த (தற்போது ஐக்கிய இராச்சியத்தில் இருப்பவர்) ஒஸ்ரின் விக்ரர் ஜோகினுக்கு வழங்கியுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு S.வீரகத்திப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 4805/2004.05.08 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதியில் கோவில் வீதி இல.22ஐச் சேர்ந்த முருகேசு பொன் னுத்துரை பெண் ஈடித் லோகேஸ்வரியும் பண்டத்தரிப்பைச் சேர்ந்த ஒஸ்ரின் விக்ரர் ஜோகின் என்பவரிடம் ரூபா 37500/- ஐப் பெற்றுக்கொண்டு ஒரு வருடத்திற்குள் கடனையும் அதற்குரிய வட்டியையும் கொடுப்பதாக நிபந்தனை உறுதி முடித்தாரென்றும் 1986 ஆம் ஆண்டு பெற்றுக்கொண்ட தொகையையும் வட்டியையும் செலுத்தி பிரசித்த நொத்தாரிசு அ. அம்பலவாணர் முகதாவில் 1986 ஆம் ஆண்டு சித்திரை மாதமளவில் தமது பெயரில் அறுதியில் முடிக்கப்பட்டதென்றும் நாட்டில் இருந்த குழப்ப நிலையால் நொத்தாரிசு இணைப்பிரதியை காணிப் பதிவகத்திற்கு கையளிக்கவில்லையென்றும் நொத்தாரிசு இறந்துவிட்டார் என்றும் வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு சி.வீரகத்திப்பிள்ளை முகதாவில் நிறைவேறிய 5202/2004.08.18 இலக்கத்தில் அறுதி உறுதிமூலம் கோவில் வீதி ஒழுங்கை இல.12ஐ சேர்ந்த முருகேசு பொன்னத்துரையும் பெண் ஈடித் லோகேஸ்வரியும் 18, இராசாவின் தோட்ட வீதியைச் சேர்ந்த சண்முகம் கைம்பெண் நாகேஸ்வரியின் சீவிய உரித்துக்கமைவாக சண்முகம் சங்கர் அறுதியாகப் பெற்றுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 14000/2013.10.30 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் 18, இராசாவின் தோட்ட வீதியைச் சேர்ந்த தற்போது வெளிநாட்டில் வசிக்கும் சண்முகம் சங்கரும் பெண் தர்சினியும் சண்முகம் கைம்பெண் நாகேஸ்வரியும் தங்களது அற்றோனித்தத்துவக்காரர் நாகலிங்கம் தனேந்திரன் மூலம் 177/1 ,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசலிங்கம் யோகேஸ்வரனுக்கும் பெண் இராசலட்சுமிக்கும் அறுதியாக விற்றுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு திருமதி ச.இளங்கோவன் முகதாவில் நிறைவேறிய 10607/30.10.2014 ஆம் இலக்க உறுதி மூலம் இதே முகவரியைச் சேர்ந்த இராசலிங்கம் யோகேஸ்வரனுக்கும் பெண் இராசலட்சுமியும் தங்கள் புத்திரி நாகேந்திரசீலன் அபராஜிதன் பெண் சுதர்சினிக்கு சீதனமாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்: வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற் பற்று சுண்டுக்குளி இறை "புது வளவு" இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் MSI அவர்களின் வரைபட இலக்கம் 1605/2013.10.31இன் துண்டு 01 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு 1 குழி 00 ஆகும்.

இதற்கு எல்லை

வடக்கும் கிழக்கும்-மரியதாஸ் பெண் இராஜேஸ்வரியின் ஆதனம்

மேற்கு-போல் பெண் பூமணியின் ஆதனம்

தெற்கு-ஒழுங்கை


தற்போது இவ்வாதனத்தை நாகேந்திரசீலன் அபராஜிதனும் பெண் சுதர்சினியும் தங்களது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங் களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது நாகேந்திரசீலன் அபராஜிதனும் பெண் சுதர்சினியும் என்னும் பெயருக்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர், மாநகரசபை.**

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1053

Search for people, places and things Nagendram Home

### சகானா




### லக்சனா


உலகத்திலுள்ள எல்லோருமே யோக்கியர்கள் தான்...




தூங்கும் போது மட்டும்...

### பிரணவன்

கதவை திற காற்று வரட்டும் என்ற காலம் போய்...




கதவை மூடு ஏசி வெளியே போகுது என்ற காலம் வந்துவிட்டது....

### தர்ஷனா


சூரியனிட்ட இறக்கம் காட்ட சொன்னா....




அது இறங்கி வந்து காட்டுது....

### வினோஜன்

நாக்கிற்கு எலும்புகள் இல்லை...




ஆனால் நம் எலும்புகளை உடைப்பதற்கான முழு பலம் அதற்கு உண்டு...
ஆகவே பார்த்து பேசுங்கள் மக்களே...

### மயூரன்

என்னடி சமைக்கும் போது அவ்ளோ வாசனை வந்திச்சு.... சாப்பிடும் போது ஒண்ணுமேயில்லை...?!!!




"கீழ் வீட்டு ஜன்னல் வழியா வாசனைதான் வரும்... சாப்பாடும் வருமா என்ன? சும்மா மூக்கப் பொத்திக்கிட்டு சாப்பிடுங்க"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# வன்மக் குணம் பொருந்திய சமூகம் உருவாகி வருகிறது

## வடமாகாண முதலமைச்சர் வருத்தம்



மத நம்பிக்கையற்ற வன்மக்குணம் பொருந்திய ஒரு சமூகம் உருவாகி வருகிறது என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், இந் நிலைமை மாற வேண்டுமாயின் எம்முள் புரிந்துணர்வு மேலோங்க சர்வமத ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய நிகழ்வுகள் முன்னெடுக்கப்படுவது சாலச் சிறந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

மதங்களுக்குள் ஒற்றுமையை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கிய சர்வ மத விழா மானிப்பாய் ஸ்ரீ சத்ய சாயி பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் ,

மதங்களின் கருப்பொருளை அறிய முற்பட்டால் அங்கு பாரிய ஒரு ஒற்றுமை இருப்பதை உணரலாம். மதங்கள் அனைத்தும் மனிதர்களை நல்வழிப்படுத்துவதற்கும் ஏனைய உயிரினங்கள் மீது அன்பும், பரிவும் காட்டுவதற்கும் அனைத்து உயிரினங்களையும் மதிக்கவும் அவற்றைப் பாதுகாப்பதற்கும் காப்பதற்குமே தோற்றுவிக்கப்பட்டன.

ஒவ்வொரு மதமும் எங்கெங்கு தோற்றுவிக்கப்பட்டதோ அந்தந்த இடங்களில் வாழ்ந்த மக்களின் பண்பாட்டு கலாசாரங்களை அடியொற்றியதாகவும், அவர்களை நல்வழிப்படுத்தக்கூடிய வகையிலுமே தோற்றுவிக்கப்பட்டன. உதாரணமாக இந்து சமயம் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டதால் இந்து சமயத்தில் கூறப்படுகின்ற சமய அனுட்டானங்கள் இந்திய மக்களுக்கு ஏற்றதாக அமைக்கப்பட்டன. அதேபோன்று பிற சமயங்களும் எந்தெந்த நாடுகளில் தோன்றினவோ அந்தந்த நாடுகளில் கடைப்பிடிக்கப்பட்டு வந்த வணக்க முறைகள், சமூகப் பழக்க வழக்கங்கள் கலாசாரங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகவே அமைந்தன. எல்லா மதங்களும் மக்களை நல்வழிப்படுத்துகின்ற வழிகாட்டிகளாகவே பொது நோக்குடையதாகவே அமைந்திருந்தன.

உலகில் காணப்படுகின்ற பல்வேறு மதங்களில் எந்தவொரு மதத்திலாவது மற்ற உயிரினங்களை துன்புறுத்துங்கள் அல்லது ஏனைய மக்களுக்கு உபத்திரவத்தை அளிக்கக்கூடியவர்களாக வாழுங்கள் என்று போதித்ததாக நாம் அறியவில்லை.

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் இருக்கும் அன்பு, ஜீவ காருண்யம், ஒழுக்கம் ஆகியவற்றை வெளிக்கொண்டு வரவும் அவற்றின் அடிப்படையில் மக்களை வாழச் செய்யவுமே மதங்கள் தோற்றுவிக்கப்பட்டன. ஒவ்வொரு மதமும் மக்களை இறைவனுடன் இணைக்கின்ற ஒரு உறவுப் பாலமாகவே விளங்குகின்றது. பௌத்தம் இறைவனைப் பெயர் சுட்டிக் குறிப்பிடாதுவிடினும் முக்தி நிலையான நிர்வாண நிலை பற்றி பேசுகின்றது.

மதங்களுள் அடிப்படையில் பல ஒற்றுமைகள் இருந்தாலும் நடைமுறையில் வேற்றுமைகள் இருக்கின்றன. ஆனால் நாங்கள் யாவரும் ஒன்றை மட்டும் கவனமாக மனதில் வைத்திருக்க வேண்டும். புத்தர் பௌத்த மதத்தைச் சார்ந்திருக்கவில்லை. இயேசு கிறிஸ்து கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்திருக்கவில்லை. முகமது நபி பிரான் இஸ்லாமிய மதத்தைச் சார்ந்திருக்கவில்லை. இந்த மதங்கள் யாவுமே அவர்களின் காலத்தின் பின்னர் அவர்களின் பக்தர்களால் நிறுவப்பட்டன.

எம்முள் சிலர் தாம் சார்ந்த மதத்தின் மீது கொண்டிருக்கக்கூடிய அதீத பற்றுக் காரணமாகவோ அல்லது ஏனைய மதங்கள் பற்றிய போதிய அறிவு இன்மையாலோ ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களுடன் சண்டை சச்சரவுகளில் ஈடுபடுகின்றார்கள். இது வருத்தத்திற்குரியது.

மனிதம் என்பது எல்லோருக்கும் பொதுவானது. நாம் யாவரும் பிறக்கும் போது மனிதர்களே. எமது மொழி, மதம், கலாசாரம் ஆகியன அதன் பின்னர் எமக்குப் புகட்டப்பட்டனவற்றைச் சார்ந்தவையேயொழிய எம்மைச் சார்ந்தவை அல்ல. அடிப்படையில் நாங்கள் யாவரும் மனிதர்களே. புகட்டப்பட்டவை எம்மைப் புகுந்த வழியில் பயணிக்கச் செய்கின்றன. வரையறுக்கப்பட்ட சிந்தனையுடையவர்களாக நாம் வாழ்ந்து பழக்கப்பட்டு விட்டோம்.

சமயங்களுக்கும் சமய அறிவுரைகளுக்கும் அப்பாற்பட்டதே மனிதம் என்பது. எந்தவித சார்புமற்று எளிய மனிதனால் எவர்மீதும் அன்பு செலுத்த முடியும். ஒரு குழந்தை எவ்வாறு கள்ளங் கபடமற்ற முறையில் எவரையும் பார்த்துச் சிரிக்கின்றதோ அவ்வாறான ஒரு நிலையே சார்ப்பற்ற மனிதனின் நிலை. இந்தக் கள்ளம் கபடமற்ற நிலையை இயேசு கிறிஸ்து நாதரின் வாழ்க்கையில் கண்டார்கள். Christlike demeanour என்றால் இயேசு போன்ற கள்ளம் கபடமற்ற முகபாவம் என்று பொருள்படும். அவ்வாறான முகபாவம் ஏற்பட நாம் எந்தக் கட்டுப்பாட்டுக்கும் உள்ளடங்காதவர்களாக இருக்க வேண்டும். மதமான பேய் எம்மைப் பீடித்து விட்டால் நாம் அந்த முக பாவத்தை இழந்து விடுவோம். அதனால்தான் இயேசு நாதர் கிறிஸ்தவர் அல்ல என்றேன். அவர் ஒரு சுதந்திர புருஷர். வரையறுக்கப்படாத இறை தூதர்.

இன்றைய வாழ்க்கை இயந்திரமயமாக்கப்பட்டு விட்டது. இயற்கையில் இருந்து ஒதுக்கப்பட்டு விட்டோம். இயந்திரமயமாக்கப்பட்ட நகர வாழ்வில் இருந்து சற்று விடுபட்டு கிராமச் சூழ்நிலைக்கு நாம் நகருகின்ற போது பல மாற்றங்களை எம்மால் அவதானிக்க முடிகின்றது. கிராமங்களில் பல்வேறு மதத்தவர்களும் தம்முள் ஐக்கியத்துடன் வாழ்கின்றார்கள். அவர்களின் மனங்கள் மிகத் தூய்மையானவை. மனித மனங்களை நன்கு உணர்ந்தவர்களாக ஏனையவர்களின் மனதைப் புண்படுத்தக் கூடாது என்ற உயரிய சிந்தனை கொண்டு வாழ்கின்றார்கள். நகர்ப்புறத்தில் இவ்வாறான உறவுகளை காண்பது கடினம்.

அவர்களுக்கான நேரமின்மையே அயலவர்களுடனான உறவுகளை பேண முடியாமைக்கான பிரதான காரணமாகும்.

முன்னைய காலங்களில் மக்கள் குறைந்த பொருளீட்டத்தில் நிறைவான வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருந்தார்கள். போதுமான அளவு ஓய்வு நேரங்கள் அவர்களுக்கிருந்தன. அதனால் அவர்கள் வாழ்க்கை பற்றியும் வாழும் முறைமை பற்றியும் அவர்கள் அறிய போதிய அவகாசம் இருந்தது.

பொறுமையாக இருந்து சமய ஆராய்வில் உட்புக இன்று எமது மக்களுக்கு நேரம் இல்லை. விளைவு மத நம்பிக்கையற்ற வன்மக்குணம் பொருந்திய ஒரு சமூகத்தை நாம் உருவாக்கி வருகின்றோம். இந் நிலைமை மாற வேண்டுமாயின் எம்முள் புரிந்துணர்வு மேலோங்க இது போன்ற சர்வமத ஒற்றுமையை வலியுறுத்தக்கூடிய நிகழ்வுகள் நகரங்கள் கிராமங்கள் தோறும் முன்னெடுக்கப்படுவது சாலச் சிறந்ததே.

இளைஞர், யுவதிகளையும் சிறு பிள்ளைகளையும் இவற்றில் ஈடுபடுத்த வேண்டும். இனிமேலாவது சர்வமத இணக்கப்பாட்டைக் கொண்ட ஒரு சமூகத்தை உருவாக்க நாம் அனைவரும் இணைந்து கொண்டு பாடுபடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)



உள்நாட்டலுவல்கள் அமைச்சின் ஏற்பாட்டில் தமிழ், சிங்கள புத்தாண்டு விழா கடந்த வெள்ளிக்கிழமை யாழ். மாவட்டச்செயலகத்தின் முன்பாகவுள்ள பழைய பூங்காவில் இடம்பெற்றது. 2017 ஆம் ஆண்டு சித்திரை புத்தாண்டு விழாவை அனைத்து மாவட்ட மற்றும் பிரதேச செயலக மட்டங்களில் ஒரே நேரத்தில் கொண்டாடுவதற்கு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அந்த வகையில் இடம்பெற்ற நிகழ்வில் சமநிலை ஓட்டம், தண்ணீர் நிரப்புதல், பலூன்ஊதி உடைத்தல், பணிஸ் உண்ணுதல், கயிறு இழுத்தல், வேக நடை, யானைக்கு கண் வைத்தல் மற்றும் பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெற்று வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. (படங்கள்:-பொ.சோபிகா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்குக்கு அவசியமான கடல்நீரை நன்னீராக்கும் திட்டங்கள்

## நாமே நமக்கு எதிரியானால்!





யாழ்ப்பாணம் மழை நீரையும் நிலத்தடி நீரையும் நம்பியிருக்கும் பூமி. ஏன் வடக்கு மாகாணமே ஒரு வானம் பார்த்த பூமிதான். மழை நீரையும் சேகரித்து பயன்படுத்தும் முறையான திட்டங்கள் எதுவும் நம்மிடம் கிடையாது. குளங்களும் அவ்வாறான கட்டமைப்பு வசதிகளுடன் பேணப்படுவதில்லை. அதனால் நிலத்தடி நீரையே யாழ்ப்பாணம் குடிநீர்த் தேவைக்கும் விவசாயத்திற்கும் பயன்படுத்துகிறது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவேகமாக குறைந்து வருகிறது. கொஞ்ச நஞ்ச நிலத்தடி நீரையும் உறிஞ்சி வருகிறோம். அத்துடன் நிலத்தடி நீரையும் உவர் நீர் கபளீகரம் செய்கிறது. அதுமட்டுமா சில காலத்திற்கு முன்னர் சுன்னாகம் கழிவு ஓயில் வடிவில் ஒரு பூதம் வெளிக் கிளம்பியது. "அதாவது நாங்கள் குடிக்கிற தண்ணியில ஓயிலாம்". மக்கள் குடங்களுடன் குடிநீருக்கு அலைந்தார்கள். பண வசதி படைத்தவர்கள் போத்தல்களில் அடைக்கப்பட்ட குடிநீருக்கு மாறினர். அதன் பின்னரும் ஒரு சர்ச்சை குடிநீரில் மலக்கழிவுகளும் கலப்பதாக! அதுவும் எமது பிரதேசத்தின் மலசல கூட அமைப்புகளும் கிணற்று அமைவிடங்களும் அதையும் நம்பவே வைத்தன.

இதெல்லாம் குடிநீர் விநியோக நிறுவனங்களுக்கு கொண்டாட்டமானது.

இந்த நெருக்கடியில் இருந்து விடுபட்டு வடக்கு மாகாணத்தின் நீர்த் தேவையை நிறைவு செய்ய முடியாதா? என அங்கலாய்த்த மக்களுக்கு இரணைமடுவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு நீர் கொண்டு வரப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதிப் பங்களிப்புடன் ரூ.25 ஆயிரம் மில்லியன் (ரூ.2,500 கோடி)செலவிலான திட்டம்.

சாமி இடம் கொடுத்தாலும் பூசாரி இடம் கொடுக்க மறுகிற கதையாக அதுவும் எமது அரசியல் விளையாட்டால் தவற விடப்பட்டது. எமக்கு வருகின்ற திட்டங்களை நாம் ஒவ்வொ

## வர்த்தக உலகம்

ஆர்.எஸ்.கே.முருகதாஸ்

ரு காரணம் கூறி தவறவிட்டுக் கொண்டே இருக்கிறோம்.

இந்த வகையில் தற்போதைய கட்டம் மருதங்கேணி கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு அனுமதி வழங்க முடியாது என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அதாவது கடல் நீரை நன்னீராக்கி மக்கள் பாவனைக்கு கொண்டுவரும் திட்டம்.

பல நாடுகளும் பல வகையான நீர் மூலாதாரங்களில் இருந்து நீரைப் பெற்று தமது மக்களின் தேவைகளை நிறைவு செய்கின்றன. ஆனாலும் நீர்க் கிடைப்பனவு ஒரு பிரச்சினையாகவே பல நாடுகளிலும் தொடர்கிறது. இதற்கு என்னதான் தீர்வு என்று யோசித்தபோது, ஒரே தீர்வாக பெரும்பாலானோர் முன்வைப்பது கடல் நீரை குடிநீராக்கும். அல்லது நன்னீராக்கும் திட்டம்.

ஏன் இந்த பரந்து விரிந்த, கடல் நீரை மக்கள் பாவனைக்கு எடுக்க முடியாது எனற யோசனையில் பிறந்ததே இது.

உடனடியாக பல நாடுகள் களத்தில் இறங்கின. வெற்றியும் கண்டன. கடல் நீர் மக்கள் பாவனைக்குரிய நீராக மாற்றம் பெற்றது.

பல ஐரோப்பிய நாடுகள், அமெரிக்க மற்றும் தென் அமெரிக நாடுகள் இதில் வெற்றிபெற்றன.

இஸ்ரேல் நாட்டில் ஒரு படி மேலே சென்று விவசாயத்துக்கும் கடல் நீரை நன்நீராக்கித்தான் பயன்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

அதைவிட எமக்கு அருகில் உள்ள தமிழ்நாட்டில் கூட கடல் நீரை நன்னீராக்கி பயன்படுத்தி வருகின்றனர்.

சென்னை மீஞ்சூரில் செயல்பட்டு வரும் கடல் நீரை குடிநீராக்கும் திட்டத்தால் தினமும் 25 இலட்சம் பேருக்கு குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு கடல் நீர் சுத்திகரிப்பு நிலையம் சென்னை பெரு நகர குடிநீர் வடிகாலமைப்பு சபை சார்பில் 2007-ம் ஆண்டிலிருந்து வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறது. தற்போது பரவலாக காணப்படும் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் மாற்று திட்டமாக கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் திகழ்கிறது.

இதேபோல் தமிழகத்தில் நரிப்பையூர் கிராமத்தில் கடல் நீரை குடிநீராக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தால் 290 கிராமங்களை சேர்ந்த மக்கள் கடந்த பல ஆண்டுகளாக கடல்நீரை குடிநீராக பயன்படுத்தி வருகின்றனர்.

அதேபோல் தமிழகத்தின் மற்றைய கடலோர மாவட்டங்களிலும் படிப்படியாக இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் முடிந்தது. உலகம் பூராகவும் முடிகிறது. யாழ்ப்பாணத்தில் முடியவில்லை. காரணம் எமது ........... அரசியல்.

கடல்நீரை நன்னீராக்கும் மருதங்கேணி திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்படும் என வடக்கு மாகாண முதலமைச்சர் அறிவித்த உடனேயே,

வடமராட்சி, மருதங்கேணி கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்துக்கு ஒருபோதும் அனுமதி வழங்க முடியாது எனத் த.தே.கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து யாழ்.செயலகத்தில் நடந்த கூட்டமொன்றுக்குப் பின் கருத்துத் தெரிவித்த எம்.ஏ.சுமந்திரன் எம்.பி,

மருதங்கேணி பிரதேசத்தில் கடல் நீரை நன்னீராக்கும் திட்டத்தை முற்றுமுழுதாக கைவிடுமாறு அரச அதிபருக்கு நாம் அறிவித்துள்ளோம் என்றார்.

ஆறுமுகம் திட்டம் அமுல்படுத்துவதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் எமக்கு இல்லை. அதைச் செயற்படுத்த கோரியுள்ளோம். அத்திட்டத்தில் வரும் நீரை குடிநீருக்காக பயன்படுத்த முடியாது. குடாநாட்டு குடிநீர் பிரச்சினையை அதனால் தீர்க்க முடியாது.

எனவே மாற்று வழிகளை ஆராய சொல்லியுள்ளோம். மருதங்கேணி நன்னீராக்கும் திட்டத்தை இடைக்கால தீர்வாக செய்தால்கூட அது அவர்களுடைய வாழ்வாதாரத்தை பாதிக்கும்.

பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்தபோது அனுமதி கொடுக்க முடியாது. தற்போது கொடுக்கப்பட்ட ஆராய்ச்சி தரவின் அடிப்படையில் இந்த இடத்தில் நடைமுறைப்பத்த முடியாது என்ற முடிவுக்கு நாம் வந்துள்ளோம் என சுமந்திரன் எம்.பி மேலும் தெரிவித்தார்.

இரணைமடு குளத்தில் இருந்து நன்னீர் பெறும் திட்டத்தில் தாமதம் மற்றும் எதிர்ப்புக்கள் ஏற்பட்டதன் காரணமாக மருதங்கேணி கடலில் இருந்து நன்னீரை பெறும் திட்டத்தை மேற்கொள்வதற்கு நீர்வழங்கல் வடிகர்லமைப்பு சபையினர் முன்மொழிந்திருந்தனர்.

அதன் அடிப்படையில் குறித்த திட்டத்தினை மேற்கொள்

நெடுந்தீவில்...



வதற்கு பௌதிகவியல் சார் காரணிகளை ஆராய்வதற்கு அமெரிக்காவில் இருந்து நிபுணர் குழுவினரை வரவழைத்து ஒரு மாத காலமாக ஆராய்ச்சியும் மேற்கொள்ளப்பட்டது.

அதன் அடிப்படையில் குறித்த பகுதியில் மேற்குறித்த திட்டத்தினை ஆரம்பிக்க முடியும் என்றும் யாழ்.குடாநாட்டுக்கு இலகுவான முறையிலும் விரைவாகவும் குடிநீரை வழங்க முடியும் என்ற அறிக்கை முடிவின் பிரகாரம் மத்திய அரசால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இத்திட்டத்துக்கு பொதுமக்கள் தரப்பிலும் ஆதரவினை வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திட்டத்தின் தொழிற்பாட்டு நடவடிக்கையின் போது வெளியேற்றப்படும் உப்புச் செறிவானது கணிசமான அளவு அதிகரிப்பதோடு நீர்நிலையின் வெப்பநிலையும் குறிப்பிடத்தக்களவு அதிகரிக்கும். இவ்வாறான செயற்பாடுகளினால் இப்பகுதியில் மீன் அற்ற வெறுமையான கடற்பகுதி நிச்சயம் உருவாவது உள்ளிட்ட பல பிரச்சினைகளை ஏற்படுத்தும் என இத்திட்டத்தை எதிர்ப்போர் தெரிவிக்கின்ற நிலையில்.

கடல் நீரை நன்னீர் ஆக்கும் திட்டத்தால் மீன் வளங்கள் அதிகரிக்குமே தவிர மீன் வளங்கள் அழியாது என இலங்கை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள கடலடி ஆய்வுபிரிவான நராவின் தலைமை அதிகாரி கலாநிதி கே.அருளானந்தனம் தெரிவிக்கின்றார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமராட்சி, மருதங்கேணி தாளையடி கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தால் வடமராட்சி கிழக்கு மீனவர்களிற்கு எந்தவிதமான பாதகங்களும் ஏற்படாது. மீனவர்களிடையே குறித்த திட்டம் தொடர்பாக உள்ள சந்தேகம் தொடர்பில் கடந்த ஒரு வருட காலமாக நடந்த ஆய்வுகளின் பெறுபேறுகளில் இருந்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வறிக்கையில் தாளையடி கடல்நீரை நன்னீராக்கும் திட்டத்தால் வடமராட்சி கிழக்கு மீனவர்களிற்கு எந்தவிதமான பாதகங்களும் ஏற்படாதென தெளிவாக சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளது.

இது பற்றி விளக்கமளிக்ககூட அனுமதியாது. மாவட்ட செயலக கூட்டத்தில் வடமராட்சி கிழக்கு மீன்பிடி விசேட முறைகள் இதனால் பாதிக்கப்படும் என்ற சந்தேகம் மேற்குறித்த ஆராய்ச்சியின் பெறுபேறுகளில் இருந்து உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக திரிபுபடுத்தி கருத்து தெரிவிக்கபட்டிருப்பது மிகுந்த மனவருத்தத்தை ஏற்படுத்தி உள்ளதாக அவர் மேலும் தெவித்தார்.

நெடுந்தீவில் அமைக்கப்பட்டு வெற்றிகண்டிருக்கும் கடல் (உவர்) நீரை நன்னீராக்கும் செயற்றிட்டம் இன்றைய யாழ்.குடாநாடு எதிர்நோக்கும் சுகாதாரமான நீர்ப்பிரச்சினைக்கான திறவுகோலாக அமைந்துள்ளது. இதை ஒரு பரீட்சார்த்த விடயமாக எடுத்து வடக்கில் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு என கடல் நீரை நன்னீராக மாற்றும் நிலையங்களை அமைத்து வடக்கு மாகாணம் நீர்த் தேவையில் தன்னிறைவை அடைய வழி செய்ய வேண்டும்.

இதை விடுத்து நாம் முன்னேறக்கூடாது என்று நினைப்பவர்களை விட ஒருபடி மேலே சென்று நாமே எமக்கு எதிரியாய் இருந்தால், எம் தமிழரை அந்தக் கடவுளாலும் காப்பாற்ற முடியாது போய்விடும்!.

## வடக்கு பொருளாதார மையம் போல்!..பலாலியும்

வடக்குக்கு ஒரு பொருளாதார மையம் அமைத்துத் தருவதாக அறிவித்தது மத்திய அரசு. 200 மில்லியன் செலவில் ஒரு மையம். அதாவது 20 கோடி ரூபாய் செலவில் ஒரு சந்தை. அவ்வளவே!

ஒரு இடத்தைத் தெரிவு செய்து சொல்லுங்கள். நாங்கள் அமைத்து தருகிறோம் என்றது அரசு.

உடனே நாங்கள் தூக்கிக் கட்டிக் கொண்டு கன்னை பிரிந்தோம். ஒருவர் வவுனியா என்றார்! மற்றவர் மாங்குளம் என்றார்! ஓமந்தை என்றோம்! வாக்கெடுப்பும் நடத்தினோம். இத்துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஹரிசன், நீங்கள் ஒருமனதாக ஒரு இடத்தை தெரிவு செய்து கொண்டு வாருங்கள் அமைத்து தருகிறோம் என்றார். (எங்களால் ... முடியாது என தெரிந்துதான் அவ்வாறு கூறினார்களோ தெரியாது!) அவர்கள் எதிர்பார்த்தது போல் அது இன்றுவரை எங்களால் முடியவேயில்லை....

இப்போது ஒரு விடயம் காணி விடுவிப்பு. அதிலும் பலாலியை சுற்றியுள்ள 4000 ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்பட முடியாதாம். ஏனென்றால் பலாலி விமான நிலைய விஸ்தரிப்புக்காம்.

யுத்தம் முடிவடைந்து 8 வருடங்கள் கடந்துவிட்டது. இதுவரை வடக்கில் ஒரு சர்வதேச விமான நிலையம் அமைப்பதற்கான ஒரு முயற்சியையும் எமது தமிழ் அரசியல்வாதிகள் கூட்டமைப்பினர் எடுத்ததாகத் தெரியவில்லை.

இருக்கிற பலாலி விமான நிலையத்தையாவது மேம்படுத்தலாம் என்றால்!

இல்லாததையே பிரச்சினையாக்கும் எங்களுக்கு, அதுவும் ஒரு இடியப்பச் சிக்கலே கிடைத்தால்,

பலாலி விமான நிலையத்தை விஸ்தரிப்பதானால் காணி வேண்டும் என்கிறது ஒரு தரப்பு.

தனியார் காணிகளை சுவீகரிக்க விடமாட்டோம் என்கிறது மறுதரப்பு.

இதற்குள் இது உள்ளூரா? பிராந்தியமா? இல்லை சர்வதேசமா? என முடிவெடுக்கவில்லை என்கிறது இன்னோர் தரப்பு.

இதற்குள் தமிழன் விமானத்தில் சர்வதேசம் பறப்பதா? விடமாட்டோம் என்று நினைக்கிறது மேல்தரப்பு.

இல்லை!இங்கிருந்து ஒரு குருவியைக் கூட பறக்க விட மாட்டோம் என்கிறது எம் தரப்பு! அதுவே எம் தலையெழுத்து...

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,402.99 | 6,535.54 ⇧ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,647.82 | 3,735.83 ⇧ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 11,086.728 |

**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** கொத்மலை ஹோல்டிங்(195.10), புளு டைமன் (0.50), மடுல்சிமா(6.60), கார்டியன் கப்பிரல்(43.00), எச்ஏவி பூட்ஸ்(5.90).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** பிசி ஹவுஸ்(0.10), பிசி பார்மா(0.20), எஸ்எம்பி லீசிங்(0.30), செரன்டிப் லான்ட்(1335.10), பரஹுன்(60.00).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.51 | 154.31 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 191.93 | 198.44 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 160.30 | 166.42 |
| சுவிஸ் பிராங் | 149.69 | 155.63 |
| கனேடிய டொலர் | 110.96 | 115.35 |
| அவுஸ்திரேலிய டொலர் | 112.26 | 117.31 |
| சிங்கப்பூர் டொலர் | 107.22 | 111.14 |
| ஜப்பான் யென் | 1.37 | 1.42 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.35 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.35 | |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## மாம்பழச் சண்டை



ஒரு மாமரத்தில் ஒரு மாங்காய் காய்த்தது.

ஒரு மாங்காய் என்றால், ஒரே ஒரு மாங்காய்தான், இரண்டு மாங்காய் இல்லை, மூன்று மாங்காய் இல்லை, ஒரே ஒரு மாங்காய்!

அந்த மாங்காய் சுற்றிலும் பார்த்தது. தனக்கு யாராவது தோழர்கள் கிடைப்பார்களா என்று தேடியது.

ம்ஹூம், எவ்வளவு தேடினாலும் ஒரு மாங்காயைக் கூடக் காணோம். ஆகவே, அந்த மாங்காய்க்கு மிகவும் வருத்தமாகி விட்டது.

இதைப்பார்த்த ஒரு மாம்பூ அந்த மாங்காய்க்கு ஆறுதல் சொன்னது, 'கவலைப்படாதே, இன்னும் கொஞ்சநாட்களில் நாங்க எல்லோரும் மாங்காயா மாறிடுவோம், அப்ப நாங்கள் எல்லாரும் ஒன்றாக விளையாடலாம்!'

'அப்படியா?' அந்த மாங் காய்க்கு நம்பிக்கை வரவில்லை!

'ஆமா' என்றது அந்த மாம்பூ, 'நீயும் பூவாதான் இருந்தே, நாங்கள் எல்லாரும் ஒன்றாகத்தானே பூத்தோம், உனக்கு என்ன அவ சரமோ, திடீர்ன்னு காயா மாறிட்டே! கொஞ்சநாள் பொறு, நாங்களும் காயாகிடுவோம், அப்புறம் உனக்கு நூற்றுக்கணக்கான நண்பர்கள் கிடைப்பாங்க.'

'சரி' என்று தலையாட்டியது அந்த மாங்காய், நம்பிக்கையோடு காத்திருந்தது.

சில நாள்களில், அந்த மாம்பூக்கள் எல்லாம் காயாக மாறின. மரம்முழுக்கப் பச்சைப்பசேலென்று மாங்காய்கள்.

இதனால், முதல் மாங்காய்க்கு நிறைய தோழர்கள் கிடைத்தார்கள், எல்லாரும் ஒன்றாக விளையாடினார்கள்.

சில நாள் கழித்து, அந்த முதல் மாங்காய்க்கு ஓர் எண்ணம், 'நான் தானே இந்த மரத்தில் முதலாவதாகக் காய்த்தேன்? அப்படியென்றால், நான்தானே இந்த மரத்துக்கு ராஜா?' என்றது.

'ஹாஹா' என்று சிரித்தது இன்னொரு மாங்காய், 'அப்படிப்பார்த்தால் நான்தான் இந்த மரத்தில் முதன்முதலாகப் பூத்தேன், ஆகவே, நான்தான் ராஜா' என்றது.

'நீங்கள் இரண்டு பேரும் ராஜா இல்லை' என்றது இன்னொரு மாங்காய், 'இந்த மரத்திலேயே நான்தான் ரொம்பப் பெரிய மாங்காய், ஆகவே, ராஜா பட்டம் எனக்குதான்!'

'முட்டாள்களே, ராஜா எங்கே இருப்பார்? உயரத்தில்தானே? இந்த மரத்தின் உச்சக் கொப்பில் இருப்பவன் நான், ஆகவே, நான்தான் ராஜா' என்றது இன்னொரு மாங்காய்.

'இந்த மரத்திலேயே அதிக வாசனை கொண்ட காய் நான்தான், ஆகவே, நான் தான் மரத்துக்கு ராஜா' என்றது வேறொரு மாங்காய்.

'என்னைப்போல் சுவையான காய் இந்த மரத்தில் எங்கும் கிடையாது. ஆகவே, நான்தான் ராஜா' என்றது இன்னொரு மாங்காய்.

'சும்மா இருங்கள்' என்று அதட்டியது ஒரு மாம்பழம், 'நீங்களெல்லாம் இன்னும் பழுக்கவில்லை, நான்தான் முதலில் பழுத்தேன், ஆகவே, நான்தான் ராஜா!'

இப்படி இரவும் பகலும் அந்த மரத்திலிருந்த காய்கள் சண்டையிட்டுக்கொண்டிருந்தன.

எல்லாக் காய்களும் ஏதோ ஒரு காரண த்தைச்சொல்லித் தன்னை ராஜா என்று அறிவித்தன. மற்ற காய்கள் அதை ஏற்றுக் கொள்ளவில்லை.

சில நாளில், அந்த மாங் காயகள் எல்லாம் பழுத்துவிட்டன. ஆனால் இப்போதும், யார் ராஜா என்கிற சண்டை தீரவில்லை.

ஒருநாள், அந்த மரத்தின் உரிமையாளர் அங்கே வந்தார். மரத்தின்மேல் ஏறி எல்லா மாம்பழங்களையும் பறித்தார், கூடையில் போட்டு எடுத்து ச்சென்றார்.

கூடையிலிருந்த மாம்பழங்கள், வெறுமையாக இருந்த மாமரத்தைப் பார்த்தன. 'இப் போது அந்த மரத்தில் யாருமே இல்லை, அதற்கு நாம் எப்படி ராஜா ஆக முடியும்?' என்று நினைத்தன.

அப்போது, கூடைக்குக்கீழேயிருந்து ஒரு குரல் கேட்டது, 'நான் தான் இந்தக் கூடையில் முத லில் வந்து விழுந்தேன், நான்தான் இந்தக் கூடைக்கு ராஜா!' என்று கூறியது மாங்காய்..

## 24 04.2017 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1704-ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது செய்திப் பத்திரிகை "த பொஸ்டன்" நாளிதழ் வெளியிடப்பட்டது.
- 1863-கலிபோர்னியாவில் கேயிஸ்வில் என்ற இடத்தில் அமெரிக்க பழங்குடிகள் 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.
- 1877-ஒட்டோமான் பேரரசு மீது ரஷ்யா போரை அறிவித்தது.
- 1908-லூசியானாவில் புயல் காரணமாக 143 பேர் கொல்லப்பட்டனர்.
- 1913-வானளாவிக் கோபுரம் வூல்வேர்த் கோபுரம் நியூயார்க் நகரில் கட்டப்பட்டது.
- 1915-ஆர்மீனிய இனப்படுகொலை கொன்ஸ்டன்டீனபோலில் பல்லாயிரக்கணக்கான ஆர்மேனியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஏனையோர் நாட்டைவிட்டு விரட்டப்பட்டனர்.
- 1955-இந்தோனேசியாவின் பாண்டுங் நகரில் ஆசியா, மற்றும் ஆபிரிக்காவைச் சேர்ந்த 29 அணிசேரா நாடுகளின் உச்சி மாநாடு முடிவுற்றது. குடியேற்றவாதம், இனவெறி, மற்றும் பனிப்போர் ஆகியவற்றைக் கண்டிக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.
- 1961-17ம் நூற்றாண்டைச் சேர்ந்த "வாசா" என்ற சுவீடனின் கப்பல் மீட்டெடுக்கப்பட்டது.
- 1965-டொமினிக்கன் குடியரசில் உள்நாட்டுப் போர் ஆரம்பித்தது.
- 1967-சோயூஸ் 1 விண்கலத்தில் பயணித்த ரஷ்ய வீரர் விளாடிமிர் கொமரோவ் அவரது குதிகுடை திறக்கமுடியாமல் போனதால் உயிரிழந்தார். இவரே விண்வெளிப் பயணமொன்றில் உயிரிழந்த முதலாவது வீரராவார்.
- 1968-மொரீசியஸ் ஐநாவின் உறுப்பு நாடாகியது..
- 1970-முதல் சீனச் செய்மதி டொங் ஃபாங் ஹொங் ஒன்று ஏவப்பட்டது.
- 1970 - காம்பியா பொதுநலவாய அமைப்பினுள் குடியரசாகியது.
- 1981 - முதலாவது ஐபிஎம் தனி மேசைக் கணினி அறிமுகமானது.
- 1990-டிஸ்கவரி விண்ணோடம் ஹபிள் தொலைக் காட்டியை விண்ணுக்குக் கொண்டு சென்றது.
- 1993-இந்தியாவில் பஞ்சாயத்து இராச்சியம் அமைக்கப்பட்டது.
- 1993-லண்டன் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுமையுந்து குண்டுத் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டு 44 பேர் படுகாயமடைந்தனர்.
- 2006-நேபாளத்தில் மன்னருக்கு எதிராக இடம் பெற்ற கலவரங்களை அடுத்து 2002 இல் கலைக்கபட்ட நாடாளுமன்றத்தை மீள அமைக்க மன்னர் உத்தரவிட்டார்.
- 2007-பலாலி இராணுவத்தளம் மீது தமிழீழ விடுதலைப் புலிகளின் விமான்ங்கள் தாக்குதல் நடத்தின.

### பிறப்புகள்

- 1581 -வின்செண்ட் தே பவுல், பிரெஞ்சுப் புனிதர் (இ. 1660)
- 1820-ஜி. யு. போப், தமிழுக்கு சேவை செய்த அமெரிக்கர் (இ. 1908)
- 1880-கிடியொன் சண்டுபெக்கு, சுவீடிய-அமெரிக்கப் பொறியாளர், பல்லிணைவுப் பட்டிகை தயாரித்தவர் (இ. 1954)
- 1889-ஸ்டாஃபோர்ட் கிரிப்ஸ், ஆங்கிலேய அரசியல்வாதி (இ. 1952)
- 1929-ராஜ்குமார், இந்திய நடிகர் (இ. 2006)
- 1934-ஜெயகாந்தன், இந்திய எழுத்தாளர் (இ. 2015)
- 1941-ரிச்சர்ட் ஆல்புரூக், அமெரிக்க ஊடகவியலாளர், தூதுவர் (இ. 2010)
- 1941-ஜான் வில்லியம்சு, அமெரிக்க இசைக்கலைஞர்
- 1947-ரோஜர் கோர்ன்பெர்க், வேதியியலுக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்
- 1951-தம்பிஐயா தேவதாஸ், ஈழத்து எழுத்தாளர்
- 1973-சச்சின் டெண்டுல்கர், இந்தியத் துடுப்பாளர்
- 1987-வருண் தவான், இந்திய நடிகர்

### இறப்புகள்

- 1622 - சிக்மரிங்ஞன் பிதேலிஸ், செருமானியப் புனிதர் (பி. 1577)
- 1731 - டானியல் டீஃபோ, ஆங்கிலேய உளவாளி, ஊடகவியலாளர் (பி. 1660)
- 1960 - மேக்ஸ் வோன் உலோ, இயற்பியலுக்கான நோபல் பரிசு பெற்ற செருமானியர் (பி. 1879)
- 1967 - விளாடிமிர் கொமரோவ், உருசிய விமானி, விண்வெளிவீரர் (பி. 1927)
- 1976 - மார்க் டோபே, அமெரிக்க ஓவியர் (பி. 1890)
- 2011 - சத்திய சாயி பாபா, தென்னிந்திய ஆன்மிக குரு (பி. 1926)

### சிறப்பு நாள்

- காம்பியா - குடியரசு நாள் (1970)
- 2013 - லால்குடி ஜெயராமன், வயலின் மேதை (பி. 1930)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 40 | 60 | 50 | 60 | 70 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 85 | 110 | 110 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 110 | 120 | 120 | 160 | 120 |
| தக்காளி | 100 | 100 | 60 | 100 | 60 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 100 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 100 | 160 | 80 | 120 | 100 | 120 | 100 |
| கரட் | 130 | 100 | 80 | 100 | 100 | 160 | 100 |
| பூசணி | 50 | 100 | 30 | 70 | 60 | 80 | 50 |
| புடோல் | 100 | 100 | 50 | 120 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 50 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 120 | 150 | 160 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 80 | 120 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 120 | 200 | 70 | 160 | 100 | 100 | 160 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 | 80 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 60 | 100 | - | 80 | 80 | 120 | 80 |
| பயற்றங்காய் | 60 | 100 | 80 | 60 | 60 | 60 | 60 |
| லீக்ஸ் | 60 | 100 | 60 | 80 | 80 | 100 | 70 |
| பீற்றூட் | 120 | 100 | 100 | 120 | 120 | 160 | 80 |
| கறிமிளகாய் | 100 | 100 | 90 | 140 | 120 | 200 | 100 |
| முருங்கைக்காய் | 200 | 200 | 200 | 300 | 150 | 300 | 200 |
| போஞ்சி | 150 | 100 | 120 | 200 | 140 | 160 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 40 | 30 | 50 | - | 50 | 60 |
| கீரை - 1பிடி | 20 | 20 | 15 | 40 | - | 30 | 15 |
| தேசிக்காய் | 60 | 40 | 40 | 80 | 50 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 70 | 70 | 60 | 50-60 | 70 |
| இராசவள்ளி | 250 | 300 | 150 | 200 | 200 | 200 | 180 |
| வெங்காயப்பூ | 250 | - | - | - | - | - | - |
| முள்ளங்கி | 50 | - | - | 50 | - | 80 | 80 |
| பொன்னாங்காணி | 30 | - | 10 | 30 | 40 | 30 | 20 |
| வல்லாரை | 10 | - | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | - | - | - | - | 50 | - | - |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டாப் பெண்டாட்டி கைபட்டால் குற்றம். கால்பட்டால் குற்றம்.

– தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நல்லாட்சிக்கு அழுத்தம் கொடுப்பது கூடத் தவறா?

இந்த அரசாங்கத்திற்கு நாங்கள் அதிகம் அழுத்தம் கொடுத்தால் அது மோசமான ஆட்சியாளர்கள் வருவதற்கு இடம் வைத்துவிடும் என பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவருமாகிய மாவை. சேனாதிராசா அவர்கள் கூறியுள்ளார்.

அதேவேளை இந்த அரசாங்கம் எமது பிரச்சினைக்கு தீர்வு காணத்தவறினால் எங்களுக்கு சர்வதேசம் உதவி செய்யும் என்பதும் அவரின் உரையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

நல்லாட்சிக்கு அழுத்தம் கொடுத்தால் அது பொல்லாத ஆட்சியினர் வருவதற்கு வழிவகுக்கும் என்பது மாவை.சேனாதிராசாவின் கருத்து. இக் கருத்து எந்தவகையிலும் அவரது தனிப்பட்ட கருத்தாக இருக்கமுடியாது. மாறாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்தாகவே இதனைக் கொள்ளவேண்டும்.

அப்படியானால் நல்லாட்சி நிலைக்க வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக நாங்கள் எந்த அழுத்தத்தையும் கொடுக்கக்கூடாது என்பது அவரின் கருத்தெனப் பொருள் கொள்ள முடியும்.

இந்த அரசாங்கத்தை நல்லாட்சி என்று நாம் கூறுவது என்பது எந்த வகையிலும் ஏற்புடையதன்று. இந்த அரசாங்கம் நல்லாட்சியா இல்லையா என்பதை அதன் ஆட்சிக்கால நிறைவிலேயே சொல்ல முடியும்.

எனினும் நல்லாட்சி என்ற சொற்பதம் வழக்கத்திற்கு வந்து விட்டது. அதிலும் நல்லாட்சி என்பது யுத்தத்தால் பாதிக்கப்படாதவர்கள் சொல்லமுடியுமேயன்றி யுத்தத்தால் பாதிப்புக்குள்ளானவர்கள் இதனை நல்லாட்சி என்று சொல்வார்களா? என்பதை பொறுத்தும் நல்லாட்சி என்ற பதம் பயன்படுத்தக்கூடியது.

எது எவ்வாறாயினும் தங்கள் சொந்த நிலங்களை படையினரிடம் பறிகொடுத்து விட்டு இரவல் இடங்களில் தங்கள் வாழ்க்கையை கழிப்போர், காணாமல்போன தங்கள் உறவுகளைத் தேடுவோர், சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் அவர்களின் உறவுகள் என யாரும் இவ் அரசை நல்லாட்சி என்று கூற மறுப்பர்.

இதற்கு காரணமும் உண்டு. அதாவது போரினால் தமக்கு ஏற்பட்ட பாதிப்பை நிவர்த்திக்காத அரசை நல்லாட்சி என்று சொல்வதற்கு அவர்கள் ஒருபோது உடன்படமாட்டார்கள் என்பது நியாயமானதே.

எனவே ஜனாதிபதி மைத்திரி, பிரதமர் ரணில் ஆகியோரின் அரசாட்சி நல்லாட்சியா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும். இது ஒருபுறம் இருக்க நல்லாட்சிக்கு இது வரையில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு அழுத்தம் கொடுத்ததான தகவல்கள் எதுவும் இல்லை.

அழுத்தம் கொடுத்தால் நல்லாட்சி போய்விடும் என்றால் அழுத்தம் கொடுக்காமல் தமிழ் மக்கள் தாம் அனுபவிக்கின்ற அவலங்களோடு தொடர்ந்தும் வாழவேண்டும் என்று பொருள் கொள்வதிலும் தவறிருப்பதாக தெரியவில்லை.

எங்களை ஏமாற்ற நினைத்தால் மகிந்த ராஜபக்ஷவிற்கு நேர்ந்த கதிதான் இந்த அரசுக்கும் ஏற்படும் என்பது கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரின் கருத்து.

அதே வேளை இலங்கை அரசு ஏமாற்ற நினைத்தால் சர்வதேசத்துடன் ஒரு உடன்பாட்டிற்கு நாம் வர நேரிடும் என்று மாவை.சேனாதிராசா அவர்கள் புங்குடுதீவில் ஆற்றிய உரை நல்லாட்சிக்கான எச்சரிக்கை.

இவையெல்லாம் சரி. இப்போது நமக்கு ஏற்படுகின்ற சந்தேகம், நாம் அழுத்தம் கொடுத்து பொல்லாத ஆட்சி வந்தால் அவர்களை சர்வதேசம் பார்த்துக்கொள்ளாதா? அவர்கள் ஆட்சிக்கு வந்தால் நீங்கள் சர்வதேசத்துடன் உடன்பாட்டிற்கு வர முடியாதா? என்பது தான்.

அட, நல்லாட்சிக்கான அழுத்தம் என்பது தமிழ் மக்கள் இப்போது நடத்துகின்ற தொடர் போராட்டங்கள் மட்டுமே. இந்தப் போராட்டங்கள் எங்கள் அரசியல் தலைமைக்கு இடைஞ்சலாக இருக்கிறதோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

## சட்ட ஆலோசனைக்கான நடமாடும் சேவை

பொதுமக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சட்ட ஆலோசனைக்கான நடமாடும் சேவை நாளை கரவெட்டி பிரதேச செயலகத்திலும் நாளை மறுதினம் ஊர் காவற்றுறை பிரதேச செயலகத்திலும் காலை 9.30 மணி தொடக்கம், மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியுடன் அக்கெட், சொண்ட் மற்றும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் இணைந்து இலங்கையில் வடக்கு- கிழக்கு மாகாணங்களில் அடிப்படை உரிமைகள் மற்றும் சுதந்திரம் தொடர்பான வலுவூட்டல் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் காணி உரிமை, பணக்கொடுக்கல் வாங்கல், ஆவணங்களை பெறுவதில் உள்ள சிக்கல், குடும்ப பிணக்குகள், மணமுறிவு, அடிப்படை உரிமை மீறல் போன்ற மேலும் பல சட்டப்பிரச்சினைக்கு அனுபவம் வாய்ந்த சட்டத்தரணிகளால் இலவச சட்ட ஆலோசனைகள் வழங்கும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

அந்த வகையில் பருத்தித்துறை, மருதங்கேணி பிரதேச மக்களுக்கு நாளை 25 ஆம் திகதி கரவெட்டி பிரதேச செயலகத்திலும், வேலணை, ஊர்காவற்றுறை மக்களுக்கு நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்திலும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணி வரை சட்ட ஆலோசனைக்கான நடமாடும்சேவை நடைபெறவுள்ளது. இது தொடர்பான மேலதிக விபரங்களை 076 778 8789 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-9-91)

## கோஷ்டி மோதல் இருவர் கைது

துன்னாலைப் பகுதியில் கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர்களில் இருவரை தாம் கைது செய்துள்ளதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 21ஆம் திகதி வெள்ளிக்கிழமை அப்பகுதியில் இரு சாராரிற்கிடையில் கோஷ்டி மோதல் இடம்பெற்றது.

இக்கோஷ்டி மோதலில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி நெல்லியடிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார். இந்நிலையில் நேற்று மாலைவரை இருவர் கைது செய்யப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை இக் கோஷ்டி மோதலின் பிரதான சந்தேக நபர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த போது நேற்று முன்தினம் சனிக்கிழமை அங்கிருந்து தப்பியோடியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## சாஸ்திரங்கள்

✦ தர்மவான்களையும் நியாயவான்களையும் கொலை செய்தல். இந்தப் பாவம் செய்தவர்களை நரகலோகத்தின் இருட்டில் கொடிய பேய்களை விட்டு சூலத்தால் தண்டிக்கப்படுவார்கள்.

-சூலப்புரோதம் (கருடபுராணம்)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**விபரீதமான உணவு எது? அதை உட்கொள்ளலாமா?**

சில உணவுப் பொருட்களை தனித்தனியாக உட்கொண்டாலும் எந்தவிதத்தீங்கும் இருக்காது. சில உணவுப் பொருட்கள் ஒன்றுடன் ஒன்று சேரும் போது விஷத்தன்மையுள்ளவையாக மாறும்.




அவ்வாறான உணவுகளை உண்ணக்கூடாது என்று விதி உள்ளது. அதாவதுபொருந்தாத உணவுப் பொருட்களை ஒன்றாக உண்பதனால் தோஷம் உண்டாகும் என்று அர்த்தம்.

உழுந்து, பால், பயறு, கீரை, போன்றவை சிறந்த உணவுப் பொருட்களாகும். ஆனால் இவற்றில் சர்க்கரை சேர்த்து உபயோகிப்பது நல்லதல்ல.

மீன், தயிர் ஆகியவை சிறந்த உணவுகளாகும். ஆனால் அவை இரண்டையும் சேர்த்து உண்ணுதல் கூடாது.

தேனையும் நெய்யையும் சேர்த்துச்சாப்பிடக்கூடாது.

சூடான சாதத்தையும் தயிரையும் சேர்த்துச் சாப்பிடக்கூடாது. ஆறிய சாதத்தில்தான் தயிரைச் சேர்க்கவேண்டும்.

எந்த உணவையும் அதிகளவில் சேர்த்துக்கொள்வது ஆபத்தாகும். பால் பாயாசம் ருசியானது என்று கருதி வயிறு நிறையக் குடித்தால் வயிற்றுக் கோளாறு ஏற்படும்.

ஒரு உணவை சாப்பிட்டு அது செரிமானம் ஆவதற்கு முன்பே மீண்டும் மீண்டும் உணவுகளைஒருபோதும் உண்ணாமல் இருப்பது தான் நல்லது.

ஏனென்றால்நோய் வந்து அதற்கு வைத்தியம் பார்ப்பதைவிட நோய் வராமல் பார்த்துக் கொள்வதுதான் சாலச்சிறந்தது. (தொடரும்)



திருப்பதி மலைவாழும் வெங்கடேசா

கடவுள் காட்சி தந்த அந்த மனித உருவத்துக்கு நாற்கரங்கள் இருந்தன. வலப்பக்க மார்பில் ஸ்ரீதேவி வாசம் புரிந்து கொண்டிருந்தாள். முதுகில் ஒரு அம்பறாத்தூணி தோளில் ஒரு வில். புஜத்தின் பின்புறத்தில் அம்பும் வில்லும் ஏற்படுத்திய கீறல்கள்.

அந்த அற்புத தரிசனம் நிகழ்ந்து கொண்டிருந்த அதே தருணத்தில் ஆண்டவனின் குரல் அசரீரியாக ஒலித்தது.

நான் இப்போது காட்சியளிப்பது போலவே கல்லுருவாக பூமியில் தோன்றப் போகிறேன். அறியாமையில் உழன்று கிடக்கும் அறிவுக்கும் என்னை உணர்த்தப்போகிறேன். என் உருவுக்கு உயிர் இல்லாததுபோல் தெரியும். ஆனால் என் சக்தி முழுவதையும் அந்த உருவில்தான் உள்ளடக்கி வைத்திருப்பேன். அந்த நிலையிலேயே நிரந்தரமாகப் பூமியில் வாசம் புரியப் போகிறேன். இனிப் பிரம்மனும் மற்ற தேவர்களும் என்னை அங்கே வந்து வழிபடுங்கள். அசரீரிக்குரல் அடங்கியது. நிசப்த வெள்ளம் சூழ்ந்தது. துவாபர யுகம் முடிந்தது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணியிலிருந்து மாலை 5 மணிவரை மன்னார் பிரதேசத்தில் வங்காலை, தோமஸ்புரி, வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம், வங்காலை கடற்படை முகாம், நறுவிலிக்குளம் வைத்திய சாலை ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## அறநெறியே இறை வழிபாடு



நமக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கிறது. அது தான் இயற்கை என்று அனைவரும் ஒத்துக் கொள்வார்கள். அதற்கு மதவாதிகள் கடவுள் என்று பெயர் வைத்துள்ளார்கள். அதேபோல் இந்தப் பிரபஞ்சத்தை எடுத்துக் கொண்டால், இந்த உலகம் ஒரு நாளைக்கு 25 ஆயிரம் மைல் தன்னைத் தானே ஒரு சுற்றுச் சுற்றி வருகிறது. சூரியனைச் சுற்றி வரும் பாதையிலே ஒரு நாளைக்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மைல் ஓடுகிறது.

இதில் ஏதாவது தாமதம் இருக்குமா? இல்லை தடம் மாறுகிறதா? அவ்வளவு நேர் நிர்வாகமாகச் சிறிதும் பிறழாமல் எந்தப் பெரிய ஆற்றல் **(Consciousness)** நிர்வாகம் நடத்துகிறது என்று பார்த்தால், அத்தகைய பெரிய நிர்வாக ஆற்றல் பிரபஞ்சத்தில் எல்லாம் வல்ல இறைவெளியின் அழுத்தம் என்ற உந்து ஆற்றலால் தான் நடக்கிறது. அதே போல் என் உள்ளத்திலே, உடலிலே நடக்கிறதும் அதே தான். உடலிலும் சரி, பிரபஞ்சத்திலும் சரி, அணுவிலும் சரி, அணுவைச் சுற்றிலும் சரி எங்கும் நிறைந்த ஆற்றலாக இருப்பது அந்த எல்லாம் வல்ல இறைவெளி ஒன்றுதான்.

எனவே, அந்த அழுத்தமும், அதன் அறிவும் ஒன்றிணைந்த ஆற்றல் தான் நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலுக்குத் தக்க விளைவுகளைத் தந்து கொண்டே இருக்கிறது. கையைத் தட்டினால் ஒலி வருகிறது. அதே போன்று அதிகமாகச் சாப்பிட்டால் உடனே அசீரணம். அவ்வாறு எந்தச் செயல் செய்தாலும் தவறாகச் செய்தால் அது தவறு என்று உணர்ந்த உடனே துன்பம் உண்டாகிறது. சரியாகச் செய்தால் நாம் வாழ்க்கையைச் சீராக வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்று பொருள். தவறு செய்யாது இருக்க வேண்டும். தவறு செய்தால் உடனே தண்டனை இருக்கிறது என்பதுதான் இறை ஆற்றல் உணர்த்தும் நீதி. அது கூர்தலறம் **(Cause and effect system)** இதைத் தெரிந்து கொள்ள இறையுணர்வு வேண்டும். தெரிந்து கொண்ட பிறகு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு அறநெறி வேண்டும். அறநெறிதான் உண்மையில் இறை வழிபாடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் துயரங்களை மோடி நீக்க வேண்டும்

## பழ.நெடுமாறன் கோரிக்கை

(சென்னை)

இலங்கையில் யுத்தம் முடிவுக்கு வந்து பல ஆண்டுகள் ஆகியும், இன்று வரை தமிழர்கள் சுதந்திரமாக வாழ முடியாமல், அவதிப்பட்டு வருகின்றனர். விரைவில் இலங்கை செல்லவுள்ள பிரதமர் நரேந்திர மோடி, அங்கு வாழும் தமிழர்களை நேரில் சந்தித்து அவர்களின் துயரங்களை கேட்டு, அதை நீக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழர் தேசிய முன்னணித் தலைவர் பழ.நெடுமாறன் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து வைத்துள்ள தமிழக மீனவர்களின் படகுகளை, உடனே விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார்.

டில்லியில் போராட்டம் நடத்தி வரும் தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்தும் இலங்கை கடற்படையினர் சிறை பிடித்து வைத்துள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்கக் கோரியும், இராமேஸ்வரம் பேருந்து நிலையம் முன்பாக நேற்று முன்தினம் சனிக்கிழமை தமிழர் தேசிய முன்னணி சார்பில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தை தொடக்கி வைத்து உரையாற்றிய போதே, பழ.நெடுமாறன் மேற் கண்டவாறு தெரிவித்தார். (இ-7)

# இலங்கை - பாலஸ்தீனம் இடையே இறக்குமதி குறித்து உடன்படிக்கை

(கொழும்பு)

பாலஸ்தீனம் மற்றும் இலங்கைக்கு இடையில் மருந்து இறக்குமதி சம்பந்தமான உடன்படிக்கையில் கையெழுத்திட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அந்த உடன்படிக்கையில் கையெழுத்திட உள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

பாலஸ்தீனின் ஆசியா, ஆபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலியா வலயங்களுக்கான ஒத்துழைப்பு அமைச்சர் மசேன் சாமயாஹ் உள்ளிட்ட பாலஸ்தீன நாட்டின் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்னவை சந்தித்த போது குறித்த உடன்படிக்கை தொடர்பில் பேசப்பட்டுள்ளது.

பாலஸ்தீன நாட்டின் மருந்து தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப் படுகின்ற மருந்துகள் ஐக்கிய அமெரிக்காவினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக பாலஸ்தீன பிரதிநிதிகள் இதன் போது கூறியுள்ளனர்.

குறித்த மருந்து தயாரிப்புகள் குறித்து தேடிப் பார்ப்பதற்காக பாலஸ்தீனுக்கான விஜயம் ஒன்றை மேற்கொள்ளுமாறு சுகாதார அமைச்சருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-7)

# 'என்னைப் பார்த்து பதில் சொல்லுங்கள்'

## கண்டித்த நீதிபதி திணறிய தினகரன்!



உறவுகள்... தொண்டர்கள்... கட்சி... ஆட்சி அதிகாரம் என அனைத்து மட்டங்களிலும் தன் ஆதிக்கத்தை இழந்து விட்டு, நிராயுதபாணியாக நிற்கிறார் டி.டி.வி. தினகரன். இந்த நிலையில், 23 ஆண்டுகளுக்கு முன்பு தினகரன் செய்த சிக்கலான சில வேலைகள், கழுத்தை இறுக்கும் வழக்குகளாக மாறி, அவரைத் துரத்தத் தொடங்கியுள்ளன. இப்போது, நீதிமன்றத்தின் படிக்கட்டுகளில் பரிதாபமாக ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார் தினகரன்.

### 1997 முதல் 2017 வரை...

1991 - 96ம் ஆண்டு காலகட்டத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த பார்க்லேஸ் வங்கியில், ஒரு கோடியே நான்கு இலட்சத்து 93 ஆயிரத்து 313 அமெரிக்க டொலர் வரவு வைக்கப்பட்டது. அந்தத் தொகையை, வெர்ஜின் தீவுகளில் இருக்கும் டிப்பர் இன்வெஸ்ட்மென்ட் என்ற நிறுவனம் செலுத்தி இருந்தது. இந்த நிறுவனம், டி.டி.வி. தினகரனுக்குச் சொந்தமானது என்பது தெரியவந்தது.

இந்தப் பணப் பரிமாற்றத்துக்கு ரிசர்வ் வங்கியிடம் இருந்து முறையான அனுமதி பெறப்படவில்லை. அதையடுத்து, 1994-ம் ஆண்டு, டி.டி.வி.தினகரன் மீது அமுலாக்கத் துறை வழக்குப்பதிவு செய்தது. அந்த விசாரணையின்போது, அயர்லாந்தில் உள்ள வெஸ்ட் பேங்க் லிமிடெட் என்ற நிறுவனத்திலும் தினகரன், 44 இலட்சத்து 37 ஆயிரம் பவுண்டு மதிப்புள்ள தொகையை மாற்றியது கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த வழக்குகள் எழும்பூர் பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்றத்தில் பல ஆண்டுகளாக நடந்துவந்தன. அப்போது இந்த வழக்குகளில் இருந்து தன்னை விடுவிக்கும்படி, தினகரன் எழும்பூர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதை ஏற்று, கடந்த 2015-ம் ஆண்டு தினகரனை விடுவித்தது நீதிமன்றம். ஆனால், இதை எதிர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் அமுலாக்கத் துறை மனுத்தாக்கல் செய்தது. இதில் சென்னை உயர் நீதிமன்றம், 'தினகரனை விடுதலை செய்தது செல்லாது. அவர் மீது இருக்கும் வழக்குகளைத் தொடர்ந்து நடந்த வேண்டும்' என்று உத்தரவிட்டது.

### நிராயுதபாணியாக தினகரன்!

இதனையடுத்து பொருளாதாரக் குற்றவியல் நீதிமன்றத்தில், நீதவான் மலர்மதி முன்பு வழக்கு விசாரணை சூடுபிடித்தது. ஆர்.கே. நகர் தேர்தலைக் காரணம் காட்டி பல நாட்கள் தள்ளிப்போட்டுக் கொண்டு வந்த தினகரன், கடந்த 19ஆம் திகதி காலை நீதிமன்றுக்கு வந்தார். இரட்டை இலைச் சின்னத்தை இழந்து, ஆர்.கே. நகர் தேர்தலை இழந்து, குடும்ப உறவுகளைப் பிரிந்து, கட்சியையும் இழந்து, ஆட்சி அதிகாரத்தில் தனக்கிருந்த பிடியையும் இழந்து, தன் பின்னால் அணிவகுத்துக் கொண்டிருந்த தொண்டர் படையையும் இழந்து, அவர் நீதிமன்றத்துக்கு வந்தார்.

தினகரனின் சட்டத்தரணி' ஜீனசேனன், பி.குமார் மற்றும் அவர்களுடைய ஜூனியர்சட்டத்தரணிகள் உள்ளிட்ட சிலர் மட்டும் உடன் வந்தனர். முற்பகல் 10.35 மணிக்கு நீதவான் மலர்மதி முன்பு விசாரணை தொடங்கியது. அப்போது வாதிட்ட தினகரனின் சட்டத்தரணிகள் ஜீனசேனனும், பி.குமாரும், "இந்த வழக்குத் தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு வழக்கு ஒன்று- நிலுவையில் உள்ளது. இந்த நிலையில், இதை இங்கு அவசரமாக விசாரணை செய்வதற்கு என்ன காரணம்? இதற்கு வேறு ஏதாவது மறைமுக அழுத்தம் கொடுக்கப்படுகிறதா? உயர் நீதிமன்றங்களில் இருந்து இந்த வழக்கை உடனடியாக விசாரிக்க வேண்டும் என்று ஏதாவது நோட்டீஸ் வந்ததா?" என்று கேட்டனர். நீதவான் மலர்மதி, "எனக்கு உள்ள அதிகாரத்தின் அடிப்படையில், சட்டம் சொல்கிறபடி நான் இந்த வழக்கை நடத்துகிறேன். அவ்வளவுதான். மேலும், இங்கு நான்தான் கேள்விகேட்க வேண்டும். என்னை நீங்கள் கேள்வி கேட்கக் கூடாது" என்று கண்டிப்பு காட்டினார். உடனே ஜீனசேனன், "நாங்கள் இது தொடர்பாக சென்னை உயர் நீதிமன்றப் பதிவாளரிடம் முறையீடு செய்வோம்" என்றார். அதைக்கேட்ட நீதவான் மலர்மதி, "அது உங்கள் விருப்பம். நான் இந்த விசாரணையை பிற்பகல் மூன்று மணிக்கு ஒத்தி வைக்கிறேன்" என்றார்.

### "உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?"

மீண்டும் பிற்பகல் மூன்று மணிக்கு வழக்கு, விசாரணைக்கு வந்தது. தினகரன், பத்து நிமிடங்கள் முன்பாகவே நீதிமன்றம் வந்து அமர்ந்திருந்தார். அவருடன் இந்தமுறை மூத்த சட்டத்தரணிகள் பி.குமார், ஜீனசேனன் உள்ளிட்டவர்கள் வரவில்லை. நீதவான் மலர்மதி 3.10 மணிக்கு வந்தார். தினகரனிடம் விசாரணையை ஆரம்பித்த அவர், "உங்கள் பெயர் என்ன, உங்கள் தந்தையார் பெயர் என்ன?" என்ற கேள்விகளை எழுப்பினார். அதற்கு சன்னமான குரலில் பதில் சொன்ன தினகரன், இருள் படிந்த முகத்துடன் காணப்பட்டார். அப்போது குறுக்கிட்ட தினகரனின் சட்டத்தரணி ஒருவர், "இந்த வழக்கை இவ்வளவு நாட்களுக்குப் பிறகு இவ்வளவு அவசரம் காட்டி விசாரிக்க வேண்டிய அவசியம் என்ன" என்று கேட்டார். டென்ஷன் ஆன நீதவான் மலர்மதி, "நீங்கள் யார்? காலையில் இங்கு என்ன நடந்தது என்பது தெரியாமல் இப்போது புதிதாக வந்து வாதம் செய்கிறீர்கள். பலமுறை அவருக்கு நோட்டீஸ் அனுப்பியாகிவிட்டது. அவர் இன்றுதான் ஆஜராகி உள்ளார். அதனால், இதில் மேலும் வாதிட எதுவும் இல்லை" என்று அந்தசட்டத்தரணியை உட்கார வைத்தார்.

அதன்பிறகு தினகரனிடம், "உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா?" என்று கேட்டார். "தெரியும்" என்று தினகரன் பதில் சொன்னார். அதைப் பதிவுசெய்த நீதவான் மலர்மதி, "உங்கள் மீது பதிவு செய்யப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை உங்களுக்குப் புரியவைக்க வேண்டியது என் கடமை. அதனால்தான் உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா என்று கேட்டேன்" என்றவர், "உங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஒத்துக்கொள்கிறீர்களா?" என்று கேட்டு தினகரனைப் பார்த்தார்.

அப்போது, தனது சட்டத்தரணியை தினகரன் பார்த்தார். அதைக் கவனித்த மலர்மதி, "நான் கேள்வி கேட்டால், என்னைப் பார்த்து பதில் சொல்லுங்கள்" என்றார். உடனே தினகரன், "மறுக்கிறேன்" என்று பதில் சொன்னார்.

அதன்பிறகு, "அரசுத் தரப்பு சாட்சிகளை விசாரணை செய்ய வேண்டுமா" என்று தினகரனிடம் மலர்மதி கேட்டார். தினகரன், சரியாகக் கேட்காததுபோல் பாவனை செய்தார். உடனே, மலர்மதி, "நான் சொல்வது சரியாகக் கேட்கவில்லை என்றால், முன்னால் வந்து நில்லுங்கள்" என்றார். அதையடுத்து முன்னால் போன தினகரன், "அரசுத் தரப்பு சாட்சிகளைக் குறுக்கு விசாரணை செய்கிறேன்" என்றார். இதையடுத்து வழக்கை, மே 10 ஆம் திகதி ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

தினகரன் மீதான இன்னொரு வழக்கு மறுநாள் விசாரணைக்கு வந்தது. அது, வரும் 24ஆம் திகதிக்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. தினம் ஒரு நெருக்கடி என தவித்துக்கொண்டிருக்கிறார் தினகரன்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள் ஒரு...

தமிழ் மக்கள் பேரவையின் நிர்வாக சபைக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு திருகோணமலை நகரில் உள்ள விடுதி ஒன்றில் நடைபெற்றிருந்தது.

இதில் பங்கேற்று உரையாற்றும் போதே வடக்கு முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கிழக்கில் சந்தித்தாலும் கிழக்கின் அதிகாரபீடம் அமைந்திருக்கும் திருமலையில் சந்திக்கவில்லையே என்ற குறையை தற்போது நிவர்த்தி செய்துள்ளோம். வடகிழக்கு மாகாணமெங்கிலும் இருந்து வந்திருக்கின்ற எமது பிரதிநிதிகளாகிய உங்கள் ஒவ்வொருவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறி தலைத் தெரிவிக்கின்றோம்.

எமது இயக்கம் ஒருமக்கள் இயக்கம். மக்கள் மனமறிந்த இயக்கம். மயக்கம் எதுவுமின்றி மக்களுக்கு வேண்டியதை வெளிப்படையாக பேசிவருகின்ற ஒரு இயக்கம். எம்முள் பல மதத்தலைவர்கள் உள்ளார்கள், பல தொழில்களைப் புரிபவர்களின் பிரதிநிதிகள் உள்ளார்கள். பல கட்சிகளின் தலைவர்கள் பிரதிநிதிகளாக உள்ளார்கள். இவர்கள் அனைவரும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்தும் கொழும்பில் இருந்தும் நாட்டின் ஏனைய இடங்களில் இருந்தும் வந்து சேர்ந்துள்ளார்கள்.

தமிழ் மக்களின் இன்றைய நிலை அறிந்து அவர்களின் விமோசனத்திற்கு எதைச் செய்யலாம் என்று ஆராய்ந்தறிய இன்று நாமெல்லாம் கூடியுள்ளோம்.

இதுவரை காலமும் எமது சொற்ப கால [illegible]ழ்க்கையில் பலதைச் சாதித்துவிட்டோம் என்ற திருப்தி எமக்குண்டு.

முதலில் காலக்கெடு வைத்து அவசர அவசரமாக அரசியல் தீர்வொன்றுக்கான அடித்தளத்தினை மக்கள் கலந்துரையாடல் மூலமாக ஆக்கி அம்பலப்படுத்தினோம். அரசாங்கத்திடமும் ஆராயுமாறு கையளித்தோம். பின்னர் யாழ் மண்ணில் எதிர்பார்ப்பு எதிர்வு கூறும் விதத்தில் மக்கள் பேரணியை எழுக தமிழ் என்ற நாமத்தில் எழுச்சிமிக்க கூட்டமொன்றை நடத்தினோம்.

அதே போல் மட்டக்களப்பு மண்ணிலும் மக்களை ஒன்றிணைத்து மதிப்பான எழுக தமிழ் பேரணி ஒன்றை நடத்தினோம். இவற்றை பலரும் பல விதமாக சித்திரித்திருந்தாலும் அவற்றின் பயன் ஆக்கபூர்வமாக அமைந்திருந்துள்ளது என்பதில் எமக்கு மனமகிழ்ச்சியே. எமது தமிழ் மக்கட் சகோதரர்களும், [illegible]கள சகோதரர்களும் வெளிநாட்டு உறவினர்களும் அந்நாடுகளின் அரசாங்கப் பிரதிநிதிகளும் ஏன் இந்த எழுக தமிழ என்று [illegible]க்கின் மேல் கைவைக்குமளவிற்கு மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தன. எமது உறுப்பினர்கள், பிரதிநிதிகள், மதத்தலைவர்களின் அயராத உழைப்பே அந்த வெற்றியை ஈட்டித்தந்தது என்று கூறுவதில் பெருமிதம் அடைகின்றேன்.

தற்போதும் எமது குழுக்கள் பல மக்கள் மத்தியில் விழிப்பை உண்டாக்கி பொருளாதாரம், கலை, கலாசாரம் போன்ற விடயங்கள் பற்றி அலசி ஆராய்ந்து ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன.

இந்த நிலையில் தான் நாம் எல்லோரும் தங்குமிடம் ஒன்றில் கூடியுள்ளோம். அடுத்து நாம் செய்யவேண்டியது என்ன, எப்படி, எவ்வாறு அதனைச் செய்யவேண்டும் யாவரை நாம் சிந்திக்க வைக்கவேண்டும் என்ற பல கேள்விகளுக்கு விடை காணவே இங்கு கூடியுள்ளோம்.

இதுவரையான எமது பயணங்களை பட்டியல் இட்டால் - நாம் கட்சி கடந்து, தேர்தல் தேர்வு கடந்து, மாகாண வரையறைகளைக் கடந்து மக்களை எம்பால் ஈர்த்துள்ளோம் என்பது புலனாகின்றது. இவற்றிற்கு எமது புலம் கடந்த மக்களும் கடினமாக உழைத்து [illegible]ளார்கள் என்பதும் எமது பலமே.

அடுத்தது என்ன செய்யவேண்டும் என இங்கு பலரும் பல கருத்துக்களை கூற உள்ளார்கள். அவற்றை இன்று நாம் கலந்தாலோசிப்போம். எமது நடவடிக்கைகள் எவ்வாறான மேலார்ந்த கரிசனைகளை கவனத்தில் எடுத்து நெறி முறைப்படுத்த வேண்டும் என்பது சம்பந்தமாக எனது கருத்துக்கள் சிலவற்றை முன் வைக்க விரும்புகின்றேன்.

அதாவது எமது நடவடிக்கைகள் மூவின மக்கட் கூட்டங்களை நோக்கியதாக அமைய வேண்டும். ஒன்று எம்மக்கள். மற்றையது சிங்கள மக்கள். மூன்றாவது சர்வதேச மக்கள். இவர்கள் மூவருக்கும் எமது கருத்துக்கள் சென்றடைய வேண்டும் என எதிர்பார்க்கின்றேன்.

இதுவரை காலமும் நாம் எமது மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டி வந்துள்ளோம்.

ஆனால் எம்முடன் இந்த நாட்டில் வாழப் போகும் சிங்கள மக்களுக்கு எமது கருத்துக்கள், கரிசனைகள், கவலைகள் சென்றடையவில்லை. இன்று தெற்கில் எமது நிலை அறிய, எமது கலை அறிய, எமது கவலையில் பங்கு கொள்ள ஒரு ஆர்வம் ஏற்பட்டு வருகின்றது. இதுவரை காலமான இன ரீதியான முறுகல்கள எமது பொருளாதாரத்தைச் சீரழித்துள்ளது என்ற ஒரு காரணம் அவர்களுக்கு கவலை அளிக்கின்றது. உண்மை நிலையை ஊக்கமுடன் செயற்பட்டு அறிந்து கொள்ள வேண்டும் என்ற அவாவும் அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மீண்டும் ஒரு ஆயுத போராட்டம் ஆரம்பிக்கப் பட்டால் நாடு கொள்ளாது என்ற அவர்களின் ஆதங்கமும் அவர்களுக்கு இருக்கின்றது. இதனால் அந்த மக்கட் சக்தியுடன் சேர்ந்து சிங்கள மக்களுக்குச் சென்றடையும் விதத்தில் எமது கவலைகளை, கரிசனைகளை, கட்டாய தேவைகளை எடுத்துரைக்க வேண்டிய ஒரு கட்டம் பரிணமித்துள்ளது என்பது எனது கருத்து. சில காலத்திற்கு முன்னர் அன்பர் குசால் பெரேராவுடன் சேர்ந்து நாம் நடத்திய பத்திரிகைப் பேட்டி நன்மை தருவதாக அமைந்திருந்தது.

அவ்வாறான கூட்டங்கள் இனிமேலும் நடைபெறவேண்டும். தமிழ் மக்கள் பேரவை தம்முடன் ஒத்துழைக்கக்கூடிய தென் பகுதியைச் சேர்ந்தவர்களுடன் கூடி எமது கருத்துக்களை சிங்கள மக்கள் முன் வைக்கவேண்டும். ஆனால் மக்கள் எமது கருத்துக்களை அறிய ஆர்வமாக இருந்தாலும் கூட சிங்கள ஊடக உரித்தாளர்களை அல்லது ஆசிரியர்களை கொண்ட ஆங்கில நாளேடுகள் கூட எமது கருத்துக்களை சிங்கள மக்களிடம் சென்றடைய விடமாட்டார்கள் போலத் தெரிகின்றது.

அண்மையில் இலங்கைத் தமிழர் பற்றி அவர்தம் சரித்திரம் பற்றி இழிவாகப் பேசிய ஒரு சிங்கள அன்பருக்கு பதில் கடிதம் ஊடகத்தின் ஊடாக அனுப்பியிருந்தேன். அதனைப் பிரசுரிக்க ஆசிரியர் அனுமதியளிக்கவில்லை என அறிகின்றேன். உண்மைகள் வெளிவராதிருக்க இவர்கள் சிலர் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். ஆகவே தான் தமிழ் மக்களை அண்டி அவர்களின் பிரச்சினைகளை அறியும் அதே நேரம் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கும் அதே நேரம் சிங்கள மகளுக்கும் அறிவுறுத்தல்களை ஆணித்தரமாக எடுத்துரைத்தல் எமக்கு அவசியமாகியுள்ளது.

முன்னர் கட்சிகள் சார்ந்த சில ஒத்துழைப்புக்கள் இருந்து வந்தன. ஆனால் இப்போது கட்சி பேதம் இன்றி சிங்கள மக்கள் யாவருக்கும் எமது கருத்துக்கள் சென்றடைய நாம் வழிவகுக்க வேண்டும்.

ஏன் என்று நீங்கள் கேட்கலாம். இப்பொழுது ஜனநாயக முறையில் எமது உரிமைகளை வென்றெடுக்க உறுதி பூண்டுள்ளோம். ஜனநாயகம் மக்களின் வாக்குப் பலத்தில் தங்கியுள்ளது. அங்குள்ள மக்கள் மனமாற்றத்திற்கு ஆளானால் தான் இங்குள்ள எமது மக்களின் உரிமைகள் வென்றெடுக்கப்படலாம். இது ஜனநாயகத்தின் அவசியப்பாடு.

இங்கு நாங்கள் எமது சிந்தனைகளின் போக்கைச் சிறிது அறிந்து வைத்திருக்க வேண்டும். முஸ்லிம் மக்கள் பண்டமாற்று அடிப்படையிலேயே தமது உரிமைகளைப் பெற்றெடுத்து வருகின்றார்கள். இன்று நாம் உங்களுக்கு இந்த உதவியை அளித்தால் இவ்விவற்றை நீங்கள் எமக்கு தருவீர்களா? என்று கேட்டுப் பெற்று வருகின்றார்கள்.

ஆனால் எமது பாரம்பரிய ஆணவமும் மிடுக்கும் அவ்வாறான பண்டமாற்றத்தை வரவேற்பதில்லை. நாம் இந்த நாட்டின் நிரந்தர குடிமக்கள் இன்னொருவருடன் பண்டமாற்றத்தில் ஈடுபட எமக்குத் தேவை இல்லை எமது உரித்துக்கள் தரப்பட வேண்டியவை. ஆகவே நீங்கள் தந்தே ஆகவேண்டும். என்ற கருத்திலேயே நாம் இதுவரை காலமும் பயணித்து வந்துள்ளோம். இதில் பிழை இல்லை. ஆனால் உண்மை நிலை என்ன என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இவ்வளவு வீராப்பு பேசும் நாங்கள் வாய்ப்புக் கிடைத்தும் வெளிநாடுகளுக்குச் சென்றுவிடுகின்றோம். இங்கு எமக்குப் பக்கபலம் இல்லை. அங்கு பணபலம் இருக்கின்றது. ஆனால் இங்கு பக்குவமாக பேசக்கூடிய பாங்கு எமக்கு இல்லாதிருக்கின்றது. ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள், பேரணிகளுக்கு நான் எதிரானவனல்ல. ஆனால் நாம் செய்யும் ஒவ்வொரு பணியும் உரிய பயன்பாட்டை எமக்கு நல்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். எதற்கும் சிங்கள மக்களுடன் எமக்கு ஒரு கருத்துப் பரிமாற்ற யன்னல் அமைக்கப்பட்டால் அது நன்மை பயக்கும் என்று நம்புகின்றேன்.

அடுத்தது வெளிநாட்டு அரசாங்கங்களுடன் எமது உறவைப் பலப்படுத்த வேண்டும்.

என்னை காண வரும் வெளிநாட்டவர்கள இலங்கை அரசாங்கத்தால் மூளைச் சலவை செய்யப்பட்டே வருகின்றார்கள். அவர்களின் கேள்விகள் அதனைப் பிரதிபலிக்கின்றன. இன்று உத்தியோகபூர்வ ரீதியாக நான் மட்டுமே அவர்களின் எண்ணப்பாடுகளை மாற்ற எத்தனித்து வருகின்றேன். உங்களில் பலர் வெளிநாடுகளின் உயர்ஸ்தானிகர்களுடன் உறவுகள் வைத்து அவற்றினூடாக அவர்களின் எண்ணங்களை மாற்ற எத்தனித்திருக்கக் கூடும்.

எது எவ்வாறிருப்பினும் நாங்கள் எங்கள் கொள்கைகளை, கேள்விகளுக்கான பதில்களை அரசாங்கம் உரைக்கும் உண்மைக்குப் புறம்பான கருத்துக்களுக்கான மாற்றுக் கருத்துக்களை உடனுக்குடன் பன்னாட்டுப் பிரதிநிதிகளுக்கு அறிவிக்க முன்வர வேண்டும்.

தமிழ் மக்கள் பேரவை வெறுமனே உணர்ச்சி பூர்வமான தீவிரபோக்குடைய ஒரு அரசியல் அலகல்ல. எதனையும் ஆறஅமர சிந்தித்து பதிலளிக்கக்கூடிய ஒரு பேரவையே என்று அவர்கள் அடையாளம் காணும் வகையில் எமது நடவடிக்கைகள் சிறக்கவேண்டும்.

அண்மையில் துருக்கி உயர்ஸ்தானிகர் ஒரு சுமுகமான தீர்வு வருவதற்கு நான் இடைஞ்சலாக நடந்து கொள்வதாக குற்றஞ்சாட்டினார். ஏன் சமஷ்டியை முன்னிலைப் படுத்துகின்றீர்கள் என்று கேட்டார். ஏன் வடக்கு கிழக்கை இணைக்கக் கேட்கின்றீர்கள் என்று கேட்டார். சமஷ்டி செக்கோஸ்லா வாக்கியா, யுகோஸ்லாவாக்கியா ஆகிய நாடுகளில் பிரிவினைக்கு இடங்கொடுத்துள்ளது என்றார். பிரிவினை வேண்டுமா என்பது இரு தரப்பு மக்களும் ஒருவரோடு ஒருவர் பழகும் விதத்திலேயே அமைந்துள்ளது என்று கூறி க்யூபெக் கனடாவிலிருந்து பிரிய முன்வரவில்லை. ஸ்கொட்லாண்ட் பிரித்தானியாவில் இருந்து பிரிய முன்வரவில்லை என்று எடுத்துக் காட்டினேன். பழகும் விதத்தில்தான் இவை அமைந்துள்ளன என்றேன். எம்மை அடிமைப்படுத்தும் விதத்தில் சிங்கள மக்கள் நடந்து கொண்டால் நாம் அடிபணிய வேண்டும் அல்லது போராட வேண்டும். எமது பாரம்பரியம் போராடுவதை ஒரு பொருட்டாக கருதவில்லை. ஆனால் அடிபணிய வைப்பதை எம் மக்கள் விரும்ப மாட்டார்கள் என்றேன்.

அத்துடன் ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பகிர்வு ஏன் எமக்கு நன்மை பயக்கப் போவதில்லை என்பது பற்றியும் எடுத்துக் கூறினேன். வடக்கு கிழக்கு இணைப்பை அவசியப்படுத்த இன்று வரை நடந்திருக்கும் சிங்கள உள்ளீடல்களையும் குடியேற்றங்களையும் காரணங் காட்டினேன்.

அவர் எமது கருத்துக்களை மங்கள சமரவீர அவர்களிடம் கொண்டு செல்வார் என்று எதிர்பார்க்கின்றேன். எனவேதான் தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் அறிவை வளர்க்கும் அதே நேரம் சிங்கள மக்களிடையேயும் பன்னாட்டு பிரதிநிதிகள் இடையேயும் எமது கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது அவசியம் என்று கருதுகின்றேன். உங்கள் யாவரதும் கருத்துக்களையும் அறிய ஆவலாய் உள்ளோம் என அவர் தனது உரையில் குறிப்பிட்டிருந்தார். (செ-9)

## வடக்கின் முதலமை...

கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்து வரும் போராட்டத்துக்கு தமிழ் அரசியல் தலைமைகள் யாரும் இதுவரை வந்து ஆதரவு வழங்கவில்லை என தெரிவித்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், உண்மை நிலையை வெளிவராது தடுப்பதற்கு தான் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள் எனவும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் உள்ளிட்ட தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் திருகோணமலை ஆளுநர் அலுவலக முன்றலில் போராட்டத்தினை மேற்கொண்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை நேற்றைய தினம் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். அப்போதே மேற் குறித்த ஆதங்கத்தினை உறவினர்கள் வெளிப்படுத்தியிருந்தனர்.

நாம் எமது உறவுகளை இழந்து அநாதையாக வாழ்கிறோம், எமது வேதனை யாருக்கும் தெரியப்போவதில்லை, குடும்பத்தில் இருவர் மூவர் என பறி கொடுத்துவிட்டு தவிக்கிறோம், பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகிறோம், எமக்கு எமது உறவுகள் வேண்டும் அவர்கள் கிடைத்தால் எமது வாழ்க்கையை நாம் சிறப்புடன் வாழ்வோம்,

நாம் பல நாட்களாக போராட்டங்களை நடத்தி வருகிறோம், இங்குள்ள அரசியல் தலைமைகள் எம்மை வந்து இதுவரை பார்க்கவில்லை. சம்பந்தர் ஐயா இங்கு தான் உள்ளார் ஆனால் எம்மிடம் வந்து ஒருவார்த்தை கூட பேசவில்லை. அத்துடன் எமது போராட்டம் தொடர்பிலான செய்திகளை வெளிக்கொண்டு செல்ல வேண்டாம் எனவும் தடை செய்து வருகிறார்கள் இது எமக்கு மிகவும் வேதனையளிக்கிறது. எம்மை தேடி வந்த உங்களுக்கு நெஞ்சார்ந்த நன்றிகள் என தெரிவித்தனர்.

போராட்டத்தில் ஈடுபடும் மக்களை சந்தித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்களிடத்தில் கருத்து தெரிவிக்கையில்,

வடமாகாணம் முழுவதும் இப்போராட்டம் நடைபெற்று வருகிறது. இது நடக்க வேண்டிய அவசியமும் உள்ளது. காணாமல்போனோர் விபரம் தொடர்பில் ஜனாதிபதிக்கு பல கடிதங்கள் அனுப்பியுள்ளேன் இது குறித்து கலந்துரையாடலை மேற்கொள்ள எதிர்வரும் மே மாதம் 17ஆம் திகதி ஜனாதிபதி அழைத்துள்ளார்.

ஆணைக்குழு முன் மக்கள் சாட்சியம் அளித்து அறிக்கை விரைவில் வெளியிட வேண்டும் என கேட்டுள்ளோம், அதில் அனைவரின சாட்சியம் உள்ளது. அதிலும் மேலதிக விபரம் அறிந்து கொள்ள கூடியதாக இருக்கும்.

பல தாய்மார்கள் தமது உறவுகளை அடையாளப்படுத்தியும் படங்கள் காட்டியுள்ளார்கள் அது தொடர்பிலும் எடுத்துக் கூறியுள்ளோம்.

உங்கள் போராட்டத்தை கைவிடக் கூடாது. இதே போன்று காணி, காணாமல் போனோர், சிறைக்கைதிகள் சம்பந்தமான பல நடவடிக்கை எடுக்கவேண்டியுள்ளது. எனவே மக்கள் போராட்டம் எமக்கு பலமூட்டுவதாக உள்ளது. அரசுக்கு நெருக்குதல் கொடுத்தால் மட்டும் தான் முன்னேற முடியும். வேறு எந்த நடவடிக்கையும் பலிக்காது என முதலமைச்சர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## மக்களின் போராட்டங்க...

சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் வழங்கினார்.

திருகோணமலையில் நேற்று நடைபெற்ற பேரவையின் முதலாவது கூட்டத்தில், தமிழ் மக்கள் நடத்திவரும் போராட்டங்கள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதன்போது தமிழ் மக்கள் முன்னெடுத்து வரும் தொடர் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் பேரவை தனது முழுமையான ஆதரவை வழங்குவதென்றும் இத் தொடர் போராட்டங்களுக்கு தேவையான அனைத்து ஒத்துழைப்புக்களையும் தமிழ் மக்கள் வழங்க வேண்டுமெனக் கோரிக்கை விடுவதெனவும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோரும கலந்து கொண்டனர். (செ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சியில்...

வடமராட்சி பகுதியில் டெங்கின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கொழும்பு சென்று வருபவர்களுக்கு அநேகமாக டெங்கு தொற்றியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

எனவே இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் காய்ச்சல் ஏற்பட்டால் அருகில் உள்ள வைத்தியசாலைக்குச் சென்று இரத்த பரிசோதனையை மேற்கொள்ளுமாறும் அவர் பொதுமக்களைக் கேட்டுள்ளார். (செ-60)

## மனைவியை வெட்டி...

தாக கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

35 வயதான மொஹமட் முஸ்தபா பாத்திமா அரூசியா எனும் பெண்ணே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

குடும்பப் பிரச்சினை காரணமாக இக்கொலை இடம்பெற்றுள்ளதாகவும் சந்தேக நபரான கணவரை கொலைக்கு பயன்படுத்திய கத்தியுடன் கைது செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (செ-11)

## போலி நாணயத்தாள்...

பிபிலை மதுபானம் விற் பனை செய்யும் நிலைய மொன்றில் நபரொருவர் ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்கள் இரண்டைக் கொடுத்து மதுபானங்களைப் பெற முயற்சித்துள்ளார்.

பெற்றுக்கொண்ட ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களில் சந்தேகம் கொண்ட மது பான விற்பனை நிலை பொறுப்பாளர் அது குறித்து பிபிலைப் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்தார்.

உடனடியாக விரைந்த பொலிஸார் மதுபானம் விற்பனை நிலையத்திற்கு வழங்கப்பட்ட இரு ஆயிரம் ரூபாய் நோட்டுக்களை மீட்டதுடன் அந்த நோட்டுக்களை வழங்கிய நபரையும் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட நபரின் மேலாடைபையை சோதனையிட்ட பொலிஸார் மேலும் மூன்று ஆயிரம் ரூபாய் நாணயத்தாள்களையும் கைப்பற்றினர்.

இநநாணயத்தாள்கள் ஐந்தும் ஒரே தொடர் இலக்கங்களைக் கொண்டதாக அமைந்திருந ததினால் இவைகள் போலி நாணயத்தாள்களாகுமென்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிபிலைப் பகுதியின் 36ஆவது மைல் கல்லருகே மரண வீடொன்றில் சூதாட்டங்களில் ஈடுபட்டிருந்த நபரே மதுபானங்களை வாங்குவதற்கு வந்து கைது செய்யப்பட்டிருப்பவராவார்.

தற்போது கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் தீவிர புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த நான்கு தினங்களுக்கு முன் லுணுகம்வெகெர மற்றும் புத்தலை ஆகிய இடங்களில் போலி ஐயாயி ரம் ரூபாய் நோட்டுக்களுடன் கைது செய்யப்பட்ட மூவரும் பிபிலைப் பகுதியைச் சேர்ந்தவர்களாகையினால் நேற்றுமுன்தினம் பிபிலையில் கைது செய்யப்பட்ட நபருக்கும் போலி ஐயாயிரம் ரூபாய் நோட்டுக்களுடன் கைது செய்யப்பட்ட மூவருக்குமிடையில் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்தும் பொலிஸார் ஆராய்ந்து வருகின்றனர். (செ-11)

## எரிபொருள்...

தாங்கிகளை இந்திய நிறுவனத்துக்கு (ஐ.ஓ.ஸி.) வழங்க அரசாங்கம் எடுத்துள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையிலேயே இந்த போராட்டம் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் இன்று நாடு முழுவதும் எரிபொருள் பற்றாக்குறையொன்று நிலவும் அபாயம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## உஷ்ணமான...

கடந்த 24 மணித்தியாலங்களில் அதிகபட்ச வெப்பநிலையாக திருகோணமலையில் 37.7 பாகை செண்டிகிரேட் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

நாட்டிற்கு மேலாக உலர்காற்று வீசுவதால் மழை பெய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவுள்ளதாகவும் வானிலை அவதான நிலையத் தகவல்கள் தெரிவித்துள்ளன. (செ-11)

## கைக்குண்டு...

50ஆவது வீட்டுத்திட்டம் பகுதியிலுள்ளவர், தனது காணிக்கு அருகிலுள்ள காணியின் வேலியை துப்புரவு செய்து கொண்டிருந்த போது பொலித்தீன் பையினால் பொதி செய்யப்பட்ட சக்திமிக்க கைக்குண்டொன்று இருப்பதை அவதானித்துள்ளார்.

இதனையடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் கைக்குண்டினை பார்வையிட்டதுடன் நீதவானின் அனுமதி பெற்று விஷேட அதிரடிப்படையினரின் வெடிகுண்டு செயலிழக்கும் பிரிவினர் மூலம் குண்டினை செயலிழக்கச் செய்யவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ-11)

## 63-வது நாளாக...

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் கவனயீர்ப்பு போராட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை 63ஆவது நாளாகவும் தீர்வின்றி தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடுதலையையும் அவர்கள் தொடர்பான தகவல்களையும் வெளிப்படுத்த வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கடந்த பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி அன்று காலை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட தொடர் கவனயீர்ப்பு போராட்டமே இரவு பகலாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-312)

## சந்தன மரக்குற்றி...

தப்பட்ட "டிங்கி" ரக படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.

மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கைது செய்யப்பட்டவர் சுங்க அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, கடற்படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைய இரண்டு கிலோ கிராம் நிறையுடைய கேரள கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடத்தி வரப்பட்ட கேரள கஞ்சாவை முச்சக்கரவண்டி மூலம் எடுத்துச் சென்ற வேளையிலேயே இவர் கைது செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகள் வத்தளை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## 18 பேருக்கு...

இந்த வருடத்தின் முதல் நான்கு மாத காலப்பகுதிக்குள் ஆபிரிக்கா, இந்தியா போன்ற நாடுகளில் இருந்து வந்த சுற்றுலாப் பயணிகள் இடையே இந்த மலேரியா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை நாளை சர்வதேச மலேரியா தினம் அனுஷ்டிக்கப்படவுள்ள நிலையில்,

அதனை முன்னிட்டு, விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது எனவும் மலேரியா தடுப்பு பிரிவின் பணிப்பாளர் எச்.டி.வி. ஹேரத் தெரிவித்துள்ளார். (செ-11)

## மக்களின் போராட்டங்...

யில் நடைபெற்றது.

பேரவையின் இணைத் தலைவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் பேரவையின் இணைத்தலைவர்களான வைத்திய நிபுணர் பூ.லக்ஷ்மன், த.வசந்தராஜா ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தொடரின் ஆசியுரையை வணக்கத்துக்குரிய

23ஆம் பக்கம் பார்க்க....

## மரண அறிவித்தல்

### திருமதி யோகவதி செல்வரட்ணம்

(ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகவதி செல்வரட்ணம் 22/04/2017 சனிக்கிழமையன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் கதிரேசு சரஸ்வதி - தம்பதிகளின் அன்பு மருமகளும் செல்வரட்ணத்தின் (ஓய்வுபெற்ற அதிபர்) அன்பு மனைவியும் காயத்திரி (Teacher Gate way College, Colombo), கஜேந்திரன் (London), திவாகரன் (Engineer, Colombo) ஆகியோரின் பாசமிகு தாயாரும் லலிதகுமாரின் (Engineer, Colombo) பாசமிகு மாமியாரும், கிருத்திக்கின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற தினைப்புனராணி மற்றும் புகழேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஈஸ்வரியம்மா, கனகநாயகம், கோபாலசிங்கம் மற்றும் நவரட்ணம், பத்மநாதன், செல்வராஜா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் தங்கமலர், காளிதர்சினி, ஜெயநாயகி, கௌசலாதேவி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (24.04.2017) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

48/5. முதலாம் ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி.
யாழ்ப்பாணம்.

(8816)

தகவல்:-
குடும்பத்தினர்
0773405484

விரைவு பொதிகள் சேவை,
விமான பயணச்சீட்டுகள்
விசா சேவைகள்
● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS
V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

VARANAM FM COMPUTER COLLEGE
புதிய பிரிவுக்கான அனுமதி ஆரம்பம்!
(மாணவர்கள் உத்தியோகத்தர்கள் வேலைதேடுவோர்)
Diploma in Microsoft Office (4Months)
Diploma in Desktop Publising (4Months)
Diploma in Computerized Accounting (4Months)
Diploma in Web Multimedia (4Months)
Diploma in Video Editing (4Months)
Diploma in Type Setting (3Months)
Diploma in Computer Hardware (6Months)
Proffessional Diploma in Graphic Designing (6 months)
Spoken English (3Months)
Internet, E.mail, Social Media (2Months)
VARANAM FM COMPUTER COLLEGE
50/12, Hospital Road,Vairavar Kovil Lane,Jaffna.
T.P. 021 221 5465, 077 9086737 (8818)

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை



365 நாட்களும்
72 (Express Service)
(Door to Door Service)
Call 021 222 3536
அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113
DHL aramex FedEx
(C-8230)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.04.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org